

அமரர்

# தம்பிப்பிள்ளை சிற்சபேசலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த



# சிற்சபேச ஜோதி

04.09.2020

உ
சிவமயம்



ஏழாலை, சூராவத்தையைப் பிறப்பிடமாகவும்,
வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# தம்பிப்பிள்ளை சிற்சபேசலிங்கம்

அவர்களின்
31 ஆம் நாள் குறித்த

# சிற்சபேச ஜோதி

## 04.09.2020

உங்கள்

பாதமலர்த் திருவடிக்கு

# சமர்ப்பணம்

ஈரவிழிகளுடன் இதயதின் வலிகளுடன்

எங்கள் நெஞ்சத்து வேதனைகளை

நினைவுகளுடன் சங்கமமாக்கி

ஆதங்கங்களை ஆவணமாக்கி

எங்கள் இல்லத்துச் சுடரின் சுவடுகளில்

தினம் காணிக்கையாக்கி

"சிற்சபேச ஜோதி"

இதழாக உங்கள் கரங்களில்

தவழ விடுகின்றோம்.......!



குடும்பத்தினர்

உ

சிவமயம்

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
# வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்



## அமரர்
# தம்பிப்பிள்ளை சிற்சபேசலிங்கம்


அவர்களின் சிவபதப் பேறு குறித்த


**மலர்வு**
**05.05.1947**

**உதிர்வு**
**05.08.2020**

## *திதி வெண்பா*

**ஆண்டு சர்வாரியில் அமைந்த ஆடி**
**தேய்பிறையாம் தூய துதியைதனில் - மாண்புடனே**
**சீர்மேவு சிற்சபேசலிங்கம் சிறப்போடு**
**பார்விட்டு ஏகினார் பரமபதம்.**





தாய், தந்தையரின்
வழியில் சிவநெறியில்

உ
சிவமயம்



## திருச்சிற்றம் பலம்

## குல தெய்வஸ்துதி

ஐங்கரனே நின்பாதம் போற்றி போற்றி

அரன்புதல்வா நின்பாதம் போற்றி போற்றி

பொங்கரவா தின்பாதம் போற்றி போற்றி

புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி

நின்பாதம் போற்றியென்று ஏத்தும் அன்பர்

வல்வினையகற்றி ரட்சிப்பாய் போற்றி போற்றி

செங்கமலப் பொற்பாதம் போற்றி போற்றி

அன்னமாளிகை இறையே போற்றி போற்றி

தாயே நின்திருவடியே சரணமென யான் பணிந்தேன் -நின்

சேயாமி வேளை தனில் பிழையனைத்தும் பொறுத்தருள்வீர்

நீயே வந்து எமை ஆட்கொண்டு அருள் செய்தருளும்

மாயோனிற் கிளையோய் மாரிமகா தேவியரே.

உ
சிவமயம்

# திருச்சிற்றம் பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே.

## தேவாரம்

விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை
தரித்ததோர் கோல கால பயிரவ னாகி வேழம்
உரித்துமை யஞ்சக் கண்டு வொண்டிரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே

## திருவாசகம்

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர் கைம் மாறே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங்கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பரமனை மதித்திடா பங்கையாசனன்
ஒரு தலை கிள்ளியே ஒழிந்தவானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனை போற்றி செய்குவாம்

## திருப்புகழ்

பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மதன்விடு
போர்க்கார் நீடுங் கட்சர மொடுமன் ...... விடுதூதும்
போற்றாய் நாளுங் கைப்பொரு ளுடையவர்
மேற்றா ளார்தம் பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயங் கற்றமை விழியின ...... ரமுதூறல்
வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நூற்றேய் நூலின் சிற்றிடை யிடர்பட
வாட்டாய் வீசுங் கர்ப்புர ம்ருகமத ...... மகிலாரம்
மாப்பூ ணாரங் கச்சணி முலையினர்
வேட்பூ ணாகங் கெட்டெனை யுனதுமெய்
வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட ...... அருளாயோ
ஆத்தாள் மால்தங் கைச்சிக னிகையுமை
கூத்தா டாநந் தச்சிவை திரிபுரை
யாட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி ...... புவநேசை
ஆக்கா யாவும் பற்றியெ திரிபுற
நோக்கா ஏதுஞ் செற்றவள் திருவிளை
யாட்டா லீசன் பக்கம துறைபவள் ...... பெறுசேயே
ஏத்தா நாளுந் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாப்பா ராயுஞ் சொற்றமி ழருள்தரு ...... முருகோனே
ஏற்போர் தாம்வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்ப்ரபை நெடுமதிள்
யாழ்ப்பா ணாயன் பட்டின மருவிய ...... பெருமாளே.

## வாழ்த்து

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்களெங்கும் பரவுக அறங்களின்ப
நல்குகவுயிர்கட் கெல்லாம் நான் மறைச் சைவ மோங்கி
பல்முக வுலகமெல்லாம் செங்கோல் வாழ்க

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

"வாழ்கவே வாழ்க என் நந்தித் திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத்தான் பாதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞானத்தான் தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே"

-திருமூலர்-

சிற்சபையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீமன் ஆனந்த நடராஜ மூர்த்தி திருவடியை வணங்கி வாழ்த்தி எந்தத் திருவடியை பாடிப்பணிந்து தனது வாழ்க்கையில் தேடி நின்றாரோ அந்தத் தேடி நின்ற சிவனடியான் அமரர் திரு. சிற்சபேசலிங்கம் அவர்களது வாழ்க்கை குறிப்புகளை ஞான பிரசாதமாக அமைந்துள்ள இந்நூலில் உள்ளடக்கி சமர்ப்பிக்கின்றோம்.

## அமரர் திரு. சிற்சபேசலிங்கம்

### தோற்றம்

தந்தையார் அமரர் திரு. பொன்னம்பலம் தம்பிப் பிள்ளை(குடும்பப் பெயர் - அம்பலவாணர்) தாயார் அமரர் திருமதி. பரமேஸ்வரி அம்மை யாருக்கும் 1947ம் ஆண்டு மே மாதம் 5ம் திகதி வைகாசி மாதம் விசாக நட்சத்திர நாளில் இளம் சேயாக பிறந்தார். அவருடன் சகோதர சகோதரிகளாக எழுவருடன் கூடி ஏழாலை தெற்கு சூராவத்தை பதியில் அமைந்துள்ள இல்லம் "அன்னமாளிகை" இல் வாழ்ந்து மகிழ்ந்து அவருடைய தந்தை தாயாருடைய செல்லப்பிள்ளையாக வளர்ந்தார். துாய் தந்தையருடன் அவர்களுடைய இறுதிக்காலம்வரை வாழ்ந்து அவர்களின் கடமையை அவரது பெரும் பணியாக கருதி நிறைவேற்றினார்

### கல்வி

ஆரம்பக்கல்வியை மயிலணி சைவ வித்தியாசாலையிலும் அதனைத் தொடர்ந்து தமிழ்மொழி மற்றும் ஆங்கிலமொழிக் கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியிலும் கற்று தேர்ச்சி பெற்றார். இளம் வயதில் இருந்தே தாய்தந்தையர் வழி சென்று இறை சேவையை நாடி நின்றார். தாயாருடன் கூடி தாயார் வணங்கி வந்த பிள்ளையாருக்கு பூஜை செய்வதில் உதவி புரிந்து வந்தார் இளம் வயது தொட்டு அமரராகும் காலம் வரை மலர் கொய்வதும் தீபமேற்றுவதும் தேவார புராண படனங்கள் செய்வதும் அவரது உளப்பூர்வமான சேவையாக ஆற்றி வந்தார்.

தொழில்

யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் ஒரு உத்தியோகத்தராகவும், சோதிட விலாச புத்தகசாலை மற்றும் சோதிட பரிபாலன மடம் ஆகிய இரு நிலையங்களிலும் பேருளியராகவும் சிறப்பாக கடமையாற்றி அவர்களுடைய பெருமதிப்பை பெற்றிருந்தார். சோதிடக் கலையை சிறப்பாக கற்ற அதனை ஒரு சமூக வேவையாக ஆற்றி வந்தார். எத்தனையோ திருமணங்கள் சிறப்பாக நிறைவேறி அத்திருமண தம்பதிகள் சிறப்புடன் வாழ்வது அவரது சோதிட வித்தகத் தன்மைக்கு சிறந்த சான்றாக அமைகிறது.

சிவாகம தொண்டுகள்

அமரர் சிவாகமத்தை நன்றாக கற்றுணர்ந்தவர். சைவசித்தாந்தத்தில் ஆழ்ந்த அறிவை பெற்றிருந்தவர். இளம் வயதிலேயே சிவ தீட்சை பெற்று ஆசார சீலராக வாழந்தவர். ஏழாலையூர் பண்டிதர் மு.கந்தையாவை ஆசானாக கருதி அவரிடம் ஞானச் செல்வங்களை பெற்றிருந்தார். புராண படனங்களை கோயிலில் ஏற்பாடு செய்து அமரர் புராணம் வாசிக்கவும் சைவ பெரியார் அமரர் ஏழாலையூர் சண்முகவடிவேல் அவருடன் கொல்லங் கலட்டியில் வசிக்கும் சைவப்பெரியார் சின்னத்தம்பி ஈஸ்வரதாசன் பயன் சொல்ல அடியார்கள் அச்சேவையின் பயனாக ஞானப்பேறு பெற்று வந்தார்கள். அவரது தந்தையார் தம்புவத்தை வைரவருடன் ஈடுபாடு கொண்டிருந்தது போல் இவர் வாழ்ந்த இடங்களில் சூராவத்தை வெளி வைரவர் கோவில் பூசை வழிபாடு செய்வது மட்டுமன்றி 1992, 1993, 1994 ஆகிய 3 ஆண்டுகளிலும் கந்தபுராணப் படிப்பை பூர்த்தி செய்து வந்தார். அவரது குல தெய்வமாகிய சூராவத்தை முத்துமாரி அம்மன் கோயிலில் அவரது தாயாருடன் சேர்ந்து சிவதொண்டு செய்து வரும் காலத்தில் அக்கோயிலில் திருவாதவூரடிகள் புராண படிப்பை மார்கழி திருவெம்பாவை காலத்தில் பூர்த்தி செய்தார். ஏழாலை அம்பலவாணேசர் கோவிலில் அவரது தந்தையார் வழி சென்று 8ம் திருவெம்பாவை பூஜையை அண்மைக்காலம் வரையிலும் உபயமாக செய்து வந்தார். சூராவத்தை முத்துமாரியம்மன் கோவிலில் தாயாரின் ஏற்பாட்டில் செய்யப்பட்டு வந்த தீர்த்தோற்சவம் சிறப்பாக நடைபெற காரண கர்த்தாவாக இருந்தார். அமரர், சைவப்பெரியார் சண்முகவடிவேலுடனும் திரு சின்னத்தம்பி ஈஸ்வரதாசனுடனும் சேர்ந்து பல கோவில்களிலும் திருவாசக முற்றோதல் இன்றும் சிறப்பாக நடப்பதற்கு இம்மூவர் ஆற்றிய பங்கு போற்றுவதற் குரியதாகும். சிவயோக சுவாமியாரின் ஆசி பெற்று வளர்ந்து வரும் யாழ்ப்பாண சிவதொண்டன் நிலையத்திலும் பலவகைகளிலும் தொண்டாற்றி வந்தார். வண்ணார்பண்ணை இல்லத்தில் இயற்கை அனர்த்தத்தில்

சேதப்படுத்தப்பட்ட சிறு வைரவர் கோவிலை அழகான மண்டபத்துடன் கூடிய கோவிலாக அமைத்து இரு காலப் பூஜைகளை நித்தியம் செய்து வந்தார். வண்ணார்பண்ணை விசுவேசவிநாயகர் ஆலயத்தில் ஆனிச் சதுர்த்தி உற்சவம் செய்து வந்தார்.

## நூலாசிரியர்

அபரக்கிரியை விளக்கம், சைவ விரதங்களும் நவக்கிரக வழிபாடும் என்ற இரு நூல்களை தொகுத்து சோதிட பரிபாலன சபையின் உதவியுடன் வெளியிட்டார். இத்துடன் சமயக்கட்டுரைகள் பலவற்றை தினக்குரலில் எழுதியமையும் குறிப்பிடத்தக்கது.

## இல்லற வாழ்வு

வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் திரு. திருமதி. சங்கரப்பிள்ளை ஆகியோரது புதல்வியாகிய தவமணி அம்மையார (பயிற்றப்பட்ட ஆசிரியை ஏழாலை சைவசன்மாரிக்க வித்தியாசாலை, யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) அவர்களை 1982ம் ஆண்டு ஜு/ன் மாதம் 9ம் திகதி அமரர் சிற்சபேசலிங்கம் திருமணம் புரிந்து "அன்பும் அறமும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் உடைத்து" என்ற திருக்குறளின் கோட்பாட்டிற்கு அமைய மகிழ்ச்சிகரமான இல்லற வாழ்வை நடாத்தி வந்தார். இத்தம்பதியினர் செய்த இறைபணிகளினதும் புண்ணியங்களினதும் தவப்பேறாக ஒரு பெண் குழந்தை அம்பாளின் பிரசாதமாக இல்லறவாழ்வில் பிறந்து மலர்ந்தது. அம்பாளின் அதிஉயரிய நாமங்களில் ஒன்றான காயத்திரி என்று பெயரிட்டு பாலூட்டி சீராட்டி வளர்த்து வந்து இளமையிலேயே இறைபக்தியை ஊட்டி சமூக சேவை ஆர்வத்தையும் உணர்வாக ஊட்டி கல்வி பயிற்றுத்விதிதார். அதன் பெறுபேறாக அவரது மகள் சிறந்த வைத்தியராக பட்டம் பெற்று மருத்துவ சேவையாற்றி வருகிறார். இதற்கு அமரர் திரு. சிற்சபேசலிங்கம், திருமதி. தவமணி சிற்சபேசலிங்கம் ஆகியோரின் சிவபுண்ணியப் பேறே காரணம் ஆகும்.

நீர்வேலியை பிறப்பிடமாக கொண்ட அமரர் தம்பிஐயா பத்மநாதன், திருமதி தயாவதி பத்மநாதன் ஆகியோரின் ஏக புத்திரனாகிய தனஞ்ஜெயன் அவர்களை அருமை மருமகனாக ஏற்று காயத்திரிக்கு 2013ம் ஆண்டில் திருமணம் நடாத்தி வைத்தனர் தனஞ்ஜெயன் LOLC இல் சிரேஸ்ட கணக்காளராக பணியாற்றுகிறார். அவர்கள் இருவரும் அன்பும் பண்பும்

நிறைந்த இல்லற வாழ்வில் தவப்புதல்வர்களான அபிஜித், ஶ்ரீ கிருஸ்ணிகா, சர்வாங்கன் ஆகியோரை பெற்று மகிழ்ந்தனர். அமரர் தனது பேரப்பிள்ளைகளுடன் விளையாடி அவர்களுடைய மழலை மொழிகளை கேட்பதிலும் அவர்களுடன் விளையாடுவதிலும் மகிழ்ச்சி பெற்றிருந்தார்.

## அமரத்துவம்

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகளின் வாழ்க்கை கோட்பாட்டிற்கேற்ப தனது வாழ்வையும் அமைத்து இறைபணியே தனது வாழ்க்கை என வாழ்ந்து வந்த திரு. சிற்சபேசலிங்கம் அவர்கள் அவரது ஆத்மா பஞ்சபூத சிருக்ஷ்டியாகிய உடலை விட்டு சர்வாரி வருடம்(2020) ஆடித்திங்கள் அபரபட்ச துதியை திதியிலன்று(05.08.2020) "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவர் செல்வர் சிவபுரத்தின் உள்ள சிவனடிக்கீழ் பல்லோரும் ஏத்தப் பணிந்து" என்ற திருவாதவூரடிகளின் சிவயோக கோட்பாட்டிற்கு அமைய இறைநாம ஒலியுடன் நந்தி திருவடி சேர்ந்தார்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**எல்லாம் உனது பதம் எல்லாம் உனது செயல்**
**எல்லாம் உனதருளால் என்றிருந்தால் பொல்லாத**
**மாதுயரம் நீங்கும் மருவும் உனதடிக்கே**
**ஆதரவாய் சொக்கநாதா**

**அமரர் சிற்சபேசலிங்கம்**

தொகுத்து சோதிட பரிபாலன சபையினரால்

வெளியிடப்பட்ட

**"சைவ விரதங்களும் நவக்கிரக வழிபாடும்"**

என நூலின் ஒரு பகுதியை இங்கு

பிரசுரிக்கிறோம்.

# இந்துசமய வழிபாடும் மனிதவாழ்வும்

## இறைதுதி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதி வர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப்பொடியென் னுள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்துள்ளமும் ஓங்கிட
மன்றுளாரடியாரவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம்

பண்டும் இன்றும் என்றும் உள்ளன பதி, பசு, பாசம் என்பனவாம்.
சான்றவராய் திடத்தக்கவாம் பொருள் மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன. வான்றதோர் தொல்பதியாருர்த்தொகை வான்றிகழ்தளையெனன் வகுப்பரன்னவே.

(கந்தபுராணம், காசிபனுப தேசப்படலம் - 3)

பதி- இறைவன். இறைவன் எங்கும் நிறைந்தவர் எல்லாம் அறிபவர். சகல ஜீவராசிகளிலும் நிறைந்திருப்பவர் இறைவன் வைகைநதிக்கரையில் பிட்டுக்கு மண்சுமந்தபோது பாண்டியன் மன்னன் வந்தியின் பங்கு அடைபடாமல் இருக்கக்கண்டு அவருக்கு பிரம்பினால் அடித்தபோது

***தார் மேனின்றிலங்கு புய வழுதி மேலும்***
***தன் மனை மங்கையர் மேலும் அமைச்சர் மேலு***
***மார் மேலுஞ் சென்று பெருஞ் சேனைமேலு***
***மயன் மேலு மான்மேலும் மறவோர் மேலுஞ்***
***தேர்மேல் வெம் பகன் மேலு மதியின் மேலுஞ்***
***சிறந்துள விந்திரன் மேலுந் தேவர்மேலும்***
***பார்மேலுங் கடன் மேலு மரங்கள் மேலும்***
***பட்டதரன் மெய்யிலடிபட்ட போதே***

(திருவாதவூரடிகள் புராணம்)

சகல ஜீவராசிகள் மேலும் அந்த அடிபட்டது. எனவே இறைவன் பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிற்கும் பரிபூரணானந்தர். பசுவாகிய ஆன்மா நல்வினை தீவினைகளின் பயனாக பல பிறவிகளை எடுக்கின்றன. ஓரறிவுடைய பிறவியாக புல், பூண்டு, செடி, கொடி மரங்களாகவும், ஈரறிவுடைய பிறவியாக சங்கு, சிற்பி, மீனினங்களாகவும், மூவறிவுடைய பிறவியாக கறையான், எறும்பு, பாம்பு மற்றும் ஊர்வனவைகளாகவும், நான்கறிவுடைய பிறவியாக வண்டினங்களாகவும், ஐந்தறிவுடைய பிறவியாக பறவைகளும் விலங்கினங்களும் பிறக்கின்றனன. ஆறறிவுடைய பிறவியாக மனிதரும் தேவரும் மாயாமுனிவர்களும் வந்துதிக்கின்றனர். இவற்றுள் ஓரறிவுடைய பிறவியான மரம், செடி, கொடி இடம் விட்டு அசையும் தன்மையற்றது. ஆனால் மற்ற நான்கு பிறவிகளும் இடம்விட்டு அசையும் தன்மையுடையது. ஆனால் நல்லது எது கெட்டது என்று தெரியாமல் தங்களது செயலை செய்கின்றன. ஆறறிவுடைய பிறவியாகிய மனிதப்பிறவி மட்டும் தனது அறிவின் திறமையால் செயல்படுகின்றது.

சகல பிறவிகளிலும் சிறந்த பிறவி மனிதப்பிறவியாகும். மனித உடம்பு பஞ்சபூதங்களால் ஆனது. மனித உடம்பு இரத்தம், தோல், தசை, எலும்பு முதலியவற்றால் உருவானது. இதனை தூலசரீரம் என்று சொல்லப்படும். விருப்பு, வெறுப்பு முதலிய வற்றை செயல்படுத்துவது சூக்கும சரீரமாகும். இறைவன் திருவருளை உணர்த்துவது காரண சரீரமாகும். மனித உடம்பு பஞ்சமய கோசங்களால் உருவானது தூல சரீரத்தில் வெளிப்பகுதி அன்னமயகோசமாகும். அன்னமய கோசத்தை இயக்குவதுபிராணமய கோசமாகும். சூக்கும சரீரத்துக்குரியது மனோமய கோசமாகும். காரண சரீரத்துக்குரியது விஞ்ஞானமயகோசம், ஆனந்தமய கோசம் என இருகோசங்களாகும். விஞ்ஞானமயகோசம் ஞானத்தை கொடுக்கும். ஆனந்தமய கோசம் ஆனந்தத்தை கொடுக்கும். தூல சரீரத்துடன் கூடிய அன்னமய கோசமும் பிராணமய கோசமும் ஒருவன் இறக்கும் போது அழியும் மற்றைய மூன்று கோசங்களும் அழிவதில்லை.

ஆன்மாவானது நல்வினை தீவினையின் பயனாக சுவர்க்க நரகங்களில் இன்பதுன்பங்களை அனுபவித்துவிட்டு விண்ணிலிருந்து மழைவழியாக மண்களில் வந்து காய், கனி, தானியங்களில் கலந்து ஆடவனிடம் சேர்கின்றது. பின் அவ்வான்மா விந்துவடிவில் ஆடவனிடமிருந்து. பெண்ணின் கருவில் சேர்கின்றது. விந்துவின் வடிவம் கண்ணுக்கு புலப்படாதது ஒன்றாகும். அறுகம்புல்லின் நுனியில் உள்ள பனித்துளிபோன்றது.

*அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு*
*ஆகமாயியோர் பாலரூபமாய்*

பெண்ணின் கருவில் சென்றடைந்த ஆன்மா சிசுரூபம் பெற்று ஒன்பது மாதமும் எத்தனையோ இடர்களிலிருந்து தப்பி பத்தாவது மாதம் ஜனனமாகும்.

*அரிது அரிது மானுடராடதல் அரிது*

(ஔவையார்)

***எண்ணரிய பிறவிகளில் மானுடப் பிறவிதா***
***னியாதினும் அரிதரிது காண்***
***இப்பிறவி தப்பினால் இப்பறவி வாய்க்குமோ***
***ஏது வருமோ அறிகிலேன்***

(தாயுமானவர் பாடல் - 7- 4)

பிறவிகளில் மானுடப்பிறவி சிறந்தது அதனினும் சிறந்து வேதாகம புராண இதிகாசம் பயிலும் நாட்டில் பிறப்பது அதனினும்சிறந்தது நாஸ்திகத்தில் பிறக்காமல் இந்து சமயத்தில் பிறப்பது.

***நரர்பயில் தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்***
***விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்க புண்ணியத்தால் ஆகும்***
***தரையினில் கீழை வீட்டுத் தவம் செய் சாதினியில் வந்து***
***பர சமயங்கள் செல்லா பாக்கியம் பண்ணொணாதே.***

(சிவஞானசித்தியார் செய்யுள் -180)

மனிதன் பிறந்து அன்பான தாயின் சிறந்த வளர்ப்பினை பெற்று அறிவான தந்தையின் நன்னெறியை பின்பற்றி அஞ்ஞானத்தை போக்கும் குருவிடம் மெய்ஞானத்தை (தீட்சை) பெற்று குலதெய்வ வழிபாடு செய்து மற்றைய கல்விகளை தொடருதல் வேண்டும். கல்வியை கற்று நல்லதேர்வுகளை பெற்று தகுதியுள்ள தொழிலை மேற்கொள்ளல் வேண்டும் பின் இல்லறமெனும் நல்லறத்தில் பிரவேசிக்கவேண்டும். இல்லற வாழ்வில் மூத்தோரிடத்தில் அன்பு பாராட்டி அவர்களின் ஆசியைப் பெறவேண்டும். அத்துடன் நற்பண்புள்ளவர்களின் உறவுகளையும் வளர்க்கவேண்டும்.

***ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற***
***உத்தமர் உறவு வேண்டும்***
***உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்***
***உறவு கலவாமை வேண்டும்***

(திருவருட்பா இராமலிங்க சுவாமிகள்)

மானுட ஜென்மம் எடுத்தவர்கள் ஸ்ரீமத் பகவத்கீதையில் மூன்றாம் அத்தியாயமான கர்ம யோகத்தில் பதின்மூன்றாவது சுலோகத்திற்கு சுவாமி சிற்பவானந்தரால் விரித்துரைக்கப்பட்ட பஞ்சமகா யக்ஞங்கள் கட்டாயம் செய்யவேண்டும் அவையாவன தேவயக்ஞம், ரிஷியக்ஞம்,

**தேவயக்ஞம் :**

நாம் இயன்றளவு ஆலய வழிபாடு செய்ய வேண்டும் ஆலயவழிபாடு செய்வதினால் அங்கிருந்து வரும் காற்று ஓமப்புகை, தூபப்புகையெல்லாம் மனத்திற்கும் உடலுக்கும் சுகத்தைக் கொடுக்கும். நித்திய நைமித்திக கிரியைகளுக்குத் தேவையான பொருட்கள் கொடுத்துவவேண்டும். சிவாலயத் தொண்டுகள் செய்தல் வேண்டும்

**ரிஷியக்ஞம் :**

மடம் கட்டுதல், மடத்தில் திருமுறை படித்தல், புராணங்கள் ஓதுதல்வேதாந்த சித்தாந்த நூல்கள் படித்தல், இதிகாசங்கள் படித்தல் முன்னோர்களுக்கு குருபூசை வழிபாடுசெய்தல் என்பனவாம்.

**பிதிர்யக்ஞம் :**

பிதாமாதாக்களை வழிபடுதல், அவர்கள் இறந்த பின் தவறாமல் சிராத்தம் செய்தல் வேண்டும். வருடம் தோறும் புரட்டாதி மாதத்தில் வரும் மஹாளயம் கட்டாயம் செய்தல் வேண்டும். (இது பாத்திரபத மாதம் அபரபட்ச பிரதமையில் ஆரம்பித்து அமாவாசையில் மஹாளயம் முடிவுறும்)

**நரயக்ஞம் :**

அன்னசத்திரம் அமைத்தல், அன்னதானம் செய்வித்தல், வித்தியாசாலை கட்டுதல், கல்வியை வளர்த்தல், அனாதையில்லம் அமைத்தல், அவர்களுக்கு உணவு, உடை, கல்வி, வைத்திய வசதிகள் செய்து கொடுத்தல் இலவச வைத்தியசாலை கட்டுதல் என்பனவாம்.

**பூதயக்ஞம் :**

பசு, ஆடு முதலியன வளர்த்தல் வீட்டிற்கு தேவையான மரங்களை வைத்து பாதுகாத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட பஞ்சமகாயக்ஞங்களுள் தங்களால் இயன்றவற்றை செய்யவேண்டும். மேலும் வாழ்க்கையை விரதம் என்னும் வழிபாட்டு முறையினால் இறைவனை வழிபட்டு ஒளிமயமாக்க வேண்டும்.

# விரதம்

இந்து சமய வழிபாட்டு முறைகளில் விரதம் என்னும் கிரியை முறையும் ஒன்றாகும். விரதம் வீட்டில் நடைபெறும் கிரியை வழிபாட்டு முறையாகும். இக்காலத்தில் இக்கிரியை வழிபாட்டு முறை ஆலயத்தில் நடைபெறுகின்றது. விரததினங்களில் மனம், வாக்கு, காயம் மூன்று தூய்மையாக இருத்தல் வேண்டும்.

மனம் மனிதனை நல்ல பாதையிலும் வழிநடத்தும், தீயபாதை யிலும் வழிநடத்தும் நல்ல பாதையில் வழிநடத்திச் செல்வது பொறாமையற்ற அமைதியான தெளிந்த மனம். தீயபாதையில் வாழக்கையை உருண்டோடச் செய்வது பொறாமையும் சினப்பும் கலந்த தெளிவற்ற குழம்பிய மனமாகும்.

"பொருள்களை நினைப்பதில் பற்றுண்டாகிறது பற்று ஆசையாகப் பரிணமிக்கின்றது. ஆசை சினமாக வடிவெடுக்கின்றது."

(62 சாங்கியபோகம் - கீதை)

"சினத்தால் வருவது மனக்குழப்பம். மனக்குழப்பத்தால் வருவது நினைவின்மை. நினைவின்மையால் வருவது புத்திநாசம். புத்திநாசத்தால் மனிதவாழ்வு தீமையில் முற்றுப்பெறுகின்றது."

(63 சாங்கியயோகம் - கீதை)

மனவமைதியில் மனிதனது துன்பங்களனைத்தும் ஒழியும். ஏனெனில் மனவமைதியுடையவனுக்கு அறிவு விரைவில் ஆத்ம சொரூபத்தில் நிலைபெறுகின்றது."

(65 சாங்கியோகம் - கீதை)

எனவே பூரண மனவமைதியுடன் விரதமிருப்பது நன்று. மனமும் வாக்கும் நமது வாழ்க்கையை ஒளிமயமாக்கும்.

***வாயே வாழ்த்துகண்டாய்*** - *திருவங்கமாலை 4ம் திருமுறை*

***தமிழோடிசை பாடல் மறந்தறியேன்*** *- 4ம் திருமுறை*

***இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்*** எனவே வாயால் இறைவன் துதிபாடவேண்டும். தோத்திரம் படிப்பவர்கள் கேட்பவர்களது உள்ளம் உருகும் வண்ணம் பக்தியுடன் சொற்றெளிவுடனும் இயன்றளவு இசையுடனும் கலந்து படித்தல் நன்று எனவே விரதகாலங்களில் அந்த அந்த தெய்வத்துக்குரிய தோத்திரங்களை படித்தல் நன்று.

மனத்தினால் இறைவனை சிந்தித்து வாக்கினால் தோத்திரம் பாடி காயத்தினால் (உடம்பு) ஆலயத்தில் சரியைத்தொண்டு செய்தல் வேண்டும்.

சரியைத் தொண்டுகளாவன திருவலகிடுதல் திருமெழுக்கிடுதல் திருந்தனவனம் அமைத்தல் பத்திர புஷ்பம் எடுத்தல், தோத்திரம் பாடல் ஆனந்த் கூத்தாடல் திருவிளக்கேற்றுதல் சுகந்ததுாபமிடுதல் என்பனவாம்.

*பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி*
*அரும்பொடு மலர்கள் கொண்டாங்கார்வத்தை யுள்ளே வைத்து*
*விரும்பிநல் விளக்குதூபம் விதியினாலிட வல்லார்க்குக்*
*கரும்பினின் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டானாரே.*

(4ம் திருமுறை)

*நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா*
*நித்தலுமெம்பிரானுடைய கோயில் புக்கு*
*புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்*
*சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்*
*அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்*
*ஆரூரா என்றென்றே அலறா நில்லவே*

(6ம் திருமுறை)

## விரதமிருப்பவர்கள் கடைப்பிடிக்கவேண்டியவை

1. விரதமிருப்பவர்கள் சமய தீட்சை கட்டாயம் பெற்றிருத்தல் வேண்டும்
2. விரதமிருப்பவர்கள் விரததினத்திற்கு முதல்நாளும் அடுத்தநாடும் நிலத்தில் தனிமையில் சயனிக்கவேண்டும். தாவரபோசனம் மேற்கொள்ளல் வேண்டும்.
3. விரதமிருப்பவர்கள் விரததினத்தில் அடிக்கடி பல் துலக்கல், சயனித்தல், தாம்பூலம் தரித்தல் புகைப்பிடித்த்ல் லௌதிகம் சம்பந்தமான பாடல் கேட்டல், லௌதிகம் சம்பந்தமான காட்சிகளை பார்த்தல் ஆகிய தவிர்க்கப்படல் வேண்டும்.
4. வயது முதிர்ந்தோர், நோயாளிகள், காப்பவதிகளை பிள்ளைக்கு பால்கொடுக்கும் தாய்மார்கள் மாதச்சுகயீனமுற்றிருக்கும் பெண்கள் விரதமிருத்தல் நன்றல்ல.
5. தங்கள் உடல் நலத்திற்கேற்ற நிலையில் விரத முறைகளை பின்பற்றலாம்.

### விரதங்கள் சேர்ந்து வந்தால் அனுஷ்டிக்க வேண்டிய விரத விதி

1. வெள்ளிக்கிழமை விரதம் இருப்போர் வேறு விரதங்கள் சேர்ந்தால் அவ்விரதங்களையும் சேர்த்து இருக்கலாம். உபவாசம் சேர்ந்தால் உபவாசம் இருக்கவும்.

2. சனிக்கிழமை விரதமிருப்போர் வேறு விரதங்கள் சேர்த்தால் சிரசில் எண்ணெய் தேய்க்காமல் முழுகி விரதங்கள் இருக்கலாம். உபவாசநோன்பாயின் உபவாசம் இருக்கலாம்.

3. சிவராத்திரி தினத்தில் சிரார்த்தம் வருமாயின் சிரார்த்த உணவை முகர்ந்து விட்டு தொடர்ந்து உபவாசம் இருக்கலாம்.

4. தீபாவளி தினத்தில் அமாவாசை விரதம் வருமாயின் உதயத்தில் எண்ணெய் தேய்த்து முழுகி புத்தாடை அணிந்தபின் வழமைபோல் குளித்து அமாவாசை விரதம் நோற்க வேண்டும். சிரார்த்தம் வந்தாலும் இப்படியே செய்தல் வேண்டும். இயலாதவர்கள் ஒருதுளி எண்ணெய் சிரசில் தடவிவிட்டு முழுகிப் புத்தாடை அணிந்து அமாவாசை விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.

5. ஏகாதசி விரதத்தோடு மற்றைய விரதம் சேர்ந்து வந்தால் இரண்டையும் உரியகாலத்தில் அனுஷ்டிக்கவும் மற்றைய விரதம் உபவாசமானால் உபவாசம் அனுஷ்டிக்கவும்.

6. விரதம் பூர்த்தியாகிய பாரணம் செய்யும் தினத்தன்று வேறு விரதம் சேர்த்தால் காலையில் குளித்து பூஜை முடித்துத் தீர்த்தத்தை அருந்தி பின் மறுவிரதத்தை அனுஷ்டிக்கவும்.

*(நன்றி - நமது விரதங்களும் பலன்களும் பக் 157 - 158, நர்மதா பதிப்பகம்)*

## விநாயக விரதம்

நமது இந்து மதக்கிரியைகளில் விநாயக வழிபாடு முதலிடம் பெறுகின்றது. ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேகமானாலும் சரி, மஹோற்சவமானாலும் சரி மற்றும் நித்திய நைமித்திக கிரியைகளிலும் சரி, வீட்டில் நடைபெறும் பூர்வ, அபரக்கிரியைகளிலும் சரி விநாயக வழிபாடின்றி நடைபெறுவதில்லை. மஞ்சள் அல்லது பசுவின் சாணம் ஆகியவற்றினால் உருட்டி பிழித்து அறுகம்புல்லை வைத்து விநாயகரை வழிபாடு செய்வார்கள். பூரண கும்பத்திலும் விநாயகரை ஆவாகனம் செய்து வழிபடுவார்கள்.

கைவேழ முகத்தவனை படைத்தார் போலும்
கயாசுரனை யவனாற் கொல்வித்தார் போலும்
செய்வேள்வி தக்கனை முன் சிதைத்தார் போலும்
திசைமுகன்றன் சிரமென்று சிதைத்தார் போலும்
மெய் வேள்வி மூர்த்தி தலை யறுத்தார் போலும்
வியன் வேள்வி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி யாறங்க மானார் போலும்
அடியேனை யாளுடைய அடிகள் தாமே.

*(6ம் திருமுறை)*

முன்னொரு காலத்தில் வசிட்ட முனிவர் மரபிலுதித்த மாகத முனிவருக்கும் விபுதை என்னும் பெண்ணுக்கு கஜமுகாசுரன் என்னும் அசுரன் பிறந்தான். அவன் குலகுருவான சுக்கிராச்சாரியின் உபதேசப்படி சிவனை நினைத்து கடும் தவமிருந்து அரிய பெரிய வரங்களைப் பெற்றான். சிவனிடம் பெற்ற வரத்தினால் தேவர்களை துன்புறுத்திவந்தான் அத்துடன் தினமும் நெற்றியில் இரண்டு கைகளினாலும் மூன்று முறை குட்டி இரு செவிகளையும் மாறிப்பிடித்து மூன்று தரம் தாழ்ந்து எழும்பவேண்டும். தேவர்கள் இவனால் வரும் கஷ்டங்களை தாங்க முடியாமல் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமானும் தேவர்களது கஷ்டங்களை நீக்குவதற்கு திருவுளங்கொண்டார்.

சிவபெருமான் தேவர்களது கஷ்டங்களை நீக்குவதன் பொருட்டு உமாதேவியாருடன் திருக்கைலாச மலையில் இருக்கும் மந்திர சித்திர மண்டபத்திற்கு விஜயம் செய்தார். அவர்கள் இருவரும் அங்குள்ள ஓவியங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கையில் சமஷ்டிப் பிரணவம் வியஷ்டி பிரணவம் ஆகிய இரண்டு பிரணவங்களும் ஒளிப்பிளம்பாக இருக்க சிவனும் உமையும் அருட்கண் நோக்க இரு பிரணவங்களும் ஒன்றிணையும் பொழுது

அக்கணத் தாயிடை யைங்கரத் தவணருண்
முக்கணால் வாயினான் மும்மதத் தாறுபாய்
மைக்கருங் களிறெனு மாமுகதவன் மதிச்
செக்கர்வார் சடைனோர் சிறுவன் வந்தருளினான்.

*(கந்தபுராணம் - கயமுகனுற்பத்தி படலம் - 148)*

விநாயகப்பெருமான் ஆவணி மாதம் (பாத்திர பத மாதம்) பூர்வ பட்ச சதுர்த்தி தினத்தில் அவதரித்தார். விநாயகர் சிவன் உமையை வணங்கிய பின் மூவரும் கைலைக்கு ஏறினார்கள். விநாயகப் பெருமான் சிவபெருமானின் ஆணையை ஏற்று கஜமுகாசுரனுடன் போரிட்டு அவனை மூஷிகமாக்கி தனது வாகனமாக்கிக் கொண்டார். விநாயகப் பெருமானின் அற்புதச் செயல்களை விநாயக புராணத்தில் காணலாம்.

விநாயகர் பெருமான் பிரமாவின் புத்திரிகளான சித்தி, புத்தியாகிய இருவரையும் மரீசி முனிவரின் புதல்வியான வல்லபையையும் விஷ்ணுவின் புதல்விகளான மோதை, பிரமோதை, சுமதை, சுந்தரி, மனோரமை, மங்கலை, மோகிணி, காந்தை, சாருஹாசை, சுமத்திமை, நந்தினி, காகதை ஆகிய பன்னிருவரையும் திருமணம் செய்தார்.

விநாயகப்பெருமானுக்கு இருபுத்திரர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவர் சித்தியின் புத்திரன் சுபன், மற்றையவர் புத்தியின் புத்திரன் லாபன் என்பவர் ஆவார்.

விநாயகப் பெருமானின் விரதம் நோற்று பலன் பெற்றோர் பலர் உருத்திரன் விநாயகப் பெருமானை வழிபட்டு விருத்திராசுரனை வென்றான். அகலிகை வழிபாடாற்றி சாபம் நீங்க கௌதமரை அடைந்தாள். தமயந்தி

நளனையடைந்தாள் இராமபிரான் இராவணனை வென்று சீதையை சிறைமீட்டார். இலக்கணசுந்தரி விக்கிரமாதித்த மன்னனை அடைந்தார். பஞ்சபாண்டவர் கௌரவரை வென்று அரசை மீட்டனர். இவர்களுடன் இன்னும் பலர் விநாயகப் பெருமானின் விரதம் நோற்று அவரின் திருவருளைப் பெற்றனர்.

விநாயகப் பெருமானின் விரதம் நான்கு வகைப்படும் அவையாவன சுக்கிரவார விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயக ஷஷ்டி விரதம், சங்கடஹரசதுர்த்தி விரதம் என்பனவாம்.

## சுக்கிரவார விரதம் (வெள்ளிக்கிழமை விரதம்)

வைகாசி மாதம் பூர்வபட்ச வெள்ளிக்கிழமை முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானை அனுட்டிக்கும் விரதமாகும். இதில் பழம் முதலிய உட்கொள்ளல் வேண்டும் இயலாதவர்கள் பலகாரம் உண்ணலாம். அதுவும் முடியாதவர்கள் பகலில் ஒரு பொழுது உண்ணலாம்.

## விநாயக சதுர்த்தி விரதம்

சிங்கமாமாதம் வந்த தெரிசத்தின் பின்பு சேருந்
திங்களினாலாம் பக்கஞ்சிந்துர முகனோன் பாரு
மங்கையே பூசைசெய்யின் மனநினைவா குந்திங்க
டங்கிய கிரணங்காணிற்றருந்துயர் சாற்றலாமோ.

*(சரசோதிமாலை)*

இவ்விரதம் ஆவணி மாதம் சந்திர தரிசனத்தின் பின் (வளர்பிறையில்) சதுர்த்தி தினத்தில் விநாயகப் பெருமானை சிந்தித்து அனுட்டிக்கும் விரதமாகும். இத்தினத்தில் சந்திரனை பார்த்தலாகாது இவ்விரதம் சிலசமயங்களில் ஆவணி மாதாந்தத்தில் அமாவாசை வந்தால் புரட்டாதி மாதத்திலும் (பார்த்திரபத மாதம்) வருவதுண்டு. எனவே இவ்விரதம் புரட்டாதி மாதத்தில் வந்தால் விரதம் அனுட்டிப்பவர்கள் குழம்பவேண்டாம். விரதம் அனுஷ்டியாதவர்கள் அனுஷ்டிப்பவர்களை குழப்ப வேண்டாம். இதேபோல் மற்றைய விரதங்களும் மாறுபாட்டுடன் வந்தால் குழப்ப வேண்டாம், குதம்ப வேண்டாம்.

இவ்விரத தினத்தில் பகலில் ஒரு பொழுதுண்டு இரவில் பழம் பலகாரம் ஏதும் உண்ணலாம். சிலர் ஆலய தரிசனம் முடித்து இரவில் உணவு உண்பவர்களும் உண்டு தெய்வத்திற்கு நிவேதித்த நிவேதனங்களை உண்பதினால் மனிதன் பாவமோசனம் பெறுகின்றான். என பகவத் கீதையின் மூன்றாம் அத்தியாயமான கருமயோகத்தில் பதின்மூன்றாவது சுலோகம் இயம்புகின்றது. விநாயகப் பெருமானுக்கு பிரியமான நைவேத்தியம் முப்பழம் (முப்பழம் நுகரும் மூஷிக வாகனா) அவல், பொரி, கொழுக்கட்டை என்பனவாம் (கொழுக்கட்டையை முதன் முதலில் விநாயகப் பெருமானும் நிவேதித்தவர் வசிட்ட முனிவரின் மனைவி அருந்ததியாவர்) விநாயகப் பிரியமான பத்திரபுட்பம், அறுகு, வன்னி, வெள்ளெருக்கு என்பனவாம்.

**விநாயக ஷஷ்டி விரதம்**

கருது கார்த்திகைக் கார்த்திகை சென்றபி
னிருப தோடொரு நாளினி லெய்திய
பொருவில் சட்டி புகழ் சதயந்தனை
வரு விநாயக நோன்பென வாழ்த்துவார்

(சரசோதிமாலை)

இவ்விரதம் கார்த்திகை மாதம் அபரபட்ச பிரதமை முதல் மார்கழி மாதம் பூர்வ பட்ச ஷஷ்டியீறாக இருபத்தொரு நாளும் விநாயக்கடவுளை சிந்தித்து அனுட்டிக்கும் விரதமாகும். இதில் இருபத்தோரிழையாலாகிய காப்பை ஆடவர்கள் வலக்கையிலும், பெண்கள் இடக்கையிலும் கட்டிக்கொண்டு முதலிருபது நாளும் ஒரு பொழுதுண்டு இறுதிநாள் உபவாசம் செய்தல் வேண்டும் இக்காலங்களில் விநாயக புராணம் சுன்னாகம் அ. வரதபண்டிதர் இயற்றிய பிள்ளையார் கதை ஆகியன ஆலயங்களில் படிப்பார்கள் விநாயக ஷஷ்டிக்கு முதல் தினம் கஜமுகா சங்காரம் நடைபெறும். சில ஆலயங்களில் அன்றும் நடைபெறுவதுண்டு. இத்தினத்தில் பிள்ளையார் கதை என்னும் நூலில் கூறப்பட்ட நைவேத்தியங்களை நிவேதித்து கூறப்பட்ட பத்திர புஷ்பங்களினால் அர்ச்சிப்பார்கள்.

உ
கணபதி துணை



# பிள்ளையார் கதை

## காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானொரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

## சப்பாணி

எள்ளுப் பொரிதேன் அவல்அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும், வாழைப்பழமும், பலாப்பழமும்
வெள்ளைப்பாலும். மோதகமும் விரும்பிப்படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியேகொட்டி அருள்க சப்பாணி.

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய் வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடைஉடை யாளே மூவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவிந்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயல்இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுதும் எனக்கருள் செய்துஎன்
சித்தந் தனில்நீ இருந்து திருவருள் செய்திடுவாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால தெளிவுறச் செப்பினன்
அன்னத்திற் பிறவில் அரில்தபத் திரட்டித்
தொன்னெறி விளக்கச் சொல்லுவன் கதையே.

## கதை

மந்திர கிரியில் வடபா ஆங்குஓர்
இந்துதவழ் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைப் தருகெனப் பொருப்புஅரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவன்அடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள்புரிந்து அருளென
அந்தஅந் தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில் லைஎன்று மறுத்தஅரன் உரைப்ப
எப்பரிசு ஆயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்குஅருள் செய்கென
எமைஆ ளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதைமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறஎன மொழிய
மாதுமை அவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றெ நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடத்து அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்குநீ பிள்ளை யாகச்
சென்றுஅவண் வளர்ந்து சிலபகல் கழித்தால்

மன்றல்செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கல்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வுஆகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையும் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானிட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கான்அமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்புஇறப்பு இல்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தரு வதுவைக்கு அமையேன் யான்என
மற்றவன் தன்னைஉன் மணமக னாகப்
பொற்றிடல் அரிதெனப் பெயர்த்தஅவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான்எனக்
கருந்தட நெடுங்கண் கவுரிஅங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல்தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல்உமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன்அருந்தவம் அறிவோம் யாம்என
இருவரும் அறியா இமயவர் பெருமான்
மான்இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறையவன் ஆகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல்தையலை நோக்கி
மின்பெறு நுண்இடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவம்இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடஎன்று உரைத்தலும்
நன்றுஎனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான்மழு தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்

சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சைகொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சிநீர் செய்தவம் நகைதரும் நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்குஅவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர் குழலியை
வாடுதல் ஒழிகென மனம்மிகத் தேற்றிச்
சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதாய் இருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்துஒரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடுஅலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்கஎன
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீஎழுந்து அருள்என
மைமலர்க் குழலி வந்துஎனை அழைக்கில்
அம்மனைப் புகுவன்என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை இகழ்ந்த சிற்றறிவு உடையோன்
அவனையான்சென்றுஇங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லைஎன்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணைஅடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
இணைஅடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவம்என்று அஞ்சி
ஆயிழை தானும் அவன்எதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து

ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன்என்று எண்ணி
ஆசனம் நல்கி அருக்கியம் முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கன்னி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அழுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கற்பூரத் தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்
சிவன்எனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளினை வணங்கத்
தேன்அமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவுஞ் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் உருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடுஅங் குஅவன்அடி வீழ்ந்துஇறைஞ் சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினென் கணக்கில்உள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்
மன்றல்அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல்வந்து இலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி

ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்த
நித்திய மாலை நிரைநிரை தூக்கிப்
பக்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக்கு ஏற்றிப்
பக்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரா னையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடல்என விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்துஉட னிருத்திப்
பறைஒலி யோடுபனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதுஅணி கருங்குழற் பூவைதன் உடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சை அம்பதிபுக
ஏரார் வழியின் எண்திசை தன்னைப்
பாரா தேவா பணிமொழி நீஎன
வரும்கருங் குழலாள் மற்றும்என் டோஎனத்
திருந்துஇழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்துவிளை யாடல்கண்டு
ஒளிர்மணி பூணாள் உரவோன் உடனே
இவ்வகை யாய்விளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்கு உடன்பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக

மதர்விழி உமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தமிழ் வேள்விவேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையொடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்த ஒளிசேர் மலர்ப்பதம் இரண்டும்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீள் முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்துஅவ தரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்து உடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனு
மண்ணு ளோர்களும் வந்துஉனை வணங்க
ஆங்குஅவர் தங்கட்கு அருள்கரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரன மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வநாயகன் சிறந்துஇனிது இருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கான்அமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலும் உயிர்அழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத்து அடற்படை சூழக்

கைமுகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்றுஅவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்த அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனொடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்குஅவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றுஅறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றை வெண்மருப்பை ஒடித்த அவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்துஅவன் வீழ்ந்து துண்ணென எழுந்த
வாய்ந்தமூ டிகமாய் வந்துஅவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்
செறிந்தது மற்றவன் திருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேலி விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனைஎன மணந்தே
ஓகையோடு எழுந்துஆங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்கமுகு ஏறுந்
திருச்செங் காட்டிற் சிவனைஅர்ச் சித்துக்
கணபதீச் சரம்எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமனம் மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி

இணங்கிய பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்துஇவண் ஏவல்செய் திடுநாய்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க்கு உரிய விரதம் என்றுஎண்ணி
மனாதிகள் கழித்த மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிய பெருநாய்
ஒப்பரும் விரதத்து உறும்ஒரு சதுர்த்தியில்
நேற்றுநற் பூசை நுடங்காத ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தாகத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரன நோக்கி
என்னைக் கண்டுஇங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும்இத் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும்எய் துவரென்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள்இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரமென்று
இதயத்து எண்ணி யாவரம் நோற்றார்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகைஇனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனும் இளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாகவுஞ்

செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீரனைக் கிளத்துதல் உற்றான்
அக்குநீ றணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயகமூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருந்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புயம் உடையோன்
சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோல் ஒருமருப்பு உடையோன்
ஒருகையில் தந்தமும் ஒருகையிற் பாசமும்
ஒருகையில் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றுஇமை யவரம் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்குஅவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்குஉறாது எல்லாஞ் செயம்உண் டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதம்ஒன் றுஉளதுஅதை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிட லாம்எனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்துஎமக்கு உரைத்திட வேண்டும் என்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துஉரை செய்வான்

தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வபக்கம் புணர்ந்திடும் சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்த
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன்றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலும் தகுமால்
பூசைசெய் திடும்இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைத்து தியானம் பண்ணி
ஆவா கனம்முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்து அமிர் தத்தால் அபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும்மந் திரத்தால்
மாசுஅகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதானப் புகலுமந் திரத்தால்
திருந்தம் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன்இரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வாகா ரியமுந் தந்தஅருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும்நா மங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகல் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு

தரித்திடும் நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும்முன் வைத்து
உருத்திரப் பிரியஎன்று உரைக்கும்மந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉப சாரமம்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தனம் முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திடும் அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருஉரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாக் கொடுத்து
நைமித் திகம்என நிவல்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன்இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரம்ஒரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை இவன் தாள் அர்ச்சனை பண்ணி
பகர்தருங் கணவனைப் பரிவுடன் அடைந்தாள்
தண்ஆர் மதிமுகத் தாள்தம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேர்அறக் களைந்த
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்திவன் இவனை
மகிதலந் தன்னில் மலர்கொடு அர்ச் சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
ஒருக்குமணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்

பொண்டுபோம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடுஅர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும்அங்கு அவனை இன்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனை அர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்றுகன்று எறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்துகட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்
சிந்தையில் நினைந்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
ஈங்குஇது நிற்க இவ்விர தத்துஇயல்
ஓங்கிய காதைமற்று ஒன்றுஉரை செய்வாம்
கஞ்சநான் முகன்தரங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீஇரங்கு எமக்குஎன நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவே கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீர்என
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்கு உடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்

சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர்அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள்என்று அஞ்சிப்
பாவகன் பயமுறப் பயம்உனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம்அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானும்அச் சபையில் தரியாத ஏகி
எமைஆ ளுடையஉமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்துஇனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுங்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீள்முடிச்சுடரோன் கொண்ர்ந்த
வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கஒண் ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தருட்புனற் கங்கையும் தாங்க ஒண்ணாமற்
பொருத்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆ றிரண்டுங் கரம். ஈராறும்
தூண் எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண்அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள் அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்திர்என்று அனுப்ப
ஆங்கவர் முலைஉண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையு கைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் குழல்உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்துஎடுத்து அணைத்துக்

தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசைஎலாஞ் செல்லுந் தேரும்ஒன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடுஎன்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்துஇனிது இருந்தான்
சமர வேலுடச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகை வந்துஅடி வணங்கி
மருமலர்க் கடம்பன்எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும்நீ அம்பிகா பதியென
அமையவர் உரைப்ப இறைவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுங்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காணஅங்கு
உற்றனன் திருமால் ஊழிவினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்

நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ்உமை யான்வென் றேன்என
எம் பெருமானும் யான்வென் றேன்என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன் அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரிஅங்கு உருத்து
நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்யக்கரி உரைத்த புன்மையி னாலே
கனல்என வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற்று இருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில்நிறத்து உருப்போய்த்
துளவுஅணி மருமனுந் துணைவிழி இழந்தே
ஆண்டுஅரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்த
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல்வீற்று இருக்குங்
கிளர்சினை ஆலின் கீழ்க்கிடந் தன்னால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீழ் இருந்தான்
கம்பமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போம்என
உம்பர் உலகத்து ஓரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் நாளில்
ஆர்த்த கலிங்காத்து அணியிழை வாங்கி
இருபத் தோர்இழை இன்புறக் கட்டி

ஒருபோது உண்டி உண்டுஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதிவி நாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றுஎழுத் ததனால் மொழிந்தமந் திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஐங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாட் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும்அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக் ஏற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவி தானித்த
மலர்பல தொடுத்தி மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நல்நூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ்இரு வாட்சி
தாமரை முல்லை தளைஅவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கட்ம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதக் அவல்எள் ளுண்டை
முப்பழுந் தேங்காய் முதிர்மொளிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
சொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி

நோற்பது கண்டு நோலாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையிர் யானும்நோற் பேனென
அங்குஅவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடுஇவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந்து உமையொடு விமலன்
கஞ்சநாள் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யான்இடுஞ் சாபம் நீங்கியது ஏனென
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளைஅன்று எனக்குத்
தந்துஅருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனம்
பூங்கொடி அடைத்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல் அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுமை அடைந்த வன்தாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்த நகையா னதுஎனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலத் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்த
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருத்திநோற் பேனென
இறைவன் கதைசொல் ஏந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுஉழுந் தாமத் தாமனை

மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்நறுங் குழல்உ மை சாபம்இட் டதும்
அக்குநீறு அணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயக விரதம்நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பணி உருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரிஅன்ற அடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரதமுனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியன் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உ ற்றான்
பரிவொடுஇவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரால் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்தஅன் புடன்இவ் விரதம்நோற் பேனென
அத்தந் தன்னில் அணியிழை செறித்துச்
சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்றநோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்குஅது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றாடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற

கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழுயது கிடப்பக் கண்டுஅவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம் அவட்கு அருளக்
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மானஉடை மணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கும் ம்ன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரணமாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள்இங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனை புகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியழை தன்னை அவனும் அகற்ற
உழவர்தம் மனையில் உற்றுஅவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்த கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்த்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகள் எல்லாந் துணிந்துவே றாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்

மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உ தித்தாய்
சாலவும் பாவிநீ தான்யார் என்ன
வெம்மனம் மிகவும் மெலி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் க்ன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லுதவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகெனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மான்நோர் விழியாள் வருந்ததல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்த தரைமெழுக் கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின்று ஆட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்துஅவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உ த்தமி அவ்வை உணர்ந்துமுன் அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்
கரத்து மூஏழுஇழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் மாம்பழ பண்டமுஞ்

செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்குஇழை நோற்றுக்
கற்பக நம்பி கரணைபெற்றதன் பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருளெனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்நீர்க் கரகமும் ஒருபணி காரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வல்அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண்இது
குணமுடை இவள்உன் குலமனை யாட்டி
இலக்கணசுந்தரி என்றஅவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றஅடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

## காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானொரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னும் நவமணியும் வந்த அணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்த.

பொற்பணைக்கை முக்கண் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச் - சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பத்தின் பேறு.

வெள்ளை எருதுஏறும் விரிசடையோன் பெற்றஎடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலாது அருகஇருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் - மேலைப்
பிறப்புஎல்லாம் பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

பிள்ளையார் கதை முற்றுப்பெற்றது

திருச்சிற்றம்பலம்

## ஸ்ரீ சந்தோஷிமாதா விரதம்

இந்தியாவில் வடநாட்டில் ஆவணி மாதப்பூரணை தினத்தில் "ரட்சாபந்தனம்" என்னும் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்று வந்தது. இந்தியாவில் பெண்கள் தங்கள் சகோதரர்களுக்கு ரட்சை கட்டுவது வழக்கம். இதனைக்கண்ட சித்தி புத்தியின் புத்திரர்கள் தங்களுக்கு சகோதரி வேண்டுமென விநாயகப் பெருமானிடம் வேண்டினார்கள். இவர்களின் வேண்டுகோளுக்குக்கிணங்கி வெள்ளிக்கிழமை நாளில் அழகிய புத்திரியை தோன்றச் செய்தார். இக்குழந்தை உமையம்மையின் சக்தியும், லட்சுமியின் செல்வகடாட்சமும், சரஸ்வதி கல்விச்சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்ற தெய்வமாக திகழ்ந்தார். விநாயகரின் புத்திரர்களை சந்தோஷிக்க வைத்தபடியால் சந்தோஷி மாதா என அழைக்கப்பட்டார். வெள்ளிக்கிழமை தோன்றியபடியால் எந்த ஒரு வெள்ளிக்கிழமை தினத்தில் சந்தோஷிமாதா விரதத்தை ஆரம்பிக்கலாம். தங்கள் கோரிக்கை முடிந்தவுடன் ஒரு வெள்ளிக்கிழமை தினத்தில் விரதத்தை பூர்த்தி செய்யலாம்.

இவ்விரததினத்தில் வீட்டில் ஒரு சுத்தமான இடத்தில் சந்தோஷிமாதாவின் படத்தை வைத்து தீபமேற்றி (இரண்டு திரி போடவேண்டும், நல்லெண்ணெய் விடவேண்டும்) வாழையிலையில் மஞ்சள் பிள்ளையார் பிடித்து கும்பம் வைத்து கும்பத்திற்கும் படத்திற்கும் மாலையிடவேண்டும். கிண்ணங்களில் வறுத்த கடலையும் வெல்லமும் நைவேத்தியமாக நிவேதிக்க வேண்டும். பின் தூப, தீபம் காட்டி பிள்ளையாருக்கு அறுகம்புல்லினால் அர்ச்சனை செய்யவேண்டும். பஞ்சாரத்தி காட்டி சந்தோஷிமாதா பாடல்களை பாடி பூசையை நிறைவு செய்யலாம். இதற்கு தட்சனை கொடுதல் தவிர்க்கப்படல் வேண்டும். அதற்குப் பதிலாக பொருட்கள் ஏதாவது கொடுக்கலாம். எவருக்கும் பணம் கொடுக்கப்படாது. மிகவும் தூய்மையாக இவ்விரதத்தை மேற்கொள்ள வேண்டும்.

விரத பூர்த்தி தினத்தன்று பூரி, கஸ்கொட்டையுடன் கூடிய பால், பாயசம், பொட்டுக்கடலை, வாழைப்பழம் படைத்து தூபதீபம் காட்டி கற்பூர தீப ஆரத்தி செய்தல் வேண்டும். பூசை முடிந்ததும் பிரசாதம் எல்லாருக்கும் வழங்க வேண்டும். வீட்டில் உள்ள பிள்ளைகள் எட்டுப்பேருக்கு இல்லாவிடில் அயல்வீட்டுப்பிள்ளைகள் எட்டுப்பேருக்கு வயிறார உணவு வழங்க வேண்டும். இவ்விரதம் இருப்பவர்கள் விரதம் தொடங்கி முடியும் மட்டும் புளியையோ புளிசேர்நத உணவையோ உண்ணப்படாது. மற்றவர்களுக்கு வழங்கவும் கூடாது. இவ்விரதம் வாரவிரதமாகும்.

## நூற்றெட்டுப் போற்றிகள்

சந்தோஷிமாதா போற்றி
சகலமும் அருள்வாய் போற்றி
வேதங்கள் துதிப்பாய் போற்றி
வெற்றிகள் தருவாய் போற்றி
கன்னியிற் சிறந்தாய் போற்றி
கற்பகதருவே போற்றி
கருணைக் கடலே போற்றி
காரணத்தினுருவே போற்றி
காரியமும் ஆனாய் போற்றி
காசித்தல முறைவாய் போற்றி 10

கதை கேட்டு மகிழ்வாய் போற்றி
காலதேசம் கடந்தாய் போற்றி
கஜமுகன் குழந்தாய் போற்றி
முக்குண உருவே போற்றி
மூவுலகிற் சிறந்தாய் போற்றி
இனியநின் உருவே போற்றி
இனிப்பினை விரும்புவாய் போற்றி
வாட்டமிலா முகத்தாய் போற்றி
வரம் மிகத் தருவாய் போற்றி
அகரமுதல எழுத்தே போற்றி 20

ஆதி அந்தமில்லாய் போற்றி
ஈடிணையற்றாய் போற்றி
இணையடி தொழுதோம் போற்றி
கோரியது கொடுப்பாய் போற்றி
குலம் காக்கும் சுடரே போற்றி
விரதத்திற்கு உரியாய் போற்றி
விளக்கத்தின் விளக்கம் போற்றி
பிறப்பு இறப்பற்றாய் போற்றி
பிறப்பினைத் தருவாய் போற்றி
பெருவாழ்வு அருள்வாய் போற்றி 30

பிழைகளைப் பொறுப்பாய் போற்றி
வணக்கத்திற் குரியாய் போற்றி
வணங்கினால் மகிழ்வாய் போற்றி
ஒலிக்குமோர் ஓசை போற்றி
உயர்வுகள் தருவாய் போற்றி

குறைகளைத் தவிர்ப்பாய் போற்றி
நிறைவினைத் தருவாய் போற்றி
சக்தியின் உருவே போற்றி
ஸரஸ்வதி ஆனாய் போற்றி 40

திருமகள் உருவே போற்றி
தெய்வத்தின் தெய்வம் போற்றி
சூலத்தைக் கொண்டாய் போற்றி
வாளினை ஏற்றாய் போற்றி
தீமைகள் அழிப்பாய் போற்றி
திசைஎல்லாம் நிறைந்தாய் போற்றி
அற்புத உருவே போற்றி
ஆனந்த சிலையே போற்றி
தாமரை அமர்ந்தாய் போற்றி
தக்கன தருவாய் போற்றி 50

தருமத்தின் உருவே போற்றி
தாயாக வந்தாய் போற்றி
நினைத்ததைத் தருவாய் போற்றி
நிம்மதி அருள்வாய் போற்றி
உமையவள் பேர்த்தி போற்றி
செல்வத்தின் உருவமே போற்றி
ஜெகமெல்லாம் காப்பாய் போற்றி
உயிருக்கு உயிராவாய் போற்றி
உலகமெல்லாம் நீயே போற்றி 60

ஆபரண மணிவாய் போற்றி
ஆடைகள் தருவாய் போற்றி
ஒளிமிகு முகத்தாய் போற்றி
கருணை சேர் கரத்தாய் போற்றி
மங்களம் தருவாய் போற்றி
உன்னையே துதிப்போம் போற்றி
உடைமைகள் தருவாய் போற்றி
நங்கையர்க்கு நாயகி போற்றி
நலமெல்லாம் தருவாய் போற்றி 70

ஆர்த்தி ஏற்பாய் போற்றி
ஆனந்த உருவே போற்றி
பாடல்கள் கேட்பாய் போற்றி
பாசத்தைப் பொழிவாய் போற்றி

குன்றென அருள்வாய் போற்றி
தேவியர் தேவி போற்றி
தரிசனம் தருவாய் போற்றி
சிவனருள் பெற்றாய் போற்றி
சிறப்பெலாம் கொண்டாய் போற்றி 80

விஷ்ணுவருள் பெற்றாய் போற்றி
விண்ணவர் போற்றப் போற்றி
நான்முகன் கருணை பெற்றாய் போற்றி
நலன்களின் உருவம் நீயே போற்றி
போற்றி செய்வோர்க்கு அருள்வாய்போற்றி
புண்ணிய நாயகி போற்றி
செல்வத்தின் உருவே போற்றி
செல்வத்தைப் பொழிவாய் போற்றி
சரணமடைந்தால் மகிழ்வாய் போற்றி
சற்குணவதியே போற்றி 90

ஐங்கரன் மகளே போற்றி
அனைத்தும் நீதான் போற்றி
கண்களின் ஒளியே போற்றி
கனகமாமணியே போற்றி
அன்பருக்கு அன்பே போற்றி
அனைவருக்கும் அருள்வாய் போற்றி
செல்வமாம் நிதியே போற்றி
செல்வத்தின் பதியே போற்றி
தத்துவமானாய் போற்றி
வித்தகச் செல்வி போற்றி 100

பழங்களை ஏற்பாய் போற்றி
பாயாஸம் உண்பாய் போற்றி
செல்லம் கடலை சேர்த்து
விருப்பமாய் உண்பாய் போற்றி
குடும்பத்தில் நலன்கள் தந்து
கொலுவிருந் தருள்வாய் போற்றி
ஓங்கார உருவே போற்றி
உன்னைத் தெய்வம் போற்றி
சந்தோஷி மாதா போற்றி
சௌபாக்கியம் அருள்வாய் போற்றி

சந்தோஷி மாதாகி ஜெய்!

## சிவவிரதம்

சிவபெருமான் தன்னை வழிபடும் பக்தர்களை ஆட்கொண்ட வித்தகர். ஞான சம்பந்தப் பெருமானுக்கு ஞானப்பாலை கொடுத்தாட் கொண்டார். அப்பர் பெருமானுக்கு சூலை நோயைகொடுத்தாட் கொண்டார். சுந்தரருக்கு திருமணப்பந்தரில் ஓலையைக் கொடுத்தாட் கொண்டார். திருவாதவூரருக்கு இரண்டு செவிகளிலும், சிரசிலும், கழுத்திலும், மார்பிலும், திருக்கரத்திலும் உருத்திராட்ச மணிகளை தரித்து மேனியில் பதினாறு இடங்களிலும் திரிபுண்டரம் தரித்து சிவஞான போதமெனும் நூலை காட்டி ஆட்கொண்டார்.

சிவபெருமான் வந்தியம்மைக்கு கூலியாக வந்து பாண்டிய மன்னனிடம் பிரம்படியும் பெற்றார். பாசுபதிஸ்திரம் பெறுவதற்கு தன்னை நோக்கி தவம் செய்த அருச்சுனனிடம் வில்லால் அடிவாங்கினார். பாணபத்திரனுக்கு இரங்கி விறகு சுமந்தார். தருமிக்கு பொற்கிழியளிப்பதற்காக புலவர் வேடம் தாங்கிவந்தார். தாயை இழந்த பன்றிக்குட்டிக்களுக்கு தாய்ப்பன்றி வேடம் பூண்டு அந்த பன்றிக் குட்டிகளுக்கு பாலூட்டினார். இவற்றைப் போன்று பல திருவிளையாடல்களை நடாத்தியுள்ளார்.

சிவபெருமானை அன்பு கயிற்றினால் அவர் பாதங்களை கட்டலாம். சிவகோசாரியார் செய்த ஆசார பூஜைவிட அன்பு மழை பொழிந்த கண்ணப்பரின் ஆசார மற்ற பூஜையை ஏற்றுக் கொண்டார். காடவராஜன் கல், மணல் முதலியவற்றால் கட்டிய கோவிலில் நடைபெறும் கும்பாபிஷேகத்தை விட பூசலார் நாயனார் மனத்தினால் கோவில் கட்டி மனத்தினால் வைத்த கும்பாபிஷேக முகூர்த்தத்திற்கு முதலிடம் கொடுத்தார். வாயிலார் நாயனார் சிவபெருமானை மனமாகிய ஆலயத்துள் இருத்தி ஞானமாகிய திருவிளக்கை ஏற்றி ஆனந்தமாகிய திருமஞ்சனமாட்டி அன்பெனும் திருவமுதை நிவேதித்து ஞானபூசையை செய்து வழிபட்டுவந்தார். பின் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டார்.

சிவபெருமானின் அருவத்திருமானி ஞானிகளில் அகக்கண்களுக்கு மட்டும் புலப்படும். அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கம் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. உருவத்திருமேனிகள் அறுபத்தி மூன்று வகைப்படும். அவற்றின்

லிங்கோற்பவர், சந்திரசேகர், சோமாஸ்கந்தர், பைரவர், வீரபத்திரர், நிருத்தமூர்த்தி, தட்சணாமூர்த்தி, பிச்சாடமூர்த்தி, நடராஜர் ஆகிய ஒன்பது மூர்த்திகளின் திருவுருவங்கள் மட்டும் சிவாலயங்களில் பிரதிஷ்டை செய்கப்பட்டிருக்கின்றது. சிவபெருமான் இயற்றிய பாடல்கள் இரண்டு திருவிளையாடல் புராணத்தில் இடம்பெறுகின்றன.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற் செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீ யறியும் பூவே

இப்பாடல் பாண்டிய மன்னனிடம் பொற்கிழி பெறுவதற்காக தருமிக்கு சிவபெருமானால் எழுதிக் கொடுக்கப்பட்ட பாடல்.

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில் பொழிலால வாயின்
மன்னிய சிவன் யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியென பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வகைக்குஞ் சேரலன் காண்க
பண்பாலியாழ் பயில் பாண பத்திரன்
தன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே

பாணபத்திரனின் வறுமையை போக்க சேரமான் பெருமான் நாயனாருக்கு சிவபெருமானால் எழுதப்பட்ட பாடல் இப்பாடல் பதினோராம் திருமுறையில் முதலாவது பாடல். சிவவிரதம் ஒன்பது வகைப்படும். அவையாவன சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமாமகேஸ்வர விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கலியாணசுந்தர விரதம், சூல விரதம், இடபவிரதம், பிரதோஷ விரதம் என்பனவாம்.

**சோமவார விரதம்**

உத்தம வானோர தம்மளுத்தமனா குமீசன்
உத்தம சத்திமாரு ளுத்தமியுருத்திராணி
உத்தம விரதக் தம்முளுத்தமந் திங்களோன் பென்
றுத்தம மற நூலாதியுரைக்கு மிச் சோமவாரம்

மதுரை மாநகரில் உக்கிர பாண்டியன் அரசாட்சி நடத்தும் காலத்தில் கிரகநிலை மாறுபாடடைந்ததன் காரணமாக சேர, சோழ, பாண்டிய நாடுகள் மழையின்மையால் பஞ்சத்தில் மூழ்கியிருந்தன.

இக்குறையை நிவிர்த்தி செய்ய மூவேந்தர்களும் அகத்திய முனிவரிடம் சென்றார்கள். அகத்திய முனிவரும் அவர்களின் குறையை செவிமடுத்து கிரகநிலையை ஆராய்ந்து பன்னிரண்டு வருடத்திற்கு மழையில்லையென கூறி மழையை பெய்விப்பவனாகிய இந்திரனிடம் செல்லும் படி ஆலோசனை கூறினார். இந்திரனிடம் செல்வது எப்படி என அகத்திய முனிவரிடம் அவர்கள் வினவ நீங்கள் சோமவார விரதமிருந்து சிவபெருமானின் திருவருளைப் பெற்று ஆகாய மார்க்கமாகச் செல்லக் கடவீர்கள் என்று கூறி சோமவார விரதமிருக்கும் முறையையும் கூறினார்.

உத்தம விரதங்களுள்ளே உத்தமமான விரதம் சோம விரதமாகும். இத்தினத்துடன் அமாவாசை சேருவது மிகவும் சிறந்த பலனைக் கொடுக்கும். கார்த்திகை மாதம் முதற் சோமவாரம் தொடங்கி சோமவாரம் தோறும் சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும். இதில் உபவாசம் செய்வது உத்தமம். இயலாதவர்கள் இரவில் மட்டும் போசனம் செய்யலாம். அதுவும் முடியாதவர்கள் பகலில் பன்னிரண்டு மணிக்குமேல் உணவு உண்ணலாம். இவ்விரதம் வாழ்நாளாயினும் பன்னிரண்டு வருடகாலமாயினும், மூன்று வருட காலமாயினும் ஒருவருட காலமாயினும் அனுட்டித்தல் வேண்டும். பன்னிரண்டு மாதமும் அனுட்டிக்க முடியாதவர்கள் கார்த்திகை மாதம் மட்டும் அனுட்டித்தால் போதும். இவ்விரதம் மதுரை சோமசுந்தரக் கடவுளின் ஆலயத்தில் அனுட்டிப்பது சிறந்தது என அகத்திய முனிவரின் வாக்கு.

ஈது நோற்பவர் வெம்பகை மனத்துயர் தீர்ந்
தாயிரம் பிறவியிலியற்றுந்
தீதுசேர் வினைதீர்ந் தெடுத்த யாக்கையினிற்

சிவகதி யடைவரிவ் விரதம்
ஓதினோர் கேட்டோர் மனைவியர் மக்க
ளொக்கலோ டினிது வாழ்ந்தும்பர்
மேதகு பதினாலிந்திரன் பதத்தில்
வீற்றினி திருப்பரென்றார வோன்

இவ்விரதத்தை நோற்பவர் பகை நீக்கம் பெற்று கவலை நீங்கி மகிழ்ச்சியுடன் விரும்பிய பயனை அடைவர். இவ்விரதத்தின் மகத்துவத்தை படித்தவர்கள் கேட்டவர் மனைவி மக்களுடன் இனிது வாழ்வர். பதினான்கு இந்திரன் பதத்தில் இருப்பர் என்று அகத்திய முனிவர் கூறினார். இத்தினத்தில் சிவசகஸ்ரநாமம், சிவஅஷ்டோத்திரம், லிங்காஅஷ்டகம் திருமுறைகள் படிக்க வேண்டும், இவ்விரதம் வாரவிரதமாகும்.

### உமாமகேஸ்வர விரதம்

இவ்விரதம் ஆவணி மாதம் பூரணை தினத்தன்று (பாத்திரபத மாதம் - புரட்டாதி மாதம்) அனுட்டிக்க வேண்டும். இத்தினத்தில் உமாமகேஸ்வர மூர்த்தியை வழிபடவேண்டும். உமாமகேஸ்வர மூர்த்தி இங்குள்ள சிவாலயங்களில் பிரதிஷ்டை செய்யாதபடியால் பகலில் கும்பத்தில் ஆவாஹனம் செய்து பூஜை செய்து விரதமிருக்கலாம். முடியாதவர்கள் சிவாலயங்களில் சோமாஸ்கந்த மூர்த்திக்கு விஷேச பூசை அர்ச்சனை செய்யலாம். இத்தினத்தில் பகலில் போசனம் செய்து இரவில் பலகாரம் உண்ணலாம். இவ்விரதம் ஆவணி மாதாந்தத்தில் அமாவாசை வந்தால் புரட்டாதி மாதத்திலும் வருவதுண்டு.

இவ்விரதத்தை இந்திரன் முதலிய தேவர்கள், ரிஷிகள் பல அந்தணர்களும் அனுட்டித்து பயன் பெற்றுள்ளனர். இந்த விரதத்தை அனுட்டிப்பவர்கள் தாங்கள் விரும்பிய பலன்களை அடைவர்.

### சூல விரதம்

தை மாத அமாவாசை தினத்தில் சூலாயுதத்தை தரித்த சிவபெருமானை குறித்து அனுட்டிக்கும் விரதமாகும். இத்தினத்தில் பகலில் மட்டும் போசனம் செய்யவேண்டும்.

**இடப விரதம்**

வைகாசி மாதம் பூர்வபட்ச அட்டமி தினத்தில் இடபவாகன ரூடராகிய சிவபெருமானை நினைந்து அனுட்டிக்கும் விரதமாகும். இத்தினத்தில் பகலில் மட்டும் உண்ணவேண்டும்.

**கல்யாண சுந்தர விரதம்**

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே

*(3ம் திருமுறை)*

பங்குனி மாத உத்தர நட்சத்திரத்திலே கல்யாண சுந்தர மூர்த்தியை நினைந்து அனுட்டிக்கும் விரதமாகும். இத்தினத்தில் இரவில் பலகாரம் உண்ணலாம். திருமணம் தாமதமானவர்கள் இவ்விரதத்தை அனுட்டிப்பது நன்று. இரண்டாம் திருமுறையில் உள்ள "சடைஎனுமால்" என்னும் திருமருகல் திருப்பதிகத்தைப் பாராயணம் செய்வது நன்று.

**கேதார விரதம் (கேதார கௌரி விரதம்)**

பொங்கியபுகழ் புரட்டாதியாகிய திங்களிற் பிற்பதினாலு செய்யதாட்
சங்கரி நோற்றகேதார நோன்பதாமங்கரன் பூசனையன் பிற்செய்மினே

(சரசோதிமாலை)

இவ்விரதம் புரட்டாதி மாதம் பூர்வ பட்ச தசமி திதியில் ஆரம்பமாகி ஐப்பசி மாதம் அமாவாசை திதியில் பூர்த்தியாகும். இவ்விரதம் இருபத்தொரு தினங்கள் அனுட்டித்தல் வேண்டும். இவ்விரதம் அனுட்டிப்பவர்கள் இருபத்தொரு இழையிலான காப்பை ஆண்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் அணிதல் வேண்டும். பெண்கள் தாங்கள் உடல் சுத்தத்தின்படி காப்பை அணிதல் வேண்டும். முதலிருபது நாளும் ஒரு பொழுதுண்டு இருபத்தொராம் நாள் பூசை ஆராதனைகளில் பங்குபற்றி இரண்டாம் திருமுறையில் வரும் "தொண்டரஞ்சு" என்னும் திருக்கேதாரப்பதிகம் ஓதல் வேண்டும். இத்தினத்தன்று உபவாசம் இருத்தல் வேண்டும். உபவாசம் இருக்க இயலாதவர்கள் சிவனுக்கு நிவேதிக்கப்பட்ட உப்பில்லா பணிகாரம் உண்ணலாம்.

தேவி துணை

ஓம் சக்தி

## கௌரிக் காப்பு

விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட் குற்றம் சேர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமஹா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தேவாழ்ந்திடுவேன்
எண்ணும்கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமஹா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளித் தாயே
கொடியமஹி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனை பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே

வகையாற்று படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத்திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடுவீர்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையத்தில் வாழவிடு
காளிமஹா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதித் தாயவளே
நாம்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பலவகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமஹா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைகணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்குதொட்டதெல்லாம்ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனேஇணைந்துவரும்

சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்பினைக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக்கண்டால் எரிமலைபோற்கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்திமனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாம்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முக்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலோர்களெல்லாம் ஏற்றியெமைப்போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமஹா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்

## இரண்டாந் திருமுறை

திருக்கேதாரம்

பண் : செவ்வழி இராகம் : எதுகுலகாம்போதி

திருச்சிற்றம்பலம்

தொண்டரஞ்சுகளிறும் மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைக்கட்டி வழிபாடு செய்யுமிடமென்பரால்
வண்டுபாடமயிலால மான்கன்றுதுள்ளிவரிக்
கொண்டைபாயச்சுனை நீலமொட்டலருங்கேதாரமே. 01.

பாதம்விண்ணோர் பலரும்பரவிப் பணிந்தேத்தவே
வேதநான்கும்பதினெட்டொடாறும் விரித்தார்க்கிடம்
தாதுவிண்டமதுவுண்டுமிண்டிவருவண்டினம்
கீதம்பாடமடமந்திகேட்டுகளுங்கேதாரமே. 02.

முந்திவந்துபுரோதாயமூழ்கிமுனிகள்பலர்
எந்தைபெம்மானெனநின்றிறைஞ்சுமிடமென்பரால்
மந்திபாயச்சரேலச்சொரிந்தும்முரிந்துக்கபூக்
கெந்தநாறக்கிளருஞ்சடையெந்தைகேதாரமே. 03

உள்ளமிக்கார் குதிரைம்முகத்தாரொருகாலர்கள்
எள்கலில்லாவிமையோர்கள்சேரும்மிடமென்பரால்
பிள்ளைதுள்ளிக்கிளைபயில்வகேட்டுப்பிரியாதுபோய்க்
கிள்ளையேனற்கதிர்கொணர்ந்துவாய்ப்பெய்யுங்கேதாரமே. 04

ஊழியூழியுணர்வார்கள்வேதத்தினொண்பொருள்களால்
வாழியெந்தையெனவந்திறைஞ்சுமிடமென்பரால்
மேழிதாங்கியுழுவார்கள்போலவ்விரைதேரிய
கேழல்பூழ் திகிளைக்கமணிசிந்துங்கேதாரமே. 05

நீறுபூசிநிலத்துண்டு நீர் மூழ்கி நீள்வரைதன்மேல்
தேறுசிந்தையுடையார்கள்சேரும்மிடமென்பரால்
ஏறிமாவின்கனியும்பலவின்னிருஞ்சுளைகளும்
கீறிநாளும்முசுக்கிளையொடுண்டுகளுங்கேதாரமே. 06

மடந்தைபாகத்தடக்கிம்றையோ திவானோர்தொழத்
தொடர்ந்தநம்மேல்வினை தீர்க்கநின்றார்க்கிடமென்பரால்
உடைந்தகாற்றுக்குயர்வேங்கைபூத்துதிரக்கல்லறைகண்மேல்
கிடந்தவேங்கைசினமாமுகஞ்செய்யுங்கேதாரமே. 07

அரவமுந்நீரணியிலங்கைக்கோனையருவரைதனால்
வெருவவூன்றிவிரலாலடர்த்தார்க்கிடமென்பரால்
குரவங்கோங்கங்குளிர்பிண்டிஞாழல்சுரபுன்னைமேல்
கிரமமாகவரிவண்டுபண்செய்யுங்கேதாரமே. 08

ஆழ்ந்துகாணாருயர்ந்தெய்தகில்லாரலமந்தவர்
தாழ்ந்துதந்தம்முடிசாயநின்றார்க்கிடமென்பரால்
வீழ்ந்துசெற்றுநிழற்கிறங்கும்வேழத்தின்வெண்மருப்பினைக்
கீழ்ந்துசிங்கங்குருகுண்ணமுத்துதிருங்கேதாரமே. 09.

கடுக்கடின்றுகழிமீன்கவர்வார்கண்மாசுடம்பினர்
இடுக்கணுய்ப்பாரவரெய்தவொண்ணாவிடமென்பரால்
அடுக்கநின்றவ்வறவுரைகள்கேட்டாங்கவர்வினைகளைக்
கெடுக்கநின்றபெருமானுறைகின்றகேதாரமே. 10.

வாயந்தசெந்நெல்விளைகழனிமல்கும்வயற்காழியான்
ஏய்ந்தநீர்க்கோட்டிமையோருறைகின்றகேதாரத்தை
ஆய்ந்துசொன்னவருந்தமிழ்கள்பத்தும்மிசைவல்லவர்
வேந்தராகியுலகாண்டுவீடுகதிபெறுவரே. 11.

திருச்சிற்றம்பலம்

**பிரதோஷ விரதம்**

இவ்விரதம் மாதங்களில் வரும் பூர்வ அபர பட்சங்களில் வரும் திரயோதசி திதியில் நஞ்சுண்ட கண்டனை சிந்தித்து அனுட்டிக்கும் விரதமாகும்.

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசி நின்றாடும் பிரான்றன்னை
கண்காள் காண்மின்களோ *(4ம் திருமுறை)*

தோஷம் என்றால் குற்றம். பிரதோஷகாலம் குற்றமற்றகாலமாகும். இக்காலத்தில் சிவனை வழிபட்டால் சகல தோஷங்களும் நீங்கும். பிரதோஷ நேரம் பகலும் இரவு சந்திக்கும் நேரமாகும். இந்த நேரத்திற்கு அதிதேவதை சூரியனின் மனைவியாகிய பிரத்யுஷா என்பவள். எனவே இக்காலத்தை பிரத்யுஷத்காலம் என்றழைக்கப்பட்டு நாளடையில் மருவி பிரதோஷகாலமென மாறிவிட்டது. இதேபோல் இரவும் பகலும் சந்திக்கும் நேரம் உஷத்காலமாகும். இக்காலத்திற்கு அதிதேவதை சூரியனின் மனைவி உஷா என்பவள் எனவே அதிதேவதையின் பெயரால் உஷத் காலமென அழைக்கப்பட்டுவருகின்றது.

பிரதோஷ காலம் மாலை 4.30 மணிமுதல் இரவு 7.30 மணி வரையுமுள்ள காலமாகும். இக்காலத்தில் திரயோதசி திதியின் முழுப் பரிமாணமும் இருத்தல் உத்தமம். அதாவது பிரதோஷ தினத்தன்று சூரிய உதயம் முதல் மறுநாள் சூரிய உதயம்வரை சிறப்பான பிரதோஷ தினமாகும். இதை சோமப்பிரதோஷம் என்பர். சிவபெருமான் ஆலகால விஷமுண்டதினம் சனிக்கிழமையாகும். அவர் விஷத்தையுண்டு சயனித்து எழும்பி சந்தியா தாண்டமாடிய காலம் பிரதோஷகாலமாகும். இதனால் சனிப்பிரதோஷம் பெருமைபெறுகின்றது.

தினமும் மாலை நேரமான சந்தியாகாலத்தை தினப்பிரதோஷம் எனப்படும். பூர்வபட்சம், அபரபட்சம் ஆகிய இருபட்சங்களில் வரும் திரயோதசிதிதியில் வரும் பிரதோஷத்தை பட்சப்பிரதோஷம் எனப்படும். இப்பட்ச பிரதோஷம் மஹாசிவராத்திரி தினத்திற்கு முன் வருமாயின் அப்பிரதோஷ தினத்தை மகாப்பிரதோஷம் எனப்படும். இந்த மகா பிரதோஷம் சனிக்கிழமைகளில் வருமாயின் இதனை சனி மகாப்பிரதோஷம் என அழைப்பர். இந்த சனி மகாப்பிரதோஷம் பன்மடங்கு பலனை கொடுக்கும்.

இவ்விரதமிருக்க விரும்புவர்கள் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வரும் சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷ தினத்தில் ஆரம்பிக்கவேண்டும்.

மஹோற்சவகாலங்களில் அஸ்திரதேவர் எவ்வளவு முக்கிய இடம்பெறுகின்றாரோ அதுபோல் நந்திதேவரும் பிரதோஷ வேளையில் முக்கியம் இடம்பெறுகின்றார்.

நந்திதேவர் சிலாதனர் என்னும் சிவபக்தரின் மகன். இவரின் ஆயுள் எட்டுவயது என நிர்ணயிக்கப்பட்டது. இதனால் சிலாதனர் கவலையுற்றார். இதனையறிந்த சிறுவனான நந்திதேவர் தந்தையிடம் இதனையிட்டு கவலையுற வேண்டாம். நான் எனது ஆயுளை வெல்ல தவம் செய்யப் போகின்றேன். எனக்கு அனுமதி தரவும் என தந்தையிடம் கூறினார். உடனே தந்தையும் அனுமதியளிக்க மனதை ஒரு நிலைப்படுத்தி புவனை நதியின் நடுவில் நின்று ஒரு கோடி உருத்திர மந்திரத்தை உச்சரித்து முடிந்ததும் சிவபெருமான் நந்தியின் முன்தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்றார். நந்தி அதற்கு மேலும் ஏழுகோடி மந்திர உருத்திர மந்திரம் ஜெபிக்க தாங்கள் அருள் தர வேண்டுமென வேண்டினார். சிவனும் நந்தி தேவரின் வேண்டுதலுக்கு சம்மதம் கொடுக்க நந்தி தேவரும் ஏழுகோடி மந்திர ஜெபம் செய்தார். மந்திர ஜெபத்தின் பலனாக சிவபெருமானும் உமாதேவியாரும் அவர்முன் தோன்றி என்ன வரம் வேண்டுமென்று கேட்க அதற்கு நந்திதேவர் தனக்கு ஜனன மரண பயமின்றி உங்களுக்கு அருகில் இருக்கும் பாக்கியத்தை தரவேண்டுமென்று வேண்டினார். அத்துடன் தனது பிதுர்வர்க்கத்தினருக்கும் சிவபதம் அளிக்கவேண்டுமென்றும் வேண்டுதல் செய்தார். உடனே உமையம்மை நீ சிவகணங்களுக்கு தலைவனாக இரு. உனக்கு ஆயுட்காலம் சிறிது காலமே என்றாலும் உன்னை இயமன் நெருங்கமாட்டார் என்று கூறினார். நந்தியெம்பெருமான் தருமமே வடிவானவர் இவர் இறைவனை நோக்கியவாறு தியானத்தில் மூழ்கியிருப்பார். இதனால் சுவாமிக்கும் நந்திக்கும் இடையே குறுக்கே போதல் கூடாது என்று கூறுவார்கள். சிவபெருமான் விஷமுண்டு எழுந்து சந்தியா தாண்டவம் ஆடினார். தேவர்கள் செயலற்று இருந்தபடியால் இந்த நடனத்துக்கு நந்தியெம்பெருமான் மட்டும் மத்தளம் வாசித்தார். சந்திய தாண்டவத்தை கண்ட மகிழ்வினால் நந்தியெம்பெருமானின் உடல் பெருத்தது இதனால் தேவர்கள் சிவனுடைய நடனத்தை பார்க்க முடியவில்லை. இதனால் கொம்பினடுவே நடனத்தை பார்த்தனர். இதன் காரணமாக பிரதோஷகாலங்களில் நந்தியெம்பெருமானின் கொம்பினடுவே பிரதோஷ தரிசனம் நடைபெறுகின்றது. நந்தியெம்பெருமான் சுவாமிக்கு மத்தளம் வாசிக்கின்றபடியால் அவருக்கு பூஜை நடக்கும் பொழுது மங்களவாத்தியம் வாசிப்பதில்லை.

பிரதோஷ வழிபாடு செய்கின்றவர்கள் முதலில் இடபதேவரை தரிசித்து பின் தனது வலதுபக்கமாக (இடமாக) சென்று சண்டேஸ்வரரை வழிபடல் வேண்டும். மீண்டும் அதேவழியால் திரும்பிவந்து இடபதேவரை

தரிசனம் செய்த பின் இடதுகைப்பக்கமாக (வலமாக வழமைபோல்) சென்று கோமுகை கடவாமல் நின்று சென்றவழியால் திரும்பிவந்து இடபதேவரை தரிசித்து விட்டு.

அங்கு நின்று முன்போல இடமாக சென்று சண்டேஸ்வரரை தரிசித்து மீண்டும் திரும்பி இடபதேவரை தரிசியாது வலமாக கோமுகை சென்று மீண்டும் திரும்பி வந்து இடபதேவரை தரிசியாது. முன்போல இடமாக சென்று சண்டேஸ்வரரை தரிசனம் செய்தபின் மீண்டும் சென்றவழியால் திரும்பிவந்து இடப தேவரை தரிசனம் செய்தபின் இருகொம்பினூடாக சிவநாமம் சொல்லி சிவபெருமானை வழிபடல் வேண்டும்.

பிரதோஷ காலத்தில் நந்தியெம்பெருமானுக்கு அறுகம்புல் மாலையிட வேண்டும் நெய் விளக்கேற்றி ஊறவைத்த பச்சரிசி, பயத்தம்பருப்புடன் தேங்காய் சர்க்கரை கலந்த நைவேத்தியம் (காப்பரிசி) நிவேதிக்க வேண்டும். சிவபெருமானுக்கு வில்வமாலை அணிவித்தல் வேண்டும்.

இதன் பலன் வறுமை நீக்கம், கடன்தொல்லை நீங்கும். புத்திரலாபம், நினைத்த காரியசித்தி என்பன சித்தியாகும்.

### சிவராத்திரி விரதம்

பிறங்கு மாசியிற்பிற் பதினாலதே, யறங்கொணற்சிவராத்திரியா மிதி
லுறங்கலின்றியு ஞற்றிடிற் பூசனை, பெறும் பெரும் பலன் பேசரிதாகுமே.
(சரசோதிமாலை)

இவ்விரதம் மாசிமாதம் (மாகமாதம்) தேய்பிறைச் சதுர்த்தசி தினத்தில் சிவபெருமானை நினைத்து அனுட்டிக்கும் விரதமாகும். இத்தினத்தில் திரயோதசி திங்கட்கிழமை திருவோணம் ஆகிய மூன்றும் சேர்ந்தால் உத்தமத்தில் உத்தமமான சிவராத்திரியாகும். மற்றைய விரதங்களுக்கு உணவு மட்டும் நீக்க வேண்டும். இவ்விரதத்திற்கு மட்டும் உணவும் உறக்கமும் நீக்கவேண்டும். இத்தினத்தில் நான்கு யாமமும் சிவாலய தரிசனம் செய்தல் வேண்டும். இதற்கு இயலாதவர்கள் லிங்கோற்கவ காலம் வரையும் நித்திரை விழித்து சிவதரிசனம் செய்யலாம். (லிங்கோற்பவ காலம் இரவு 11.30 மணிக்கு மேல் 1.00 மணிவரையுமுள்ள காலமாகும்) இத்தினத்தில் உபவாசம் இருத்தல் உத்தமம். பால் உண்பது மத்திமம். இப்புண்ணிய தினத்தில் சிவதீட்சை பெற்றவர்கள் மட்டும் ஸ்ரீ பஞ்சாட்சரஜெபம் செய்தல் வேண்டும்.

இத்தினத்தில் கந்தபுராணம் அடிமுடி தேடிய படலம் வாசித்து பொருளுரைப்பார்கள். திருநாவுக்கரசு நாயனாரின் ஆறாம் திருமுறையில் வரும் போற்றித் திருத்தாண்டகம் பாராயணம் செய்யலாம். முதலாம் சாமத்தில் சிவபுராணம் பாராயணம் செய்யலாம். இரண்டாம் சாமத்தில் கீர்த்தித் திருவகவல் பாராயணம் செய்யலாம். மூன்றாம் சாமத்தில் திருவண்டப்பகுதி பாராயணம் செய்யலாம். நான்காம் சாமத்தில் போற்றித் திருவகவல் பாராயணம் செய்யலாம். பதினோராம் திருமுறையில் அற்புத திருவந்தாதி, சிவபெருமான் திருவந்தாதி ஆகியன பாராயணம் செய்யலாம்.

## நடராஜ தரிசனமும் ஆறுகாலப் பூஜையும்

வருடத்தில் நடராஜப் பெருமானுக்கு ஆறு காலங்களில் தரிசனம் நடைபெறும். அதே போல் சைவாலயங்களிலும் தினமும் ஆறுகாலப்பூஜைகள் நடைபெறுகின்றன.

## உஷக்காலப் பூஜை

இப்பூசை அதிகாலை சூரியன் உதிக்க முன்னே முக்கால் நாழிகையின் (நாலரை மணிக்கு) முன் நிகழும் பூஜையாகும். நடராஜப் பெருமானுக்கு உஷத்காலம் மார்கழி திருவாதிரை தினமாகும்.

## காலைச்சந்திப் பூஜை

இப்பூசை சூரியன் உதித்தபின் ஏழரை நாழிகையின் (காலை ஒன்பது மணிக்கு) முன் நிகழும் பூசையாகும். நடராஜப் பெருமானுக்கு காலைச்சந்தி மாசிமாதம் பூர்வபட்ச சதுர்த்தசி தினமாகும்.

## உச்சிக்காலப் பூஜை

இப்பூசை நண்பகலில் நடைபெறும் பூசையாகும். நடராஜப் பெருமானுக்கு உச்சிக்காலம் சித்திரை மாதம் திருவோண நட்சத்திரம் பொருந்திய தினமாகும்.

## பிரதோஷ பூஜை

இப்பூசை அஸ்தமிக்க மூன்றே முக்கால் நாழிகைக்கு (நாலரை மணிக்கு) முன் நிகழும் பூஜையாகும். நடராஜப் பெருமானுக்கு பிரதோஷகாலம் ஆனி உத்தர தினமாகும்.

## இரண்டாம் காலப்பூஜை

இப்பூஜை பிரதோஷப் பூஜையிலிருந்து மூன்றேமுக்கால் நாழிகையளவில் (மாலை ஆறு மணியளவில்) நடைபெறும் பூஜையாகும். நடராஜப் பெருமானுக்கு இரண்டாம் காலம் ஆவணி மாதம் பூர்வபட்ச சதுர்த்தசி தினமாகும்.

## அர்த்த ஜாமப்பூஜை

இப்பூஜை இரண்டாம் காலப்பூஜையிலிருந்து மூன்றே முக்கால் நாழிகைக்கு (இரவு ஏழரை மணிக்கு) முன் நிகழவேண்டிய பூஜையாகும். நடராஜப் பெருமானுக்கு அர்த்த ஜாமம் புரட்டாதி மாதம் பூர்வபட்ச சதுர்த்தசி தினமாகும்.

## நடராஜர் அபிஷேகங்களும் தரிசனங்களும் விரதங்களும்.

சிவபெருமானின் உருவத் திருமேனிகளுள் நடராஜ வடிவம் கொண்ட திருமேனியும் ஒன்றாகும். நடராஜப் பெருமான் ஆன்மாக்களின் நலன் கருதி இடையறாது ஆனந்த நடனம் ஆடுகின்றார். இவர் ஐந்தொழில் புரியும் அம்பலவாணர். நடராஜப் பெருமானின் திருநடனம் ஐந்தொழில்களை உணர்த்துகின்றது. நடராஜப் பெருமானின் திருக்கரத்தில் விளங்கும் உடுக்கு படைத்தலையும் அபயகரம் காத்தலையும் கையிலேந்திய நெருப்பு அழித்தலையும் ஊன்றிய திருவடி மறைத்தலையும் தூக்கிய திருவடி அருளையும் குறிக்கும்.

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உள்ள திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

(உண்மை விளக்கம்)

அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையிற் சங்காரம்
அரனுற்ற ணைப்பில் அமரும் திரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே. (திருமந்திரம்)

இந்த ஐந்தொழில்களை இவருடைய சத்தியாகிய சிவகாம சுந்தரியுடன் உயிர் உடம்புபோல் இணைந்து செயல்படுகின்றார். நடராஜப் பெருமானின் திரு நடனம் தூலபஞ்சாட்சரத்தையும் சூக்கும பஞ்சாட்சரத்தையும் குறிக்கும்.

ந - ஊன்றிய திருவடி
ம - திருவுந்தி
சி - திருத்தோள்
வா - திருமுகம்
ய - திருமுடி

இத்தூல பஞ்சாட்சரத்தை தீட்சையுடைய உலகப்பற்று நீங்காதவர்கள் ஓதலாம்.

சி - உடுக்கேந்திய திருக்கரம்
வா - வீசும்கரம்
ய - அபயகரம்
ந - அனலேந்தியகரம்
ம - முயலகனை மிதித்தபாதம்

இது சூக்கும பஞ்சாட்கரமாகும். இதனை உலகப்பற்று நீங்கி மோட்சத்தை விரும்புவர்கள் ஓதுவார்கள். நடராஜப் பெருமானின் திருவாசி ஓங்கார வடிவமானது.

ஓங்காரமே நற்றிருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறை சுடராம் - ஆங்காரம்
அற்றார் அறிவரணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்

(உண்மை விளக்கம்)

பொன்னம்பலவாணரின் திருநடனத்தின் தத்துவத்தை ஆங்காரம் மமகாரமற்றவர்கள் அறிவர். இந்த திருநடனத்தை கண்டு மகிழ்ந்தவர்களுக்கு மறுபிறப்பில்லை. நடராஜப் பெருமான் சிதம்பரத்தில் பொன்னம்பலவாணராகவும் மதுரையில் வெள்ளியம்பலவாணராகவும் காட்சி கொடுக்கின்றார்.

நடராஜப் பெருமானுக்கு வருடத்தில் ஆறு அபிஷேகங்கள் உண்டு. உத்தராயணத்தில் மூன்று தினங்களும் தக்ஷிணாயத்தில் மூன்று தினங்களும் அபிஷேகதினங்களாகும்.

சித்திரை மாதம் திருவோண நட்சத்திரத்தில் சிவகாமி அம்பாள் சமேத ஆனந்த நடராஜப் பெருமானுக்கு பகல் நேரத்தில் அபிடேகம் நடைபெறும். மாலையில் தரிசனம் நடைபெறும்.

ஆனி மாதம் (உத்தராயண அந்த மாதம்) உத்தர நட்சத்திரத்தில் சொர்ணாம்பிகா சமேத அம்பலவாணேஸ்வரப்பெருமானுக்கு நள்ளிரவில் அபிஷேகம் நடைபெறும். உதயத்தில் தரிசனம் நடைபெறும்.

ஆவணி மாதம் பூர்வபட்ச சதுர்த்தசி தினத்தில் சிவகாமியம்பாள் சமேத ஆனந்த நடராஜப் பெருமானுக்கு பகல் நேரத்தில் அபிஷேகம் நடைபெறும். மாலையில் தரிசனம் நடைபெறும்.

புரட்டாதி மாதம் பூர்வ பட்ச சதுர்த்தசி தினத்தில் சுவர்ணாம்பிகை சமேத பொன்னம்பலவாணேஸ்வரப் பெருமானுக்கு பகல் நேரத்தில் அபிஷேகம். மாலையில் தரிசனம் நடைபெறும். மார்கழி மாதம் (தட்சணாயன அந்த மாதம்) திருவாதிரை நட்சத்திர தினத்தில் சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானுக்கு நள்ளிரவில் அபிஷேகம் நடைபெறும் உதயத்தில் தரிசனம் நடைபெறும்.

மாசி மாத பூர்வபட்ச சதுர்த்தசி தினத்தில் பகல் நேரத்தில் சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரருக்கு அபிஷேகம் நடைபெறும். மாலையில் தரிசனம் நடைபெறும். இரு அயனங்களின் ஆரம்பத்துக்குரிய மாதங்களான தை, ஆடி ஆகிய இருமாதங்களுக்கு முன் மாதங்களிலும், பின் மாதங்களிலும் நடராஜர் அபிஷேகம் நடைபெறுவதைக் காணலாம்.

## திருவாதிரை விரதம்

இவ்விரதம் திருவெம்பாவை பத்துதினங்களிலும் கன்னிப் பெண்கள் நடராஜப்பெருமானை நினைத்து அனுட்டிக்கும் விரதமாகும். இதன் இறுதிநாள் திருவாதிரை தினமாகும். ஆலயங்களில் "திருவாதவூரடிகள் புராணம்" வாசித்து உரைசொல்வார்கள். திருவாதிரை தினத்தின் பெருமையை தேவாரத்திருமுறைகளில் நாயன்மார்கள் அடியார்களுக்கு விளங்கச் செய்தனர். இத்தினத்தில் அரிசிமா, தேங்காய்த்துருவல், வெல்லம், பயற்றம் பருப்புமா ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட களியை பட்டணத்தடிகளின் அமைச்சரான சேந்தனரால் நடராஜப் பெருமானுக்கு நிவேதிக்கப்பட்டது. சேந்தனாரின் அன்பை வெளிப்படுத்த வேண்டுமென்று சிந்தித்து நடராஜப் பெருமானின் சிற்சபையில் களி உதிர்ந்து கிடக்குமாறு செய்தார் இவ்விரதம் சாதாரண விரதமாகும்.

## தேவி விரதம்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத்த தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.

உமையும் உமையொடு பாகனும் ஏகஉருவில் வந்திங்கு
எமையும் தமக்கன்பு செய்யவைத்தார் இனி எண்ணுதற்கு
சமையங்களுமில்லை ஈன்றெடுப்பாள் ஒருதாயுமில்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே.

சிவனுடைய சக்தி உமை உமை சிவனிலிருந்து வேறாகாதவர்

**தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி**
**பின்னமிலா எங்கள் பிரான்**

(திருவருட்பயன் -01 -02)

உமை சிவனுடன் உயிர் உடம்பு போல் ஆன்மாக்களுக்கு அருள்புரிகின்றார்.

**இதந்தரு மடந்தை யொடியைந்து யிருடம்பு போல்**
**விதம்படு உலகங்களில் விரிந்தொளிவிளங்குவார்.**

(திருவாதவூரடிகள் புராணம் -2)

உமை முன்னொரு காலத்தில் தட்சனின் மகளாக அவதாரம் செய்து தாட்சாயினி என்னும் நாமம் பெற்றார். தட்சன் யாகம் செய்த போது சிவனை மதியாத காரணத்தால் தனது உடலை யோகக்கினியில் தகித்து கொண்ட பின் சிவனை அடைவதற்கு அரிய பெரிய தவங்களை செய்து பர்வதராஜன் புத்திரியாகப் பிறந்து பார்வதி என்னும் நாமத்துடன் சிவனை திருமணம் செய்தார். இத்திருமணத்தின் பயனாக தேவர்களின் குறைதீர்க்க முருகப்பெருமான் அவதாரம் செய்தார். இந்திராணியின் மாங்கல்யம் காப்பாற்றப்பட்டது. அம்பிகையின் அடுத்த அவதாரம் மதுரை மாநகரம் செழிக்க மதுரையில் இடம்பெற்றது. மலயத்துவசபாண்டிய மன்னனுக்கும் காஞ்சமாலைக்கும் புத்திரபாக்கியம் இல்லாத காரணத்தினால் புத்திர காமேஷ்டி யாகம் செய்தார்கள். இதன் பயனாக யாகாக்கினியில் மூன்று முலையுடன் அம்பிகை தோன்றினார். இக்குழந்தைக்கு மூன்றாவது முலை இருப்பதைக்கண்டு மன்னன் கவலையுற்ற சமயம் அரசனே உமது மகளுக்கு கணவன் வரும் போது மூன்றாவது தனம் மறையுமென அசரீரி எழுந்தது. அக்குழந்தையை மலயத்துவச பாண்டிய மன்னனும் காஞ்சனமாலை தூக்கி அன்புடன் அணைத்து தடாதகை பிராட்டி என்னும் நாமத்தை சூட்டினார்கள். தடாதகைப்பிராட்டி வளர்பிறை போல் வளர்ந்து திருமணப் பருவமெய்தியதும் சிவபெருமானின் திருக்கரத்தைப்பற்றினார். பார்வதி தேவியின் திருமணப்படலம் கந்தபுராணம் உற்பத்தி காண்டத்திலும் தடாதகைப் பிராட்டியின் திருமணப்படலம் திருவிளையாடல் புராணத்திலும் காணலாம்.

தடாதகைப் பிராட்டியார் சிவபெருமான் அடியவர்கள் வேண்டும் வரத்தை கொடுக்க தடுக்க மாட்டார் (தடாத-கை). நமது இல்லற வாழ்வில் கணவர் தனது பெற்றுவளர்த்த பிதாமாதாக்களுக்கு கொடுப்பதையோ வசதி குறைந்த சகோதரங்களுக்கு கொடுப்பதையோ மற்றும் உறவினரல்லாத வசதிகுறைந்தவர்களுக்கு கொடுப்பதை தடுக்காத இல்லத்தரசிகளையும் இன்றும் காண்கின்றோம். இவர்களது சந்ததி செழிப்புடன் வாழ்வதை காண்கிறோம்.

அம்பிகையின் வடிவங்களாக ஸ்ரீ லலிதாம்பிகை, மகாமாரி, சொர்ணாம்பிகை, காமாட்சி, கண்ணகி, காளி, பத்திரகாளி, துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி, பரமேஸ்வரி, சாமுண்டேஸ்வரி, மனோன்மணி, புவனேஸ்வரி, நாகபூஷணியம்மன், கமலாம்பிகை, வாலாம்பிகை, கௌரி, மாதுமை, நகுலாம்பிகை, சிவகாமியம்பாள் இன்னும் பல அருள் வடிவங்கள் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்திருப்பதை காணலாம்.

அம்பிகையை யந்திரங்களிலும் வழிபாடு செய்வார்கள். ஸ்ரீசக்கரவழிபாடு சில ஆலயங்களில் நடைபெறுவதை காணலாம். ஸ்ரீ சக்கரவழிபாடு இரவில் பூரணைத்திதி இருக்கும் பொழுதும், நவராத்திரி காலங்களிலும், செவ்வாய், வெள்ளி தினங்களிலும் அம்பிகைக்கு வழிபாடு நடப்பதை காணலாம். ஸ்ரீ சக்கரத்தின் பெருமையை அபிராமிப்பட்டர் தனது பக்திநிலையில் பாடிய அபிராமி அந்தாதியில் பத்தொன்பதாவது பாடலில் இயம்புகின்றார்.

வெளி நின்ற நின்றிரு மேனியை பார்த்தென் விழியுநெஞ்சும்
களிநின்ற வெள்ளங் கரை கண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானத் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளி நின்ற கோணங்களொன்பது மேவி உறைபவளே.

அம்பிகையின் அருளைப் பெற மூன்று விரதங்கள் உள்ளன. அவையாவன சுக்கிரவார விரதம், ஐப்பசி உத்தர விரதம், நவராத்திரி விரதம் என்பனவாம்.

**சுக்கிரவார விரதம்**

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்தாங் கமதம் மோடென்ன கூட்டினிலே

இந்தப்பாடலை பாடி முடிந்தவுடன் அம்பிகை தனது திருதோட்டை ஆகாயத்தில் வீசி தை அமாவாசை தினத்தை பூரணை தினமாக்கினார். இப்படியாக பக்தர்களின் பக்தியை மதித்து பக்தர்களை பரவசமூட்டும் அம்பிகையை சித்திரை மாத பூர்வபட்ச சுக்கிரவாரம் தொடக்கம் சுக்கிரவாரம் தோறும் அனுட்டி விரதமிருந்தால் கஷ்டம் நீங்கி நலமுடன் வாழலாம். இத்தினத்தில் பகலில் மட்டும் உணவு அருந்தலாம். இத்தினத்தில் அபிராமி அந்தாதி ஓதலாம்.

## ஐப்பசி உத்தர விரதம்

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்னனையாளைப் புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணந் தொழுமடியாரைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பகடூம் பதந்தருமே

விரிசடையோன் புல்லிய மென்முலை பொன்னனை யாளை புகழ்ந்து மறை சொல்லிய வண்ணம் தொழும் அடியார்கள் ஐப்பசி மாதத்தில் வரும் உத்தர நட்சத்திரத்தில் விரதம் அனுட்டிக்கலாம். இத்தினத்தில் விரதமிருந்து அம்பிகையிடம் வேண்டிய வரங்களைப் பெறலாம். இத்தினத்தில் பகலில் மட்டும் போசனம் செய்யவேண்டும். அன்றைய தினம் பால்ப்பாயாசம் வைத்து வெண்பூமாலை, வெண்பட்டு சாத்தி லலிதா சகஸ்ரநாம அர்ச்சனை செய்தால் நன்று.

பாயஸான்னப்பிரியா நம - (லலிதா ஸஹஸ்ரநாமம்)
சுக்ல வர்ணாயை நம - (மகா மாரி ஸஹஸ்ரநாமம்)

## நவராத்திரி விரதம்

வையந் துரகம் மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிரலை யாரம் பிறைமுடித்த
வையன் றிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யும் தவமுடையார்க்குள வாகிய சின்னங்களே.

தனந்தருங் கல்வி தருமொருநாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந்தரு நெஞ்சில் வஞ்சமில்லா
இனநதரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள பிராமி கடைக்கண்களே.

நான்மறை மறைபோற்றும் அம்பிகைக்கு சிறந்த விரதம் நவராத்திரி விரதமும் ஒன்றாகும். நவராத்திரி ஒன்பது இரவுகளாகும் முன்னொரு காலத்தில் கோசல நாட்டில் சுதர்சனன் என்னும் அரசன் இருந்தான் அவனை எதிரிகள் தாக்க முற்பட்டபோது அவன் துர்க்கையிடம் சரணடைந்தான். அம்பிகையும் அபயமளித்து எதிரிகளை ஓடும்படி செய்தான். அம்பிகையின் அருளால் கோசல நாட்டை ஆண்டுவந்தான். ஒருநாள் துர்க்கையம்பாள் அவனுக்கு காட்சி கொடுத்து அரசே நீர் அயோத்தி நகருக்கு சென்று அட்டமி, நவமி, சதுர்த்தசி ஆகிய தினங்களில் பூசைகள் தானங்கள் சிறப்புற செய்யவேண்டுமென்றும் சரத் காலத்தில் தனது பூஜையை விழா போல் கொண்டாடவேண்டுமென்றும்

சைத்திரம், ஆஷாடம், மாகம் ஆகிய இந்த மாதங்களும் மிக முக்கியமானவை என்பதை மறவாதே அம்மாதங்களிலும் பூஜையை வெகுவிமரிசையாக நடத்து என்று அம்பிகை அருள் மொழி பொழிந்தார் **சைத்திர மாதத்தில் (பங்குனி – சித்திரை) வருவது வசந்த நவராத்திரி** என்றும் **ஆஷாட மாதத்தில் (ஆனி – ஆடி) வருவது கிரீஷ்மருது நவராத்திரி** என்றும் **ஆஸ்வீஜ மாதத்தில் (புரட்டாதி – ஐப்பசி) வருவது (சரத்) சாரதா நவராத்திரி** என்றும் **மாக மாதத்தில் (தை – மாசி) வருவது சிசிரது நவராத்திரி** என்றும் சொல்லப்படுகின்றது. இந்த நான்கு விதமான நவராத்திரிகளும் சிலாபம் முனீஸ்வரத்திலும், கொழும்பு ஶ்ரீ மஹாகாளியம்மன் கோவிலிலும் நடைபெறுகின்றன.

மேற்குறிப்பிட்ட நான்கு நவராத்திரிகளில் ஆஸ்வீஜ மாதத்தில் (புரட்டாதி - ஐப்பசி) வரும் சாரதா நவராத்திரியிலே எங்கும் கொண்டாடப் படுகின்றது. இது புரட்டாதி மாதத்தில் வரும் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை தினத்தில் தொடங்கி வரும் மகா நவமி தினத்தில் முடிவடையும். மறுநாள் விஜயதசமி தினம். இந்த ஒன்பது நாட்களிலும் முதல் மூன்று நாட்களில் வீரத்தைத் தரும் துர்க்கையையும், அடுத்து மூன்று நாட்களில் செல்வத்தை தரும் லட்சுமியையும், இறுதி மூன்று நாட்களும் கல்வியைத்தரும் சரஸ்வதியையும் துதிக்க வேண்டும். ஒன்பதாம் நாள் மகாநவமி தினம். அன்றையதினம் ஆயுத பூஜை நடைபெறும். வீடுகளிலும், பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிலையங்களிலும், அரச திணைக்களங்களிலும், வர்த்தக நிலையங் களிலும் விஷேட பூசைகள், சங்கீத ஆராதனைகள் நடைபெறும். ஆலயங்களில் சண்டிஹோமம், ஶ்ரீ சக்கரபூஜை முதலியன சிறப்பாக நடைபெறும். இத்தினங்களில் கொலுவைப்பார்கள். நவராத்திரி தினங்களில் லலிதா ஸகஸ்ரநாமம், அபிராமி அந்தாதி, துர்க்காஸ் தோத்திரம், கனகதாரா தோத்திரம், சரஸ்வதி அந்தாதி, முத்துசாமி தீட்சதரின் நவாவர்ணக் கீர்த்தனைகள் பாடி துதிப்பார்கள். மறுநாள் விஜயதசமி தினம், இத்தினத்தில் மகிடாசுர சங்காரம் நடைபெறும். ஆலயங்களில் இதனை ஞாபகமூட்டும் வண்ணம் வாழைவெட்டு நடைறெம். அன்றைய தினம் புதிய கருமங்கள் ஆரம்பிப்பார்கள் குழந்தைகளுக்கு ஏடு தொடக்குவார்கள்.

நவராத்திரி விரதம் முதலெட்டு நாளும் பலகாரம் அருந்தி இறுதி நாளான நவமி தினத்தில் உபவாசம் இருத்தல் வேண்டும்.

குழையத் தழுவிய கொன்றுயந்தார் கமழ் கொங்கை வல்லி
கழையைப் பொரு திருநெடுந்தோளுங் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையு
முழையைப் பொரு கண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றதுமே

*(அபிராமி அந்தாதி)*

சைத்திரம், ஆஷாடம், மாகம் ஆகிய இந்த மாதங்களும் மிக முக்கிய மானவை என்பதை மறவாதே அம்மாதங்களிலும் பூஜையை வெகுவிமரிசையாக நடத்து என்று அம்பிகை அருள் மொழி பொழிந்தார் **சைத்திர மாதத்தில் (பங்குனி – சித்திரை) வருவது வசந்த நவராத்திரி** என்றும் **ஆஷாட மாதத்தில் (ஆனி – ஆடி) வருவது கிரீஷ்மருது நவராத்திரி** என்றும் **ஆஸ்வீஜ மாதத்தில் (புரட்டாதி – ஐப்பசி) வருவது (சரத்) சாரதா நவராத்திரி** என்றும் **மாக மாதத்தில் (தை – மாசி) வருவது சிசிரது நவராத்திரி** என்றும் சொல்லப்படுகின்றது. இந்த நான்கு விதமான நவராத்திரிகளும் சிலாபம் முனீஸ்வரத்திலும், கொழும்பு ஸ்ரீ மஹாகாளியம்மன் கோவிலிலும் நடைபெறுகின்றன.

மேற்குறிப்பிட்ட நான்கு நவராத்திரிகளில் ஆஸ்வீஜ மாதத்தில் (புரட்டாதி - ஐப்பசி) வரும் சாரதா நவராத்திரியிலே எங்கும் கொண்டாடப்படுகின்றது. இது புரட்டாதி மாதத்தில் வரும் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை தினத்தில் தொடங்கி வரும் மகா நவமி தினத்தில் முடிவடையும். மறுநாள் விஜயதசமி தினம். இந்த ஒன்பது நாட்களிலும் முதல் மூன்று நாட்களில் வீரத்தைத் தரும் துர்க்கையையும், அடுத்து மூன்று நாட்களில் செல்வத்தை தரும் லட்சுமியையும், இறுதி மூன்று நாட்களும் கல்வியைத்தரும் சரஸ்வதியையும் துதிக்க வேண்டும். ஒன்பதாம் நாள் மகாநவமி தினம். அன்றையதினம் ஆயுத பூஜை நடைபெறும். வீடுகளிலும், பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிலையங்களிலும், அரச திணைக்களங்களிலும், வர்த்தக நிலையங்களிலும் விஷேட பூசைகள், சங்கீத ஆராதனைகள் நடைபெறும். ஆலயங்களில் சண்டிஹோமம், ஸ்ரீ சக்கரபூஜை முதலியன சிறப்பாக நடைபெறும். இத்தினங்களில் கொலுவைப்பார்கள். நவராத்திரி தினங்களில் லலிதா ஸகஸ்ரநாமம், அபிராமி அந்தாதி, துர்க்காஸ் தோத்திரம், கனகதாரா தோத்திரம், சரஸ்வதி அந்தாதி, முத்துசாமி தீட்சதரின் நவாவர்ணக் கீர்த்தனைகள் பாடி துதிப்பார்கள். மறுநாள் விஜயதசமி தினம், இத்தினத்தில் மகிடாசுர சங்காரம் நடைபெறும். ஆலயங்களில் இதனை ஞாபகமூட்டும் வண்ணம் வாழைவெட்டு நடைறெும். அன்றைய தினம் புதிய கருமங்கள் ஆரம்பிப்பார்கள் குழந்தைகளுக்கு ஏடு தொடக்குவார்கள்.

நவராத்திரி விரதம் முதலெட்டு நாளும் பலகாரம் அருந்தி இறுதி நாளான நவமி தினத்தில் உபவாசம் இருத்தல் வேண்டும்.

குழையத் தழுவிய கொன்றையந்தார் கமழ் கொங்கை வல்லி
கழையைப் பொரு திருநெடுந்தோளுங் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையு
முழையைப் பொரு கண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றதுமே

## சுப்பிரமணிய விரதம்

**மூவிரு முகங்கள் போற்றி, முகம் பொழி கருணைபோற்றி**
**ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி**
**மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்**
**சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி.**

பார்வதி தேவி தாட்சாயினி என்னும் நாமம் பூண்ட அவதாரத்தை யோகாக்கினியில் பூர்த்தி செய்து விட்டு இமயமலை அரசன் புத்திரியாக அவதாரம் செய்தார். அவர் சிவனை நோக்கி தவம் செய்து பங்குனி உத்தர தினத்தில் சிவபெருமானை திருமணம் செய்து கொண்டார். இத்திருமணத்தின் பின் சிவபெருமானும் பார்வதியும் கயிலையில் இருக்கும் காலத்தில் தேவர்கள் சிவபெருமானை நோக்கி எம்பெருமானே சூரன் முதலிய அசுரர்களால் பெருந்துன்பமடைகின்றோம். இத்துன்பக் கடலிலிருந்து விடுபட உமக்கு ஒப்பான திருக்குமரரைத் தந்தருள்க என்று வேண்டிக் கொண்டனர். சிவபெருமான் அவர்களை நோக்கி நீங்கள் கவலைப்படவேண்டாம் உங்களின் வேண்டுதலால் ஒரு புதல்வனை தருவோம் என்று கூறினார்.

சிவபெருமான் அம்பிகையுடன் இருக்கும்போது தேவர்களின் குறைதீர்ப்பதற்காக நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு அருட்பெரும் ஜோதிப் பொறிகளை தோற்றுவித்தார். அப்பொறிகள் எவர்க்கும் தீங்கு செய்யவில்லை ஆனால் எல்லோருக்கும் அச்சத்தை உருவாக்கியது. அம்பிகையினாலும் வெப்பத்தை தாங்க முடியவில்லை. அந்த ஆறு அருட்பெரும் ஜோதிப்பொறிகள் சிவபெருமான் முன்னிலையில் வந்தன. சிவபெருமான் ஆணைப்படி வாயுதேவனும் அக்கினிதேவனும் அந்த ஆறு பொறிகளையும் கங்கையில் சேர்ப்பித்தனர். ஆறு பொறிகளும் கங்கையிருந்து சரவணப் பொய்கையை வந்தடைந்தன. அந்த ஆறுபொறிகளும் சிவபெருமான் திருவருளால் ஆறுமுகங்களும் பன்னிருகரமும் கொண்டு உலகம் உய்ய ஒரு திருமுருகன் உதித்தனன்

**அருவமுமுருமாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்**
**பிரமமாய் நின்ற சோதிப்பிழம்ப தோர் மேனியாகக்**
**கருணை கூர்முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டு கொண்டே**
**யொரு திருமுருகன் வந்தாங்கு குதித்தனன் உலகமுய்ய.**

இந்த ஆறு முப்பிளம்பு கங்கையில் சேர்கின்ற காட்சியை நல்லூர் முருகன் ஆலயத்தில் நடைபெறும் மஹோற்சவ காலத்தில் வரும் கார்த்திகை உற்சவ தினத்தன்று மாலையில் தீர்த்த கேணியில் நடைபெறுவதைக் காணலாம்.

முருகனுக்கு முகங்கள் ஆறு : ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம், ஆறாவது முகம் அதோமுகம்.

படைவீடுகள் ஆறு : திருபரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவின் குடி, திருவேரகம், குன்று தோறாடல், பழமுதிர்சோலை

அருணகிரிபாடிய நூல்கள் ஆறு : திருப்புகழ், திருவகுப்பு, வேல் மயில் சேவல் விருத்தம், கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி.

மற்றும் நூல்கள் ஆறு : கந்தர்ஷஷ்டி கவஷம், கந்தகுருகவஷம், சண்முககசஷம், திருமுருகாற்றுப்படை, கந்த கலிவெண்பா, பகழிக்கூத்தரின் பிள்ளைத்தமிழ்.

முருகன் பற்பல திருவிளையாடல்களை செய்யும் பொழுது ஒரு சமயம் பிரமனை சிறையிலிட்டார். அந்தச் சூழ்நிலையில் சிவபெருமானுக்கு முருகப்பெருமான் பிரணவ உபதேசம் செய்தார்.

**" ஈசனொடு ஞானமொளி பேசு முகமொன்றே"**

பின் தாரகாசுரனை வதம் செய்து அவனை ஐயனாருக்கு யானை வாகனமாக்கினார். பின் முருகப்பெருமான் சூரனை வதம் செய்வதற்காக கதிர்காமத்தில் (ஏமகூடம்) யுத்தப் பாசறை அமைத்தார். இதனை ஒற்றர்கள் மூலம் அறிந்த சூரன் தனது சாகாக்களுடன் மந்திராலோசனை செய்தார். அதில் எல்லோரும் சூரனுக்கு உற்சாகமூட்டினர். ஆனால் அவன் தம்பியாகிய சிங்கமுகாசுரன் மட்டும் சூரனுக்கு நற்புத்திகளை கூறினான். மூவரில் காசிபமுனிவரின் உபதேசம் சிங்கமுகாசுரனுக்கு மட்டும் மனதில் நிலை கொண்டது. ஆகையால் முருகப் பெருமான் ஞானமே வடிவானவர் அவருடன் போராடாதே தேவர்களை விடுதலை செய் என்று அறிவுரை கூறினார். சூரனுக்கு அது செவியில் ஏறவில்லை ஆணவ வடிவமானவர்களுக்கு அஞ்ஞானத்தை தவிர மெய்ஞானம் நெஞ்சில் ஊடுருவமாட்டாது.

**வேதக் காட்சிக்கும் உபநிடதத்துச்சியில் விரிந்த**
**போதக் காட்சிக்கும் காணலன் புதியரில் புதியன்**
**மூதக் கார்க்கு மூதக்கவன் முடிவிற்கு முடிவாய்**
**ஆதிக்காதியாய் உயிர்க்குயிராய் நின்ற அமலன்.**

(சூரன் அமைச்சியபடலம்)

சூரனும் நாரதரின் அறிவுரையின் படி முருகப் பெருமானுடன் யுத்தம் புரியலானார். யுத்தத்தில் சூரனின் பிள்ளைகளுள் இரணியனைத் தவிர எல்லோரும் மாண்டார்கள் பின் தம்பியாகிய சிங்கமுகாசுரனும் முருகப்பெருமானுடன் போர் புரிந்தான் அவனும் மாண்டான். அவன் அம்பிகைக்கு சிங்கவாகனமானான். இறுதியாக சூரன் முருகப் பெருமானுடன் போருக்கு வந்தான் பல விதமாயப் போரிந்து எல்லா வற்றையும் இழந்து நின்றான். முருகப் பெருமான் அவன்மேல் கருணை கொண்டு அவனுக்கு ஞான அறிவினையூட்டி எனது திருப்பெரு வடிவத்தை நீ செய்த தவத்தின் பயனாகப்பார் என்று கூறி சூரனை வணங்கச் செய்தார்.

**திருப்பெருவடிவம் (இதனை விரத காலங்களில் படித்தல் நன்று)**

முருகப்பெருமானின் திருவடியின் உட்பக்கத்தில் மலைகளும், புறப்பக்கத்தில் கடல்களும், பாதவிரல்களில் இடியும் நட்சத்திரங்களும் கிரகங்களும் அடங்கியிருந்தன. பரட்டில் நிருதி முதலிய அசுரர்களும் வருணனும் குபேரனும், கணைக்கால்களில் முனிவர்களும் சிந்தாமணி முதலிய மணிகளும் இருந்தன. முழந்தாளில் வித்தியாதரர் முதலியவர்களும், தொடையில் இந்திரனும் சயந்தனும், தொடை மூலத்தில் இயமனும் காலனும் அடங்கியிந்தனர். அரையின் முற்பக்கத்தில் அசுரர்களும் விலாப்புறத்தில் தேவர்களும், மூலாதரத்தல் நாகர்களும் குறியில் அமிர்தமும் நாபில் உயிர்வர்க்கங்களும் மார்பில் சகல கலைகளும் உபவீதத்தில் ஞானமும், அடங்கியிருந்ததை கண்டான் உரோமத்தில் அண்டங்களும் அங்கையில் சகல போகங்களும் அடங்கியிருந்தன. தோள்களில் பிரம்மாவும், விஷ்ணுவும் அடங்கினர். கைவிரல்களில் தெய்வப் பெண்களும் கண்டத்தில் ஒலியின் கூட்டங்களும், அக்கினியும் வாயில் வேதங்களும், பற்களில் அட்சரங்களும், நாவில் சிவாகமங்களும், உதட்டில் ஏழு கோடி மந்திரங்களும், நாசியில் வாயுவும், கண்களில் சூரிய சந்திரர்களும், காதுகளில் திக்குகளும் அடங்கியிருந்தன. நெற்றியில் பிரணவமும் தலையில் பரமசிவமும் பொருத்தித் தோன்றியதும் அனந்த கோடி சூரியர்களும் ஒருங்கே கூடினாற் போல் பேரொழியுடன் கூடிய ஒப்பற்ற விசுவரூபத்தை கண்டதும் சூரனின் அறிவு தெளிந்தது முருகப் பெருமானின் அழகைப் புகழ்ந்தான்.

**கோலமா மஞ்சை தன்னில் குலவிய குமரன் தன்னைப்**
**பாலன் என்றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்திலேனால்**
**மாலயன் தனக்கும் ஏனைவானவர் தமக்கும் யார்க்கும்**
**மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தியன்றோ.**

இக் காட்சியைக் கண்டதும் சூரன் தன்னை மறந்தான் ஞானமே வடிவானான். சிறிது நேரத்தின் ஞானம் நீங்கி போர் புரியலானார். முருகப்பெருமானுடன் கடுஞ்சமர் புரிந்து ஞான வடிவான வேலால் சேவலும் மயிலுமானான். தேவர்களின் இடர் களையப்பட்டது. வீரமகேந்திர புரியை கடல் உட்கொண்டது திருச்செந்தூரில் சிவபூசை செய்த பின்

திருப்பரங்குன்றத்தை முருகப்பெருமானும் அவரின் பரிவாரங்களும் சென்றடைந்தனர். திருப்பரங்குன்றத்தில் இந்திரன் மகளாகிய தெய்வயானை அம்மனுக்கும் முருகப்பெருமானுக்கும் திருமணம் நடந்தேறியது. திருமாலின் மறு அவதாரமான சிவமுனிக்கும் லட்சுமியின் மறு அவதாரமான மானின் வயிற்றில் இருந்து வள்ளிக்கிழங்கு அகன்ற குழிக்குள் பிறந்து நம்பி என்னும் வேடனால் வளர்க்கப்பட்ட வள்ளிக்கும் முருகப்பெருமானுக்கும் திருமணம் நடைபெற்றது. முருகப்பெருமானின் திருவருளைப் பெறுவதற்கான விரதங்கள் மூன்று வகைப்படும். அவையாவன சுக்கிரவாரவிரதம், கார்த்திகைவிரதம், ஸ்கந்தஷஷ்டி விரதம் என்பனவாம்.

### சுக்கிரவாரவிரதம்

ஐப்பசி மாதம் முதற் சுக்கிரவார விரதம் தொடக்கம் ஒவ்வோரு சுக்கிரவாரம் தோறும் முருகப்பெருமானைக்குறித்து அனுஷ்டிக்கும் விரதமாகும். இவ் வார தினத்தில் உபவாசம் இருத்தல் நன்று அதற்கு இயலாதவர்கள் இரவில் பழம் முதலியன உட்கொள்ளலாம் அதற்கும் இயலாதவர்கள் பகலில் போசனம் செய்யலாம். இவ் விரதம் தொடர்ந்து மூன்று வருடங்கள் இருத்தல் வேண்டும்.

### கார்த்திகை விரதம்

கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரம் முதலாக ஒவ்வொரு மாதம் தோறும் வரும் கார்த்திகை நட்சத்திர தினம் தோறும் சுப்பிரமணிய கடவளை நினைந்து அனுஷ்டிக்கும் விரதமாகும். இத் தினத்தில் உபவாசம் இருத்தல் உத்தமம். அதற்கு இயலாதவாகள் பழம் முதலியன உட் கொள்ளலாம். இவ் விரதம் பன்னிரண்டு வருடம் அனுஷ்டிக்க வேண்டும்.

இவ் விரதம் யாழ்ப்பாணத்து மக்கள் பரணி தினத்தன்று பகலில் ஒன்றும் அருந்தாது மாலை குத்துவிளக்குஏற்றி உணவு அருந்துவார்கள். மறுநாள் கார்த்திகை தினத்தன்று உபவாசம் இருந்து அல்லது பால் பழம் அருந்தி சண்முகப்பெருமானுக்கு தேனும் தினைமாவும் சர்க்கரையும் குழைத்து தீப வடிவமாக்கி நெய் விட்டு பஞ்சுத்திரி போட்டு மாவிளக்கு ஏற்றுவார்கள். மறுநாள் காலை பாறணை பண்ணுவார்கள்.

மா விளக்கு முருகன் ஆலயங்களில் மகோற்சவ காலங்களிலும் ஏற்றுவார்கள். மாவிளக்கு கந்தன் என்று மாவிட்டபுரத்து கந்தனை அழைப்பர்கள். அங்கு மகோற்சவ காலங்களில் கார்த்திகை தினத்திலும் கார்த்திகை மாதத்து கார்த்திகை தினத்திலும் உள் வீதி முற்றும் மா விளக்கு எரிவதைக் காணலாம். முருகன் ஆலயங்களில் மகோற்சவ காலங்களில் வீதிகளை காவடிகள் அலங்கரிப்பதைக் காணலாம்.

கந்தவனக்கடவை, அருக்கொணாமலை ஆகிய தலங்கள் மீது ஆகிய முருகன் தலங்கள் மீது திருப்புகழ் பாடியுள்ளார்.
(அருக்கொணாமலை - காங்கேசன்துறைச் சந்திக்கும் கீரிமலைக்கும் இடையில் உள்ள முருகன் ஆலயம்)
(ஆதாரம் - வாரியாரின் திருப்பகழ் விரிவுரை)

**கந்தஷஸ்டி விரதம்**

**நற்துலை மாதந் தன்னினனி மதி வளருகின்ற**
**முற்பிரதமையேயாதி மூவிருதினமுமீசன்**
**சற்குருவான செவ் வேடனது நேன்பாகும் பூசை**
**யற்பினாற் செவாரராயினவர் பலனை றை யொணாதே** *(சரசோதி மாலை)*

இவ் விரதம் ஐப்பசி மாதப் பிரதமை (கிருத்திகா மாதப் பிரதமை) முதல் ஷஷ்டியீறாக ஆறு நாட்கள் அடங்கிய விரதமாகும். சில சமயங்களில் ஐந்து நாட்களும் வருவதுமுண்டு. ஏழு நாட்களும் வருவதுமுண்டு. இவ் விரதம் ஆறு நாட்களிலும் உபவாசம் இருத்தல் நன்று. இவ் விரததினத்திற்கு முதல் நாள் ஒரு பொழுதுண்டு ஆறு நாட்களும் உபவாச விரதத்தை மேற்கொள்ளல் வேண்டும். இம் முறையினை பின் பற்ற முடியாதவர்கள் முதல் ஐந்து நாளும் பால் பழம் அல்லது பலகார உணவினை அருந்தலாம். இதற்கும் இயலாதவர்கள் முதல் ஐந்து நாட்களிலும் சாதம் அருந்தி கடைசி நாள் பால் பழம் அருந்தலாம். ஏழும் நாள் பாறணை செய்ய வேண்டும். அன்றய தினம் இந்த ஆறு நாளும் முருகனுக்கு அபிஷேகம் ஆராதனை அர்ச்சனை செய்து குருக்களுக்கு இயன்றளவு தட்சணை. தானங்கள் வழங்க வேண்டும்.

இத் தினங்களில் ஸ்கந்தஷஷ்டி கவசம் படிப்பார்கள் மற்றும் முருகனுக்குரிய தோத்திரம் படிப்பார்கள், திருச்செந்தூர் புராணம் படிப்பார்கள், கந்த புராணம் சூரபத்ம வதைப்படலம் படிப்பார்கள். ஐந்தாம் நாள் சூரபத்மன் ஞான அறிவுடன் காணும் முருகனின் திருப்பெரு வடிவத்தை விரிவுரை செய்வார்கள். ஆறாம் நாள் சூரபத்மன் சேவலும், மயிலுமான காட்சியுடன் நிறைவு செய்வார்கள். இவ் விதம் ஆறு வருடங்கள் இருத்தல் வேண்டும். மாதம் தோறும் வரும் பூர்வபட்ச ஷஷ்டி தினத்திலும் விரதம் இருத்தல் வேண்டும்.

**தீயவை புரிந்த ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்**
**துயவராகு மேலைத் தொல் கதி யடைவர் என்கை**
**ஆயவும் வேண்டு கொல்லோ அடுசமர் இந்நாள் செய்த**
**மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்**

**ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பை**
**கூறு செய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்**
**ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கு வாழ்க**
**மாறில்லா வள்ளி வாழ்க சீர அடியார் எல்லாம**

# கந்த சஷ்டி கவசம்



### குறள் வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம்,
நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்,
நிஷ்டையுங் கைகூடும்,
நிமலர் அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

### காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

### நூல்

### 1 திருப்பரங்குன்றம்

திருப்பருங்குன்றுரை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா
குறுக்குத்துறையுறை குமரனே அரனே
இருக்கும் குருபரா ஏரகப்பொருளே

வையாபுரியில் மகிழ்ந்து வாழ்பவனே
ஒய்யார மயில் மீது உகந்தாய் நமோ நமோ
ஐயா குமரா அருளே நமோ நமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ

பழநியங்கிரிவாழ் பகவா நமோ நமோ
மழுவுடை முதல்வன் மதலாய் நமோ நமோ
விராலிமலையுறை விமலா நமோ நமோ
மராமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ

சூரசங் காரா துரையே நமோ நமோ
வீரவேலேந்தும் வேளே நமோ நமோ
பன்னிரு கரமுடைப் பரமா நமோ நமோ
கண்களீராறுடை கந்தா நமோ நமோ

கோழிக்கொடியுடைக் கோவே நமோ நமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோ நமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம்ரீம்

வவவ வவவ ஆம் ஹோம்
ணணண ணணண வாம்ஹோம்
பபப பபப சாம் சூம்
வவவ வவவ கௌம் ஓம்

லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக

பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருக நிஷ்களங்கனே வருக
தாயென நின்னிருதாள் பணிந்தேன் எனைச்

சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினமும் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்லவிடங்கள் வாராமல் தடுத்து

நல்ல மனத்துடன் ஞானகுரு உனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்துநீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா

நந்தன் மருகா நாரணி சேயே
என்னிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமிநாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர்

தவக்கதிர் காமம் சார் திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்
விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லா த் தலங்களைக் கொ ண்டு

சன்னதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக் (கு) அன்புடன் தமிழைச்
செகத்தொர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆடும் சிதம்பர சக்கரம்

நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொருளோனே
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி

பக்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
அத்தன் அரி அயன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரைமாக் கலைகளும்

தானே நானென்று சண்முகமாகத்
தாரணியுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத்துள்ள புண்ய தீர்த்தங்கள்

ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிஷ்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்

எள்ளினுள் எண்ணெய் போலெழிலுடை உன்னை
அல்லும் பகலும் ஆசாரத்துடன்
சல்லாப மாய் உனைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி

பல்லா யிர நூல் பகர்ந்தருள்வாயே
செந்தில்நகர் உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே
சரணம் சரணம் சரஹணபவ ஓம்

அரன்மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரஹணபவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

## இரண்டாவது கவசம்
## திருப்புகலூர்

சஷ்டியை நோக்கச் சரஹணபவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட

மைய நடஞ்செயும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக்காக்கவென்று வந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திரவடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹணபவனார் சடுதியில் வருக

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவஹ வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென

வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும், உயிரையுங் கிலியும்

கிலியுங் சௌவும் கிளரொளியையும்
நிலை பெற்றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவகுகன் தினம் வருக

ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பண்ணிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்

ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்ப ழகுடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நல் சீராவும்

இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து

என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று

உன்றிருவடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக்காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க

நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவை செவ்வேல் காக்க

கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங்கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறியிரண்டும் அயில்வேல் காக்க

பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க

நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப்பேய்கள்

அல்லல்படுத்தும் அடங்காமுனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடைமுனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கருதரும்

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டா ளர்களும்
என் பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்

ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும்அஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட

படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு

முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்குசெக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்றுபற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்

எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க

ஒளுப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலையங் சயங்குன்மம் சொக்குச் சிறங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பல்குத்து அரணை பருஅரை ஆப்பும்
எல்லாப்பிணியும் என்றனைக் கண்டால்

நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரஹணபவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே

அரிதிரு மருகா அமராபதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை

இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா

ஆவினன்குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா
சமராபுரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்

என் நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்

மெத்தமெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்கவாழ்க மயிலோன் வாழ்க
வாழ்கவாழ்க வடிவேல் வாழ்க

வாழ்கவாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்கவாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்கவாழ்க வாரணத் துவஜம்
வாழ்கவாழ்க என் வறுமைகள் நீங்க

எத்தனைகுறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே

பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென்மீதுன் மனமகிழ்ந் தருளி
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிகவசம் விரும்பிய

பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடனொரு நினைவதுமாகிக்

கந்தர் சஷ்டிக்கவசமிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றலரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாம் கவசத் தடியை
வழியாய்க்காண மெய்யாய் விளங்கும்

விழியால்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தெனதுள்ளம் அட்டலட்சு மிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த

குருபரன் பழநிக் குன்றிலி ருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி

தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ்கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி

கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனகசபைக்கோ ரரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்

சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

## மூன்றாவது கவசம்
## திருவாவினன்குடி தெண்டபாணி

திருவாவினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணை சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா

பரமேஸ் வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக் (கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டா யிரம் வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா றுகமனம் தீர்க்கம் படைத்தவா

இலட்சத்திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத்துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூர சங்காரா துஷ்ட நிஷ்டூரா

கயிலாய மேவும் கனக சிம்மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக் (கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முறுகாற் றுப்படை சொல்லிய

நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா
திருவருணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா

ஆயிரத்தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம் சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா

குருவாம் பிரமனைக் கொடும்சிறை வைத்தே
உருபொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்

கருதிமெய் யோகம்சொல்லியது ஒருமுகம்
அருள்பெறு மயில்மீ (து) அமர்ந்த (து) ஒருமுகம்

வள்ளிதெய் வானையை மருவிய (து) ஒருமுகம்
தெள்ளுநான்முகன் போல் சிருட்டிப்ப (து) ஒருமுகம்
சூரனை வேலால் துணித்த (து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்

தானவர் வேண்டுவ தருவ (து) ஒருமுகம்
ஞானமுதல்வருக்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோ நம
பொருட் செந்தில் அம்பதி புரப்பாய் நமோ நம

ஏரகம் தனில்வாழ் இறைவா நமோநம
கூரகம் ஆவினன்குடியாய் நமோநம
சர்வ சங்கரிக்குத் தனயா நமோநம
உறுசோலைமலைமேல் உகந்தாய் நமோநம

எல்லாக்கிரிக்கும் இறைவா நமோ நம
சல்லாப மாக சண்முகத்துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந்தருளி
உல்லாசத்துறும் ஓங்கார வடிவே

மூல வட்டத்தில் முளைத்தெழும் ஜோதியை
சாலமுக்கோணத் தந்தமுச் சக்தியை
வேலாயுதமுடன் விளங்கும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை

கைலாச மேருவாகாசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற்கோணத்தில் நளினமாய் அர்ச்சனை

கங்கையீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை

அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி

வாய் அறுகோணம் மகேசுவரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்
ஆகாச வட்டத் (து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை

தந்திர அர்ச்சனை தலைமேல்கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக்கட்டி
அக்கினி குதிரை ஆகாசத்தேவி
மிக்கமாய்க் கருநெல்லிவெண்சாரை உண்பவர்

பாகமாய் ரதமும் பகல்வழியாவர்
சாகாவகையும் தன்னை அறிந்து
ஐந்து ஜீவனுடன் ஐயஞ்சு கற்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி

சந்திர சூரியர் தம்முடன் அக்கினி
அந்திரனைக்கண் (டு) அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவ என்று

தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறுமுகமாய் அகத்துளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன் விளையாடி

மேலைக்கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக்குழந்தை வடிவையும் காட்டி
நரைதிரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செய்பி

மனத்தில்பிரியா வங்கண மாக
நினைத்தபடிஎன் நெஞ்சத்திருந்து

அதிசயம் என்றுன் அடியார்க் (கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து

நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்து ஆறு முகமும்
மாறாதிருக்கும் வடிவையும் காட்டி

கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னே வந்து

அஷ்டாவ தானம் அறிந்துடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிரபந்தம்

எழுத்துச் சொற்பொருள் யாப்பலங்காரம்
வாழ்த்தும் என் நாவில்வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்க்கு வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென

வச்சிர சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக்குதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்ல உன் பாதமும் நாடியபொருளும்

சகலகலை ஞானமும் தானெனக் கருளிச்
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்

கிட்டவேவந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அனேக மூர்க்கமாய்

துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடை பூதமும்

வேதாளம் கூளிவிடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துன்பப் பிசாசுகள் நடுங்க
பதைபதைத்தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித் (து) அங்கு உருட்டி நொறுக்கிச்

சூலத்தால் குத்தித் தூளுதூ ளுருவி
வேலா யுதத்தால் வீசிப்பருகி
மழுவிட்டேவி வடவாக்கினி போல்
தழுவிஅக் கினியாய்த் தானே எரித்துச்

சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீரபத்திரன் சக்கரம்

திருவைகுண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்

ஏக ரூபமாய் என்முன்னே நின்று
வாகனத் துடன் என் மனத்தில் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவும் உச் சாடனம்

வம்பதாம் பேதானம் வலிதரு (ம்) மாரணம்
உம்பர்கள் ஏத்தும் உயிர்வித் வேடனம்
தந்திர மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி உடனே செபித்துக்

கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண் டியதும்

தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்
சந்தம் எனக்கருள் சண்முகா சரணம்

சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்குரு சங்காரா
சரணம் சரணம் சரவணபவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

**நான்காவது கவசம்**
**திருவேரகம் ... சுவாமிமலைக் குருநாதன்**

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கா ரமாக உதயத் தெழுந்தே
ஆங்கா ரமான அரக்கர் குலத்தை

வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்ட துண் டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே

நான்கு மறைகள் நாடியே தேடும்
மான் மருகோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆணவம் நண்ணிடா (து) என்னை
காணநீ வந்து காப்பதுன் கடனே

காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் புதல்வா புனித குமாரா
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி

... ஏகாட்சரமாய் ... எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதல் பொருளே
... துவியட் சரத்தால் ... தொல்லுல (கு) எல்லாம்
அதிசயமாக அமைத்தவா போற்றி

... திரியட் சரத்தால் ... சிவனயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மையுற் றவனே
... சதுரட் சரத்தால் ... சாற்றுநல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே

... பஞ்சாட் சரத்தால் ... பரமன் உருவதாய்த்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத் (து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்

ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அகன்ற மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்

சரவணை வந்த சடாட்சரப் பொருளே
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும்ஆ யுதத்தால்
தரங்குலைந் (து) ஓடத் தாரகா சுரன்முதல்

வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தாய்
சீர்த் திருச் செந்தூர்த் தேவசே னாபதி
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகளருள் ஈசன் புதல்வா

துட்டசங் காரா சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர

சைவம் வைணவம் சமரச மாகத்
தெய்வமாய் விளங்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க் (கு) அருளும் ஈசா போற்றி

ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ (டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்ரகம் செய்வாய்

பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோ (டு) என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற

கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிவே தாளம்

சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியொடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்
மூலரோ கங்கள் முடக்குள் வலிப்பு

திட்டு முறைகள் தெய்வத சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்

உன்னுடை நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுடன் கடனே செந்தில் நாயகனே
தெய்வநா யகனே தீரனே சரணம்

சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம் ...

## ஐந்தாவது கவசம்
## குன்றுதோறாடும் குமரன்

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமர குருபரா
வள்ளிதெய் வானை மருவிய நாயகா
துள்ளிமயி லேறும் சுப்பிர மணியா

அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியனு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகவா

சண்முகநதியும் சராபன்றி மலையும்
பன்முகம் நிறைந்த பழனிக்கு ,றைவா
ஆறாறு நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா

ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்

வடிவம் சிறந்த மகர குண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண் ணதீறணி திருநுதல் அழகும்
கருணைபொழியும் கண்ணான்கு மூன்றும்

குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் ,தழும்
வெண்ணிலாப் பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் ,லங்குபல் வரிசையும்

காரிகை உமையாள் களித்தே ,னிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநா யகியாள்

பார்த்தழ கென்னப் பரிந்த கபோலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்

முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கும் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈஸ்வரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈஸ்வரன் வடிவை மிகக்கண் டனுதினம்

கையால் எடுத்து கனமார் (பு) அணைத்தே
ஐயா ... குமரா ... அப்பனே ... என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
கார்த்திகே யாஎனக் கருணையால் கொஞ்சி

முன்னே கொட்டி முருகா ... வருகவென் (று)
அந்நேரம் வட்டமிட்டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக

தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவியவே லேந்தும் .றைவா வருக
கூவிய சேவல் கொடியோய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக

அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணைப் புண்ணியா வருக
அழகில் சிவனொளி அய்யனே வருக
கலபம் அணியுமென் கந்தனே வருக

மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக

சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென

சேலில்சதங்கை சிலம்பு கலீரென
.டும்பனை மிதித்ததோர் ,லங்கிய பாதமும்

அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் ,ரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி

பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்

ஒருகோடி சூரியன் உதித்த பிரபை போல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
ஒருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும்

வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலமும் நவரோம பந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புனுகு பரிமளம் பொருந்திய புயமும்

ஒழுகிய சந்தனம் உயர்கஸ்தூரியும்
வலம்புரி சங்கொலி மணியணி மிடறும்
நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்

ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணி பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்

கருணைபொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்

நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்

ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திர வாள் ஒருகை மாமழு
ஒருகை மேல்குடை ஒருகை தண்டாயுதம்

ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்
அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் முருகா சரவணை

.ருக்கும் குருபரா ஏழைபங் காளா
வானவர் முனிவர் மகிழ்ந்துகொண் டாடத்
தானவர் அடியர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்ய

சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட பைரவர் ஆனந்தமாட
துஷ்டமிகுஞ் சூளிகள் சூழ்திசை காக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்

சித்தர் கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்ததா ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்

நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லஷ்மி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
.டும்பா யுதன்நின் .ணையடி பணிய

ஆடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் ஜெயஜெய என்ன

ஏவல் கணங்கள் ,ந்திரர் போற்ற
கந்தர்வர் பாடிக் கவரிகள் வீசிச்

சார்ந்தனம் என்னச் சார்வரும் அநேக
பூதம் அடிபணிந் தேத்தவே தாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொண் டாட
அரகர என்றடியார் ஆலவட்டம் பிடிக்க

குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
,டை விடாமல் உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேந்த

நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க

மங்கள மாக வைபவம் ,லங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் ,லங்க
நந்திகே சுவரன்மீது ஏறிய நயமும்

வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீரமயி லேறி வெற்றிவேல் எடுத்துச்

சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலறக் குலத்தை அறுத்துச் சயித்து

விடுத்தவே லாயுதம் வீசிக்கொக் கரித்துத்
தம்ப மெனும் சயத் தம்பம் நாட்டி

அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்பதி செந்தூர்

திருவாவி நன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலிமலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவும் கயிலை

கண்ணிய மாவூற்றுக் கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்

பதினா லுகத்திலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவ னாயிருந் (து) அடியர்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க ...
கேட்ட வரமும் கிருபைப் படியே

தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய்எனக் (கு) அருள்சண் முகனே

சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம் ...

**ஆறாவது கவசம்**
**பழமுதிர்சோலை பரமகுரு**

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே ... ... 4

பழநி மாமலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்

சரவணபவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்

சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்

திகழொளி பவனே சேவல்கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத் தருளே

சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் வவ்வுமாய் பழமுதிர் சோலையில்
தவ்வியே ஆடும் சரவண பவனே

குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்ச மென்றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய்ச் சென்றங் (கு)
அஞ்சலி செய்தவள் அமுதமும் உண்டு

கார்த்திகை மாதர் கனமார் (பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடை வீரவாகுவோ (டு) ஒன்பான்

தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிர தாயா சண்முகா வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்

பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ் வேதனை

ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்க
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை

அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே
மமதைசேர் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேக மதாக
உமையுடன் வந்தினி துவந்து பரிந்து

அயனைச் சிறைவிடென் (று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண் டிதனே ...
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைம களுடனே

அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல
ஆறு முகத்துடன் அவதரித் தோனே
சிங்க முகாசுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்

சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ் வமரர்கள் தமக்குச்

சேனா பதியாய்த் தெய்வீக பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெரும ...
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவேரக முதல்

எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென் (று) ஓதினார் சமயம் அறிந்தங் (கு)

இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பமா முனிக்குக் குருதே சிகனே

தேன்பொழில் பழனி தேவ குமாரா
கண்பார்த் (து) எனையாள் கார்த்திகே யாஎன்

கஷ்டநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட் சுமிவாழ் அருளெனக் குதவி
இட்டமாய் என்முன் இருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே

அருணகிரி தனக் (கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்கு கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட

சஷ்டி கவசம் தான்செபிப் போரைச்
சிஷ்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த் திறம் தந்தருள் வோனே

சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் தமிழ் தரும் அரசே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.

தீய எண்ணமும் பொய்யும் சூதும்
பகையையும் பழிச்சொல் கூறலும்
வெறுப்பும் பொறாமையும் நீங்கிய நெஞ்சம்
இறைவன் வாழும் இனிய ஓர் இல்லம்

# வைரவ விரதம்

**பரமனை மதித்திடா பங்க யாசனன்**
**ஒருதலை கிள்ளியே மொழிந்த வானவர்**
**குருதியும் அகந்தையும் கொண்டு கண்டமும்**
**புரி தரு வடுகனை போற்றி செய்குவாம்.**

வைரவ அவதாரம் சிவனை மதியாத ஐந்து தலைகளைக் கொண்ட பிரமதேவரின் கர்வத்தை அடக்கவே நடந்தது. வைரவப் பெருமானின் தோற்றத்தை கந்தபுராணம் தட்சகாண்டத்தில் ததீசி உத்தரப்படலத்தில் 165 - 166ம் பாடல்களில் காணலாம். நீல நிறம் பொருந்திய திருமேனியும் சிலம்புகள் ஒலிக்கும் திருவடிகளும் செந்நிறம் பொருந்திய பாம்பை அரையாணாக கட்டிய வெற்றரையும் அனந்த கோடி சிரமாலையும் அகன்ற திரு மார்பும் சூலமும் மழுவும் பாசமும், உடுக்கை ஏந்திய திருக்கரங்களும் மூன்று கண்களும் ஒளி பொருந்திய தந்தங்களும் அக்கினி மயமான செவ்வான போன்ற சடையும் கோபச் சிரிப்பும் கலந்த உக்கிர வடிவத்துடன் அவதாரம் செய்தார். சிவபெருமானின் பணிப்புக்கு இணங்கி சிவபெருமானை நகையாடிய பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றான உச்சித் தலையை கிள்ளினார். வைரவப் பெருமானுக்கு நந்தி, நாயாகும். இந்து ஆலயங்களில் உஷத்காலப் பூசை தொடங்கு முன் வைரவரை வழிபட்டு அவரிடம் பள்ளியறைத் திறப்பு பெற்ற பின் தான் மற்றப் பூசைகள் நடைபெறும். அதே போல் அர்த்தசாமப்பூசை முடிந்த பின் அவரிடம் பள்ளியறைத் திறப்பு ஒப்புவிக்கப்படும். கிராம சாந்தியில் வைரவ வழிபாடு முக்கிய இடம் பெறுகிறது. மகோற்சவம் முடிந்த பின் அவருக்கு சிறப்பு அபிஷேகம், பூசை, பொங்கல் என்பன நடைபெறும். அந்நிய ஆட்சிக்காலத்தில் வழிபாட்டுச் சுதந்திரம் இல்லாத காலத்தில் வீடுகளில் இரகசியமாக வைரவ வழிபாடு நடைபெற்றன. .இதனால் சைவ உணர்வுகள் பேணப்பட்டு வந்தன. இதனை சைவக் குருமாரின் சேவை என அவர்களுக்க சைவ உலகம் என்றும் கடமைப்பட்டதற்காக சைவநெறி 11 ம் தரம் பக் - 38ல் கூறப்பட்டுள்ளது பெரும்பாலும் வைரவப் பெருமானுக்கு கிராம வழிபாடான பொங்கல், படையல் ஆனி மாதத்தில் சிறப்பாக நடைபெறுகின்றன.

வைரவப் பெருமானுக்கு விரதங்கள் நான்கு வகைப்படும். அவையாவன மங்கலவாரம், சித்திரைப்பரணி, ஐப்பசிப்பரணி, காலபைரவ அஷ்டமி என்பனவாம்.

**மங்கலவாரம் விரதம்**

தை மாத முதல் செவ்வாய்க் கிழமை தொடக்கம் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமை தோறும் வைரவப் பெருமானை நினைத்து அனுட்டிக்கும் விரதமாகும். இத் தினத்தில் பகலில் சாதம், பலகாரம், பழம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை அருந்தலாம்.

**சித்திரைப்பரணி விரதம்**

சித்திரை மாதப் பரணி நட்சத்திரத்தில் வைரவப் பெருமானை குறித்து அனுட்டிக்கப்படும் விரதமாகும். இத் தினத்தில் பகலில் சாதம் பலகாரம், பழம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை அருந்தலாம்.

**ஐப்பசிப்பரணி விரதம்**

ஐப்பசி மாத பரணி நட்சத்திரத்தில் வைரவப் பெருமானைக் குறித்து அனுட்டிக்கப்படும் விரதமாகும். இத் தினத்தில் பகலில் சாதம் பலகாரம், பழம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை அருந்தலாம்.

**காலபைரவ அஸ்டமி விரதம்**

இது கார்த்திகை (மார்க்க சீர்ஷ) மாதத்தில் அபர பட்ச அட்டமி தினத்தில் வரும் விரதமாகும். இத் தினத்தில் பகலில் சாதம் பலகாரம், பழம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை அருந்தலாம்.

## வீரபத்திர விரதம்

தக்கன் தனது மகளான தாட்சாயினியை சிவபெருமானுக்கு திருமணம் செய்ய எண்ணி திருமண நாள் வைத்தான். அத் தினத்தில் சிவபெருமான் முனிவர் வேடம் பூண்டு தனது சொந்த உருவத்தைக் காட்டி இடபத்தின் மீது அம்பிகையும் ஏற்றிக் கொண்டு கைலை சென்றார். இதனை அறிந்த தக்கன் அக் கணமே சிவபெருமானை நிந்திக்க தொடங்கினான். கைலைக்குச் சென்றான். அங்கு பூதர்கள் மதிக்கவில்லை இதனால் சிவனை மதியாமல் யாகம் ஒன்றை தொடங்கினான். தாட்சாயினி அழையா விருந்தாளியாக யாகத்திற்கு சென்றாள். தக்கன் தாட்சாயிணியை மதிக்கவில்லை. இதனை அறிந்த சிவபெருமான் வீரபத்திரரை நெற்றிக் கண்ணில் இருந்து தோற்றுவித்தார். அம்பிகையின் கோபக் கணலிருந்து பத்திரகாளி தோற்றினார். வீரபத்திர பெருமானின் நந்தி இடபமாகும்.

**அந்திவான் பெருமேனியன் கறைமிடறணிந்த**
**வெந்தை தன் வடிவாயவனுதல் வழியிடையே**
**வந்து தோன்றியே முன்னுற நின்றனன் மாதோ**
**முந்து வீரபத்திரனெனும் திறலுடை முதல்வன்**

(கந்த புராணம் - தட்ச காண்டம்)

**அங்க வேலையிலுமையவள் வெகுளியாலட செய்**
**நங்கையாகிய பத்திரகாளியைச் நல்கச்**
**செங்கையோரிரண்டாயிரம் பாதி செம்முகமாய்த்**
**துங்க வீரபத்தரன்றனை யடைந்தனடுணையாம்.**

அருள் மிகு வீரபத்திர பெருமானுக்குரிய விரதம் மங்கள வார விரதம் என்ற ஒன்றேயாகும். செவ்வாய்க் கிழமை தோறும் வீரபத்திரக் கடவுளை நினைத்து அனுட்டிக்கும் விரதமாகும். இத் தினத்தில் பகலில் ஒரு பொழுது மட்டும் போசனம் செய்தல் வேண்டும்.

## ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் விரதம் (ஐயப்ப விரதம்)

கார்த்திகை மாதம் மார்கழி மாதம் என்றால் ஐயப்ப வழிபாடு நம் மக்களிடையே பரவலாகக் காணப்படும். திருப்பாற்கடலைக் கடைந் தவுடன் நல்ல அமுதமும் அதனை எடுப்பதற்கு தேவர்களும், அசுரர்களும் அமுதுக்காக சண்டையிட்டனர். மகா விஷ்ணு மோகினி என்னும் பெண் வடிவம் தாங்கி வந்தார். இந்த அழகிய பெண் வடிவத்தைக் கண்டு அசுரர்கள் மயங்கி தம்முள் போட்டி போட்டு சண்டையிட்டு அழிந்தனர். தேவர்கள் அமுதத்தை பரிமாறிக் கொண்டனர். பின் இந்த மோகினி வடிவத்தை சிவபெருமான் கண்டு மயங்கியதின் பயனாக ஐயனார் அவதாரம் செய்தார். ஐயனார் அவதாரம் கந்தபுராணம் அசுரகாண்டத்தில் மகாசாஸ்த்தாப்படலத்தில் காணலாம்.

**இந்த வண்ணமிருக்க முராருயும் அந்தி வண்ணத்தமலு மாகியே முந்து கூடி முயங்கிய வெல்லையில் வந்தனனெ வாழ்விக்கும் ஐயனே**

**அத்தகு திருமைந்தற்கு கரிகர புத்திரரென்னெனு நாமம் புனைந்த பின் னொத்த பான்மை யுருத்திரர் தமமொடும் வைத்த மிக்க வரம் பல நல்கியே**

(கந்தபுராணம் மகா சாஸ்தாப்படலம்)

கந்தபுராணத்தில் சூரபத்மன் ஆட்சிக் காலத்தில் தேவேந்திரனும் இந்தி ராணியும் சீர்காழியில் அஞ்ஞாதவாசத்தை மேற்கொண்டிருந்தனர். இந்திரன் கைலை செல்ல முற்பட்ட போது இந்திராணி தனிமை யினால் பயந்தார். அப்பொழுது இந்திரன் இந்திராணிக்கு ஐயனாரின் பெருமையை உரைத்த பின் இந்திராணி மனம் தெளிந்து ஐயனாரை சிந்தித்த போது அவர் பூரணை புட்கலையுடன் காட்சி கொடுத்தார்.

ஐயனார் வழிபாடு ஆலயங்களில் ஆகமம் சார்ந்த வழிபாடும் ஆகமம் சாராத வழிபாடும் இடம் பெறுகின்றன.ஐயனார் ஆலயங்களில் யானை வாகனம் ஐயனாருக்கு நந்தியாக இருந்து அவரையே தியானம் செய்து கொண்டிருக்கிறார்.

ஐயப்ப வழிபாடு சிறப்பாக கார்த்திகை மாதம் முதலாம் திகதி தொடக்கம் தை மாதம் முதலாம் திகதி வரை நடைபெறுகின்றது சில ஐயனார் ஆலயங்களில் சனிக்கிழமைகளில் விஷேச வழிபாடுகள் நடைபெறுகின்றது. சனி தோஷமுடையவர்கள் ஐயனார் வழிபாடும் செய்யலாம்.

## வைஷ்ணவ விரதம்

அகில உலகத்தைக் காக்கும் கடவுளான மகாவிஷ்ணு அநீதியை ஒழித்து நீதியை நிலைநாட்டுவதற்காகவும் யுகங்கள் தோறும் அவதாரம் எடுக்கிறார். அவரது பத்து அவதாரங்களில் இதிகாசங்களான இராமயணத்தில் இராம அவதாரமும் மகா பாரதத்தில் கிருஷண அவதாரமும் இடம் பெறுகின்றன மகா விஷ்ணு வழிபாடு இலங்கையில் சிறப்பாக நடைபெறுகின்றன. மகா விஷ்ணுவுக்குரிய விரதங்கள் வைஷ்ணவ விரதங்கள் எனப்படும். அவற்றுள் ஸ்ரீராம நவமி விரதமும் ஒன்றாகும்

### ஸ்ரீராம நவமி

கோசல நாட்டு மன்னனின் மகளான கோசலைக்கும் அயோத்தி மன்னன் தசரதனுக்கும் திருமண நிச்சயார்த்தம் முடிந்த விட்டது. இச் சந்தர்ப்பத்தில் பிரமாவிடம் இராவணன் தனக்கு யாரால் மரணம் என்று

கேட்டான். அதற்கு பிரமா தசரத மன்னனுக்கும் கோசலைக்கும் ஸ்ரீராமர் என்ற பெயருடன் ஒரு புத்திரன் விளங்கப் போகிறான் அவரால் உனக்கு மரணம் என்று கூறினார். இன்றிலிருந்து ஐந்தாவது தினம் திருமண முகூர்த்தம் என்றும் கூறினார் உடனே இராவணன் இத் திருமணத்தைத் தடுக்கின்றேன் என்று கூறி அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

தசரத மன்னன் சரதயூ நதியில் ஜலக்கிரீடை செய்து கொண்டிருந்த வேளையில் அவருடன் யுத்தம் செய்த அவனை தோற்கடித்தான். பின் இவன் கோசல மன்னனுடன் யுத்தம் செய்து கோசலையைக் கடத்தி ஆகாய மார்க்கமாக செல்லும் பொழுது ஒரு பெரிய திமிங்கிலத்தைக் கண்டான் கோசலையை தான் இல்லாத சமயம் தேவர்கள் மாறு வேடம் பூண்டு இலங்கையில் வைத்துக் கடத்தினாலும் என்ற பயத்தினால் பெட்டியை அத் திமிங்கிலத்திடம் ஒப்படைத்தான். திமிங்கிலம் அப் பெட்டியுடன் கடலில் அலைந்தது பின் அப் பெட்டியை ஒரு கடற்கரையில் வைத்து விட்டு வேறிடம் சென்றது. தசரத மன்னனும் சுமத்திரனும் சரத்யூநதியிலிருந்து கடலையடைந்து இப் பெட்டியிலிருந்த கரையை வந்தடைந்தனர்.இவர்கள் கரையிலிருந்த அற்புதமான பெட்டியைக் கண்டான். அப் பெட்டியைத் திறந்த பார்த்த பொழுது அதில் ஓர் அழகான பெண் இருப்பதைக் கண்டான். பின் ஒருவருக்கு ஒருவர் அறிமுகமாகி தசரதனுக்கும் கோசலைக்கும் திருமணம் நடந்தேறியது. அன்றைய தினம் தான் பிரம்மாவினால் நிச்சயிக்கப்பட்ட முகூர்த்த தினம். திருமணம் முடிந்தவுடன் மூவரும் பெட்டியில் புகுந்து மூடிக் கொண்டனர். இராவணன் ஆணவத்துடன் பிரம்மாவிடம் சென்றான். சுவாமி தங்கள் வார்தையைக் பொய்யாக்கிவிட்டேன். கோசலையை பெட்டியில் பூட்டி விட்டேன். தசரதனை கொன்று விட்டேன். தெய்வ பலத்தை இராட்சத பலத்தால் அடக்க முடியும் என்ற முழக்கமிட்டான். பிரம்மா கை உயர்த்தி ஓம் இன்று புண்ணியதினம் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட சுபமுகூர்த்தத்தில் கோசலைக்கும் தசரதனுக்கும் திருமணம் நடந்து விட்டது. என்று கூறினான். உடனே இராவணன் பெட்டியை எடுப்பித்து திறந்த பார்த்த பொழுது மூவரும் இருப்பதைக் கண்டான். அதிசயப்பட்டான். இவர்களை வெட்டுவதற்கு வாளை ஓங்கிய போது பிரம்மாவினால் தடுக்கப்பட்டான். இராம அவதாரம் நடப்பது நிச்சயம் ஆனால் உன்னால் ஒன்றும் செய்துவிட முடியாது. முதலில் இவர்களை அயோத்திக்கு அனுப்பு நீ இலங்கை சென்று நலமாக வாழ் என்று சொல்லி அவனை அனுப்பினான். பின் முறைப்படி தசரதனுக்கும்

கோசலைக்கும் நடந்தேறியது. இன்று நமது வாழ்வில் நடைபெறவிருக்கும் திருமணங்களை யார் குழப்பினாலும் நடந்தேதீரும்.

**இராமபிரான் சித்திரை மாதம் பூர்வபட்ச நவமி திதியும் புனர்பூச நட்சத்திரம் நான்காம் பாதத்தில் ஐந்து கிரகம் உச்சம் பெற்ற கிரக நிலையில் பிறந்தார். இத் தினத்தில் வரும் விரதம் தான் ஸ்ரீராம நவமி விரதமாகும்.**

இவ் விரதம் பங்குனி மாதம் அமாவாசையை அடுத்து வரும் பிரதமை தினத்தில் ஆரம்பமாகி நவமி தினத்தில் முடிவடையும். இது சைத்திர மாத விரதமானபடியால் சில சமயங்களில் சித்திரை மாதத்திலும் முடிவடையும். எந்தக் காரியத்தையும் அட்டமி நவமி திதிகளில் செய்யாமல் விடுவதினால் இதனால் வேதனையடைந்த இவ்விருதிதிகளும் தங்களை மக்கள் புறக்கணித்து விட்டனர். என்று மகாவிஷ்ணுவிடம் கூறினார்கள். உடனே உங்கள் இருவரையும் புனிதமாக போற்றி வழிபடும் நாள் வரும் என்று உறுதி மொழி கூறினார். அதனால் இராம அவதாரம் நவமி திதியிலும் கிருஷ்ண அவதாரம் அஷ்டமி திதியிலும் நடைபெறுகின்றன..

ஸ்ரீராம நவமி தினத்திற்கு முதல் ஒன்பது தினம் ஸ்ரீராமரின் விக்கிரகத்து அல்லது துளசி மாலை சாத்தி ஆஞ்சநேயருக்கு வடை மாலை சாத்துவது நன்று சர்க்கரைப் பொங்கல், பாயாசம், நைவேத்தியம் விவேதிப்பது நன்று. ஒன்பது நாளும் முடியாதவர்கள் நவமி தினத்தில் மட்டும் நிவேதிப்பது நன்று இத் தினங்களில் ஒரு நேரம் உணவு உட்கொள்ள வேண்டும். இத் தினங்களில் இராமாயணக் கதை படிப்பது நன்று. இவ் விரதத்தின் பலன் குடும்பத்தைப் பிரிந்தவர்கள் ஒன்று கூடுவர். நினைத்த காரிய சித்தி, செல்வம், புகழ் கிட்டும்.

## ஆஞ்சநேயர் ஜயந்தி

நீதியை நிலை நாட்டுவதற்காக கிருஷ்ணபகவான் சுவாமி திரேதாயுகத்தில் ஸ்ரீராமராக அவதரித்தார். அவருக்கு உறுதுணையாக ஆஞ்சநேய சுவாமி வாயு பகவானுக்கும் அஞ்சனாதேவிக்கும் புத்திரராக **மார்கழி மாதம் மூல நட்சரத்தில்** அவதரித்தார். ஆஞ்சநேய சுவாமி இராம - இராவண யுத்தத்தில் "ராமபிரானுக்கு பெரிதும் துணை புரிந்தார். ஸ்ரீராமபிரானின் பரம பக்தன் சதா ராம நாமம் செபிப்பவர். ஸ்ரீராம ஜெயம், ராம், ராம் என்று யார் கூறுகின்றார்களே அங்கு எல்லாம் கண்ணுக்கு புலப்படாமல் நிலை கொள்ளுவர் இவரைப் பற்றி காஞ்சிப் பெரியவர்

ஞானத்தின் உச்ச நிலை, பலத்தில் உச்ச நிலை, பக்தியில் உச்ச நிலை, வீரத்தில் உச்ச நிலை, விநயத்தில் உச்ச நிலை, கீர்த்தியில் உச்ச நிலை ஆகிய எல்லாவற்றில் உச்ச நிலை என்று வர்ணிக்கின்றார். இவர் இராமாயண யுத்தத்திலும், பாரத யுத்தத்திலும் பங்கு வகித்தவர். நஞ்சணி கண்டன் போற்றும் தவசீலன்.

ஸ்ரீ ஆஞ்சனேய சுவாமியை வணங்கினால் வாக்கு வன்மை கிடைக்கும் வெப்பு நோய் நீங்கும், தேக பலம் உறுதியாகும், பேய் பிசாசு பயம் நீங்கும், பில்லி சூனியம் நீங்கும், பகை ஒழியும், உத்தியோகம் கிட்டும், ஆயுள்பலம் கூடும், கிரகபீடை நீங்கும், திருமணம் கைகூடும், சகல துன்பங்களும் நீங்கும், நினைத்த காரியம் சித்தியாகும், கல்வி நலம் பெருகி பல நன்மைகள் கிட்டும்

ஸ்ரீ ஆஞ்சனேய சுவாமிக்கு சனிக்கிழமைகளில் விசேட வழிபாடுகள் செய்வார்கள். வெற்றிலை மாலை அணிவார்கள். பொங்கல் செய்து வடை மாலை சாத்தி வழிபட்டு பலனைப் பெறலாம். கிருஷ்ண அவதாரம் அஷ்டமி திதியிலும் நடைபெறுகின்றன..

ஸ்ரீராம நவமி தினத்திற்கு முதல் ஒன்பது தினம் ஸ்ரீராமரின் விக்கிரகத்து அல்லது துளசி மாலை சாத்தி ஆஞ்சனேயருக்கு வடை மாலை சாத்துவது நன்று சர்க்கரைப் பொங்கல், பாயாசம், நைவேத்தியம் விவேதிப்பது நன்று. ஒன்பது நாளும் முடியாதவர்கள் நவமி தினத்தில் மட்டும் நிவேதிப்பது நன்று இத் தினங்களில் ஒரு நேரம் உணவு உட்கொள்ள வேண்டும். இத் தினங்களில் இராமாயணக் கதை படிப்பது நன்று. இவ் விரதத்தின் பலன் குடும்பத்தைப் பிரிந்தவர்கள் ஒன்று கூடுவர். நினைத்த காரிய சித்தி, செல்வம், புகழ் கிட்டும்.

## ஆஞ்சனேயர் ஜயந்தி

நீதியை நிலை நாட்டுவதற்காக கிருஷ்ண பகவான் சுவாமி திரேதாயுகத்தில் ஸ்ரீராமராக அவதரித்தார். அவருக்கு உறுதணையாக ஆஞ்சனேய சுவாமி வாயு பகவானுக்கும் அஞ்சனாதேவிக்கும் புத்திரராக **மார்கழி மாதம் மூல நட்சத்தில்** அவதரித்தார். ஆஞ்சனேய சுவாமி இராம - இராவண யுத்தத்தில் "ராமபிரானுக்கு பெரிதும் துணை புரிந்தார். ஸ்ரீராமபிரானின் பரம பக்தன் சதா" ராம நாமம் செபிப்பவர். ஸ்ரீராம ஜெயம், ராம், ராம் என்று யார் கூறுகின்றார்களோ அங்கு எல்லாம் கண்ணுக்கு

புலப்படாமல் நிலை கொள்ளுவர் இவரைப் பற்றி காஞ்சிப் பெரியவர் ஞானத்தின் உச்ச நிலை, பலத்தில் உச்ச நிலை, பக்தியில் உச்ச நிலை, வீரத்தில் உச்ச நிலை, விநயத்தில் உச்ச நிலை, கீர்த்தியில் உச்ச நிலை ஆகிய எல்லாவற்றில் உச்ச நிலை என்று வர்ணிக்கின்றார். இவர் இராமாயண யுத்தத்திலும், பாரத யுத்தத்திலும் பங்கு வகித்தவர். நஞ்சணி கண்டன் போற்றும் தவசீலன்.

ஸ்ரீஆஞ்சனேய சுவாமியை வணங்கினால் வாக்கு வன்மை கிடைக்கும் வெப்பு நோய் நீங்கும், தேக பலம் உறுதியாகும், பேய் பிசாசு பயம் நீங்கும், பில்லி சூனியம் நீங்கும், பகை ஒழியும், உத்தியோகம் கிட்டும், ஆயுள்பலம் கூடும், கிரகபீடை நீங்கும், திருமணம் கைகூடும், சகல துன்பங்களும் நீங்கும், நினைத்த காரியம் சித்தியாகும், கல்வி நலம் பெருகி பல நன்மைகள் கிட்டும்

ஸ்ரீ ஆஞ்சனேய சுவாமிக்கு சனிக்கிழமைகளில் விசேட வழிபாடுகள் செய்வார்கள். வெற்றிலை மாலை அணிவார்கள். பொங்கல் செய்து வடை மாலை சாத்தி வழிபட்டு பலனைப் பெறலாம்.

## ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி

ஸ்ரீமகா விஷ்ணு துவாபாரயுகத்தில் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவாக வசுதேவருக்கும் தேவகிக்கும் மைந்தனாக **ஆவணி மாதம் ரோகிணி அட்டமியும் கூடிய தினத்தில்** நள்ளிரவில் அநீதியை ஒழித்து நீதியை நிலை நாட்டுவதற்காக அவதரித்தார் இவருக்கு அண்ணன் பலராமர், தங்கை அருச்சுனன் மனைவி சுபத்திரையும்யாவர். இவர் சாந்தீப முனிவரிடம் பல கலைகளையும் கற்றார். இவர் தீட்சை பெறாமல் சிவ பூசை செய்த பொழுது உபமன்யு முனிவரும் சிவ பூசை செய்துகொண்டிருந்தார். அப்பொழுது உபமன்யு முனிவருக்கு பூக்கள் காணாமல் விட்டது. உடனே சீடனிடம் கிருஷ்ணர் சிவபூசை செய்த பூக்களை எடுத்து வா என கூறினார். ஏனெனில் கிருஷ்ணர் தீட்சை பெறவில்லை அது நிர்மாலியமாகாது. இதனை அறிந்த கிருஷ்ணர் உபமன்யு முனிவரிடம் முறைப்படி தீட்சை பெற்றார். கிருஷ்ணர் தீட்சை பெற்று சிவ பூசை செய்யும் பொழுது ஒரு பூ காணாமல் விட்டது. பின் தனது கண்ணொன்றை சிவன் திருவடிமேல் சாத்தி சக்கரத்தைப் பெற்றார்.இதனை மாணிக்கவாசகப் பெருமான் தனது திருவாசகத்தில்

**பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையக்**
**தங்கண் இடந்தரன் சேவடிமேல் சாத்தலுமே**
**சங்கரன் எம்பிரான் சக்கர மாற் கருளியவாறு**
**எங்கும் பரவி நாம் தோணோக்க மாடமோ.**

என்று பாடுகின்றார். எனவே இந்தப் பாடல் ஒரு மந்திரத்து ஒரு புஷ்பம் என்பதனை எடுத்துக்காட்டுகிறார்.

மகாபாரதத்தில் பஞ்ச பாண்டவர்களுக்கு தங்களுக்கு அநீதியை விளைவித்த துரியோதனன் ஆகியோரை அழிப்பதற்கு கிருஸ்ணரின் நட்பு பெரிதும் உதவியது. துச்சாதனன் திரௌபதையின் துகிலை களையும் பொழுது கிருஷ்ணரின் கருணையினால் துகில் பெருகி துச்சாதனன் களைத்து மயங்கி வீழ்ந்தான். பாண்டவர்களின் வனவாசம், அஞ்ஞாத வாசம் ஆகிய இரண்டும் முற்று பெற்று சமாதான முயற்சி தோல்வியுற்று யுத்தம் என்பது நிச்சயமாகி விட்டது. துரியோதனன் பீஷ்மரின் ஆலோசனையைப் பெற்று சகாதேவனிடம் வந்து யுத்தம் தொடங்குவதற்கு முகூர்த்தம் எடுத்து தரும்படி வேண்டினான் அதற்கு சகாதேவன் உடன்பட்டு சனிக்கிழமை அமாவாசையும் கூடிய தினத்தில் யுத்தம் தொடங்குமாறு கூறினான். இதனை அறிந்த கிருஷ்ணபரமாத்மா சூரியனும், சந்திரனும் கூடும் தினம் அமாவாசையான படியால் இருவரது சேர்க்கையையும் தாமதிக்க வைத்து யுத்தத்தை தொடங்கி பாண்டவர்களுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

மகாபாரத யுத்தம் ஆரம்பித்த முதல் தினத்தன்று அருச்சுனன் தனது எதிரணியில் நிற்கும் பாட்டனார் பீஷ்மர், குருசிரேஷ்டரான துரோணர் மற்றும் உறவினரைக் கண்டு இவர்களைக் கொன்றா நாங்கள் அரசு பெறப் போகின்றோம் என்று மனம் சோர்ந்து அம்பையும், வில்லையும் கை சோரவிட்டான். இந் நிலையில் தான் கிருஷ்ணபரமாத்மா பகவத்கீதையை அருச்சுனனுக்கு போதிக்கிறார். பகவத்கீதை பதினெட்டு அத்தியாயம் கொண்டது. இது ஒரு வேதாந்த நூல். இதில் எழுநூற்று இருபத்தொன்பது சுலோகம் அடங்கியுள்ளது. பகவத்கீதையில் பதினொராம் அத்தியாயம் கிருஷ்ணபரமாத்மாவின் திருப்பெருவடிவத்தை இயம்புகின்றது.

**பேசு மாவணிப் பின்னிரு நாலிலே யோசை பெற்ற வுரோகிணி கூடவே**
**தேச மென்னுஞ் செயந்தியா மாயனைப் பூசை செய்திடிற் பொன்னகர் கிட்டுமே**

*(சரசோதிமாலை)*

ஆவணி மாதம் ரோகிணி நட்சத்திரம் அபரபட்ச அட்டமி தினத்தில் கிருஷ்ணஜெயந்தி உற்சவம் நடைபெறும். அன்றைய தினம் மாலையில் கிருஷ்ண படத்திற்கு முன் தீபமேற்றி பூமாலை சாற்றி வெண்ணெய் இனிப்பு கலந்த பலகாரங்களை நிவேதித்து தூப தீபங்கள் காட்டி பிராத்தனை செய்த பின் உணவருந்தலாம். கிருஷ்ணபரமாத்மா நள்ளிரவில் அவதாரம் செய்தபடியால் நள்ளிரவு வரை விழித்து பஜனை செய்யலாம். மற்றும் கிருஷ்ணருக்குரிய தோத்திரங்கள் பாராயணம் செய்யலாம்.

**ஏகாதசி விரதம்**

**ஆதவன் றனுவிற் வந்தாலம்புலி வளரும் பக்கத்**
**தோது பன்னொன்றதாகியுறு மே காதசி நோன்பைத்தான்**
**நீதறத் தொடங்கி நோற்க தினமதி தோறு நோற்போர்**
**கோதறு பலன்றான் றேவர் குருவினாற் கூறலாமே**

(சரசோதிமாலை)

ஸ்ரீமத் பகவத்கீதையில் பத்தாம் அத்தியாயமான விபூதி யோகத்தில் கிருஷ்ணபரமாத்மா அருச்சுனனுக்கு வேதங்களில் நான் சாமவேதம் தேவர்களில் நான் இந்திரன், உயர்ந்த மலைகளில் நான் மேருமலை, மரங்களில் நான் அரச மரம், மாதங்களில் நான் மார்கழி என்றும் இயம்புகிறார். மாாகழி மாதத்தில் நடைபெறும் உஷத்கால பூசை சிறப்புப் பெற்றதாகும். இந்து ஆலயங்களில் திருவெம்பாவை பூசையும், திருப்பள்ளிழுெச்சி பூஜையும் நடைபெறும். மார்கழி மாதம் முழுவதும் வைஷ்ணவ ஆலயங்களில் திருப்பாவையும் அத்துடன் சிறப்பு வாய்ந்த வைகுண்ட ஏகாதசி பூசையும் நடைபெறும். ஏகாதசி விரதம் இருப்பவர்கள் வைகுண்ட ஏகாதசியில் தொடங்கி விரதம் அனுஷ்டிக்க வேண்டும். வருடத்தில் இருபத்தைந்து ஏகாதசி தினம் வருவதுண்டு. இவ் விரதம் இருப்பவர்கள் ஏகாதசிக்கு முதல் தினமான தசமி தினத்தில் ஒரு பொழுது உணவருந்தி மறுநாள் ஏகாதசி தினத்தன்று உபவாசம் இருத்தல் வேண்டும். மறு நாள் துவாதசி தினத்தன்று துளசி தீர்த்தம் அருந்தி அதன் பின் உணவருந்தலாம்.

ஏகாதசி விரத தினத்தன்று ஆலயங்களில் விஷேச பூசை ஆராதனைகள் நடைபெறும். பூசைகளில் பங்கு கொள்வது நன்று. இவ் விரதத்தினால் நோய் அகலும். சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு கிட்டும்.

## பிருந்தாவன துவாதசி (மத்தன துவாதசி) விரதம்

மகா விஷ்ணு சத்தியபாமாவுடன் பிருந்தாவனத்தலிருக்கும் பொழுது நாரதப் பெருமான் வந்தார். இவர்கள் நாரதருக்கு இனிய வரவேற்பு நல்கி ஆசனம் அளித்தார்கள். பின் அவரிடம் செய்தி கேட்க அவர் பிருந்தாவன துவாதசி விரதத்தைப் பற்றி விளக்கமளித்தார். (நாரதப் பெருமான் அந்த நாட்களில் சிறந்த ஊடகவியலாளர்) ஐப்பசி மாதம் வளர்பிறை ஏகாதசியன்று உபவாசம் இருந்த தூயமனத்தடன் துளசியுடன் கூடிய மகா விஷ்ணுவை பூசை செய்தல் வேண்டும். ஐந்து தாமரையினால் சுவாமியை அலங்கரிக்க வேண்டும்.ஐந்து விளக்குகள் ஏற்ற வேண்டும். ஐந்து விதமான நைவேத்தியங்கள் நிவேதிக்க வேண்டும். பூஜை ஆராதனை முடிந்தவுடன் துளசியுடன் கூடிய மகா விஷ்ணுவை வலம் வந்து வணங்க வேண்டும். பெண்கள் பஞ்சாங்கநமஸ்காரம் செய்யலாம். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரம் செய்யப்படாது.

இப்படியாக கார்த்திகை மாத வளர்பிறை ஏகாதசி மட்டும் செய்ய வேண்டும். கார்த்திகை மாத ஏகாதசியன்று உபவாசம் இருந்து பூஜை செய்ய வேண்டும். அன்றிரவு நித்திரையை தவிர்த்து பஜனை செய்யலாம். துளசிமகாத்மியம் முதலான தெய்வீக நூல்களை பக்தியுடன் படிக்கலாம். மறுநாள் துவாதசியன்று அதிகாலை நீராடி அரிசிமா, சர்க்கரை, பாலும் சேர்த்து பிசைந்து மூன்று உருண்டை செய்ய வேண்டும். அவற்றில் ஒன்றை துளசிக்கு நிவேதிக்க வேண்டும். ஒன்றை தானமாக கொடுக்க வேண்டும். மூன்றாவது உருண்டையை உரலில் போட்டு உலக்கைக்குப் பதிலாக கரும்பினால் இடிக்க வேண்டும். இடிக்கும் பொழுது பெண்களுக்கு எத்தனை பால் துளி விழுகின்றதோ அத்தனை ஆண்டுகள் அவர்களுக்கு சொர்க்கலோக வாழ்க்கை கிடைக்கும். இந்த விரதத்தின் பலன் விரும்பிய கோரிக்கைகள் நிறைவேறும்.

## திருவோண விரதம்

**திருவுடனம்புராசி சேடன் மீதுறங்கு பெம்மா**
**னொரு பொழுதுகயஞ் செய்கவோணா நாளீசனன்னாட்**
**கரு வெழப் பிறந்த நாள் போற் களங்க மினேன்பதாகு**
**மிரவினிந் றொடாங்கு நாட் கொளிரும் பலமெய்து மன்றோ**

*(சரசோதி மாலை)*

மாதந் தோறும் வரும் திருவோண நட்சத்திரத்தன்று அனுஷ்டிக்கும் விரதமாகும். இவ் விரதம் திருவோண நட்சத்திரமும் பௌர்ணமியும் கூடும் தினத்தன்று ஆரம்பிப்பது நன்று திருவோண நட்சத் திரத்திற்கு அதிதேவதை விஷ்ணுவானபடியால் விஷ்ணு ஆலயத்தில் இவ் விரதம் மேற்கொள்ளலாம். மாலையில் திருவோணம் நிற்றல் நன்று. இத் தினத்தில் சந்திரனுக்கு விஷேட வழிபாடு செய்து மகா விஷ்ணுவுக்கும் வழிபாடு செய்தல் வேண்டும். இது சாதாரண விரதம். பகல் உணவு அருந்த முன் முதியவருக்கு உணவளித்து விட்டு உண்ண வேண்டும்.இரவில் மெல்லிய பலகார உணவு உட்கொள்ளலாம். மிதமிஞ்சி உண்ணப்படாது.

இவ் விரதம் இருப்பதினால் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மனநலம் பெறுவர். கவலைகள் அகலும். உறவினர் கோபம் நீங்கி உறவைப் புதுப்பிப்பார்கள். பகைவர்கள் நண்பர்களாக மாறுவர்.

## சத்ய நாரயண விரதம்

இவ் விரதம் நாராயணப் பெருமானை சிந்தித்து எந்த ஒரு பௌர்ணமி தினத்திலும் ஆரம்பித்து இருக்கும் விரதமாகும்.இத் தினத்தில் சந்திரன் உதயமாகும் போது நாராயணப் பெருமானுக்கு பழம். பாக்கு. வெற்றிலை, தேங்காய், பாயாசம், மற்றும் இனிப்பு சம்பந்தமான பழவகைகள் வைத்து வழிபட்டு அர்ச்சனை செய்தல் நன்று. பொருளாதாரக் கஷ்டமுள்ளவர்கள் இவ் விரதம் இருப்பது நன்று. வீட்டில் கஷ்டம் நீங்கியதும் நைத்தியங்களும் அவலும் படைத்து சிறப்பு வழிபாடு செய்வது நன்று. இத் தினத்தில் குசேலர் சரிதம் பாராயணம் செய்தல் நன்று.

## வரலட்சுமி விரதம்

இந்தியாவில் குண்டினபுரம் என்ற ஊரில் சாருமதி என்ற நாமம் பூண்ட பெண் இருந்தாள். அவள் மனதாலும் ஒருவருக்கும் தீங்கு நினைக்காதவள். அவள் எல்லோரிடத்திலும் இன் சொல் பேசுகின்றவள். ஒரு நாள் அவளுக்கு மகாலட்சுமி கனவில் தோன்றி நான் தான் வரலட்சுமி சிராவண மாத பௌர்ணமிக்கு தினத்திற்கு முன் வரும் வெள்ளிக்கிழமை தினத்தில் பக்தியோடு பூசை செய்து விரதம் இருக்கவேண்டும். விரும்பிய வரங்கள் தருவேன் என்று கூறி மறைந்தாள். தோன்றி சிராவண மாத பௌர்ணமி என்பது ஆடி அமாவசைக்கு பின் வரும் பௌர்ணமி தினமாகும்.

சில நாட்கள் செல்ல வரலட்சுமி விரததினம் வந்தது. எல்லோரும் சாருமதி தலைமையில் விரதம் மேற்கொண்டார்கள். இவ் விரதத்தை மேற்கொண்டு எல்லோரும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு பெற்று வாழ்ந்து வந்தார்கள்.

இவ் விரதத்திற்கு முன் தினம் வீட்டைக் கழுவி வெள்ளிக் கிழமை முற்றத்தை சாணத்தால் மெழுகியோ அல்லது தெளித்தோ புனிதப்படுத் வேண்டும் வீட்டில் இருக்கும் பூஜை அறையில் மஞ்சள் நீரினால் கழுவிய பலகையில் வைத்து அதன் மேல் கோலமிட்டு அலங்கரித்து அதன் நடுவே பளபளப்பான தாம்பாளத்தை வைக்கவும். இல்லாவிடின் தலை வாழை இலை நுனி வடக்கு அல்லது கிழக்கு நோக்கிய வண்ணம் வைத்தல் வேண்டும். அதனருகே தீபம் வைத்து நல்லெண்ணை விட்டு இரண்டு திரி மட்டும் ஏற்றவும். பின் மஞ்சளினால் பிள்ளையார் பிடித்து அதற்கு நன்கு அறுகம்புல் சாற்றவும். பின்பு பச்சரிசி பரப்பி நன்கு துலக்கிய செம்பு அல்லது பித்தளைக் கலசத்தை அரிசியால் அல்லது நீரினால் நிரப்பி பட்டு வஸ்திரம் சாற்றி மஞ்சள் நீரினால் கழுவி நன்றாக கழுவிய தேங்காயையும் மாவிலையையும் கலசத்தில் வைக்க வேண்டும் கலசத்திற்கு பூமாலை சாற்றவும் இதனை வெள்ளிக்கிழமை இராகு காலத்திற்கு (முற்பகல் 10 - 30 தொடக்கம் 12 மணிவரையுள்ள காலம்) முன் செய்து வைக்கவும் ஏற்றிய தீபத்தை அணையவிடாமல் கண்காணிக்கவும்.

மாலையில் ஒன்பது நுல்கள் எடுத்து ஒன்பது முடிச்சு போட்டு கும்பத்தில் சாற்றவும் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், காயமில்லாத எலுமிச்சம் பழம் சர்க்கரைப்பொங்கல், பாயாசம், மோதகம், வடை, ஏலம், கற்கண்டு இட்டு காய்ச்சிய பால் ஆகியவற்றை நிவேதனமாக வைக்கவும். பின் அவரவர் தங்கள் ஆலய அர்ச்சகரை வீட்டிற்கு அழைத்து முறைப்படி அன்புடன் லட்சுமியை வரவழைத்த சிறப்பான பூஜை செய்து நிறைவேறிய பின் விரதத்திற்குரிய பெண்மணி பூஜையில் வைக்கப்பட்ட காப்பை வலது கையில் கட்ட வேண்டும். மறு நாள் காலை அன்புடன் கும்பத்தில் அழைக்கப்பட் வரலட்சுமியை அர்ச்சகர் மூலம் அதன் சக்தியை வீட்டில் உள்ள மகாலட்சுமி படத்தின் மீது செலுத்திவிட்டு சிறப்பான பூஜை செய்து கும்பத்தை எடுக்கலாம். அரிசி நிறைந்த கலசமனால் வீட்டில் அரிசியுடன் கலந்தால் அன்னலட்சுமி வாசம் செய்வார்.

நீர் நிறைந்த கலசமானால் அந்த நீரை தீர்த்தம் போல் பருகிவிட்டு கால் படாத இடதில் ஊற்றவும்.

வரலட்சுமி விர தினத்தன்று மகாலட்சுமி பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயங்களில் மகாலட்சுமிக்கு விஷேச பூஜை வழிபாடுகள் நடைபெறும் அங்கு விரத நூலுக்கு முற்பதிவு செய்து பூஜை ஆராதனைகளில் பங்கு பற்றலாம். இவ் விரதத்தில் பங்கு பற்றியவர்கள் அன்றிரவு பால் பழம் அருந்த வேண்டும். இவ் வரலட்சுமி விரதத்தை கன்னிப் பெண்கள் நோற்றால் வெகுவிரைவில் வரன் வந்து மாலையிடுவார். சுமங்கலிகள் இருந்தால் வரன் கட்டிய மாங்கல்யம் நீண்ட காலம் கழுத்தில் புனிதமாக இருக்கும். மற்றும் புத்திர சம்பத்தும் சகல செல்வங்களும் தேடிவரும். இத்தினத்தில் லட்சுமி தோத்திரம் கதைதார அஷ்டகம் படிக்கலாம். கன்னிப் பெண்கள் திருஞனசம்பந்தமூர்த்தி நாயனர் அருளிய திருமருகல் பதிகம் படிக்கலாம்.

நம்பிக்கை என்பது ஒரு நாளில் உதிர்ந்து விடும்
பூவாக இருந்துவிடக் கூடாது
மேலும் மேலும் மலரை உருவாக்கும்
செடியாக இருக்க வேண்டும்

***-அரிஸ்ரோட்டில்-***

# மாதங்களில் வரும் உற்சவங்களும் பண்டிகைகளும் விரதங்களும்

## சித்திரை மாதம்

### சித்திரை வருடப்பிறப்பு

சூரியபகவான் மேடராசியில் அச்சுவினி நட்சத்திரம் முதலாம் பாதத்தில் பிரவேசிக்கும் நேரம்தான் புதுவருடப்பிறப்பு நேரமாகும். சூரியன் சூரிய அஸ்தமனத்துக்கு முன் மேடராசியில் பிரவேசித்தால் அன்றயதினம் சித்திரை முதலாம் திகதியாகும். சூரிய அஸ்தமனத்துக்கு பின் மேடராசியில் பிரவேசித்தால் மறுநாளே முதல் திகதியாகும் இப்படியாக மேடம் முதல் மீனம் வரையுள்ள ராசிகளில் சூரியபகவான் பிரவேசிக்கும் காலமே சௌரமாத பிறப்பாகும். சூரியன் ஒவ்வொரு இராசியிலும் பிரவேசிக்கும் நேரத்தை சங்கிராந்தி அல்லது சங்கிரமம் எனப்படும்.

**அயனமிரண்டிக்கும் முன்மூன்று பின்னிரண் டல்லன நாட்**
**டுயல் விடுவங்கங்களில் றொண்ணுறு முன் பின்னிற் றொல் கடிகை**
**முயல் வுறு மற்றவை முன் பின்னு நாழிகை முப்பதென்று**
**நியதமுஞ் சங்கிரமங்களி னீக்கனர் நேருறவே.**

*(விதானமாலை - குணகுணப்படலம்)*

தை, ஆடிச் சங்கிராந்தி காலங்களில் சங்கிராந்தி காலத்திலிருந்து முன்மூன்று நாட்களும் பின்னிரண்டு நாட்களும் சுபகருமங் ளுக்கு விலக்கப்படும். சித்திரை, ஐப்பசி சங்கிராந்தி காலங்களில், சங்கிராந்தி காலத்திலிருந்து முன்னும் பின்னும் ஒன்றரை நாளும் சுபகருமங்களுக்கு விலக்கப்படும். மற்றைய எட்டு மாதங்களும் சங்கிராந்தி காலத்திலிருந்து முன், பின் முப்பது நாழிகை சுபகருமங்களுக்கு விலக்கப்படும்.

### சாந்திர வருடப்பிறப்பு

சாந்திர வருடப்பிறப்பு சூரியன் மேட இராசியில் பிரவேசிக்கும் தினம் சௌரவருடப் பிறப்பாகும். (சௌரம் - சூரியன்) இந்த சௌர வருடப்பிறப்பு தினத்திற்கு முதல் மாதமாகிய பங்குனி மாத அமாவாசைக்கு மறுதினம் சாந்திர வருடப்பிறப்பு தினமாகும். (சாந்திரம் - சந்திரன்) இச் சாந்திர மாதத்திற்குள் இரண்டு சௌர மாதப் பகுதிகள் அடங்கியிருக்கும்.

| சாந்திரம் | சௌரம் |
|---|---|
| சைத்திர £ | பங்குனி - சித்திரை |
| வைசாக £ | சித்திரை - வைகாசி |
| ஜயேஷ்ட £ | வைகாசி - ஆனி |
| ஆஷாட £ | ஆனி - ஆடி |
| சிராவண + | ஆடி - ஆவணி |
| பாத்திரபத £ | ஆவணி - புரட்டாதி |
| ஆஸ்வீஜ £ | புரட்டாதி - ஐப்பசி |
| கிருத்திகா £ | ஐப்பசி - கார்த்திகை |
| மார்க்கசீர்ஷ £ | கார்த்திகை - மார்கழி |
| புஷ்ய £ | மார்கழி - தை |
| மாக £ | தை - மாசி |
| பாற்குண £ | மாசி - பங்குனி |

இந்த சாந்திர மாத பெயர் சங்கற்பம் செய்யும் பொழுது ஆலயங்களிலும் வீட்டில் பூர்வ அபர க்கிரியைகளிலும் கூறப்படுகின்றது. வார விரதங்கள் நட்சத்திர விரதங்கள் சௌர மாதத்திலும் திதி சம்பந்தப்பட்ட விரதங்கள் பெரும்பாலும் சாந்திரமாதத்திலும் நடைபெறும்.

## சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் (சிறுகதை வடிவம்)

யாழ்ப்பாணத்தில் கந்தபுராண கலாச்சாரத்தை பேணும் கிராமங்களில் நல்லூரும் ஒன்றாகும். இப் புராணகலாச்சாரத்தில் ஊறித்திளைத்த குடும்பத்தில் பிறந்தவர் கைலாசநாதர். இவர் புராணபடனம் . இதிகாசம். சைவத்திருமுறை வேதாந்த சித்தாந்தம், சோதிடம் எல்லாவற்றிலும் கரை கண்டவர் இவருடை மனைவி கமலாம்பிகை. இவருக்கு புதல்வர்கள் ஐங்கரன், அஞ்சுகன், அருள்பத்திரன், குகன் ஆகிய நால்வர்.

சித்திரை புதுவருடதினத்தன்று கைலாசநாதர் வீட்டில் ஒரே குதூகலம் உதயம் நான்கு மணிக்கு முன் எல்லோரும் எழுந்த வீடு, முற்றம் ஆகியவற்றை சுத்தம் செய்து மஞ்சள் நீர், சாணகத்தால் துய்மைப் படுத்தினார்கள். சூரிய உதயத்திற்கு முன் மஞ்சள் நீர், சாணம்

தெளிப்பதனாலும் , மாக்கோலம் இடுவதினாலும் மகாலட்சுமி இல்லம் தேடி வருவாள். சூரியன் உதிக்கும் பொழுது முதல் வெளிப்படும் முதல் கதிர் புற ஊதாக்கதிர் ஆகும். இக் கதிர் தெளித்த சாணத்தில் படுவதனால் ஒரு வித இராசயன மாற்றம் ஏற்பட்டு ஒரு வித கிருமி நாசினி உருவாகும். இக் கிருமி நாசினியால் எமது காலில் உள்ள துர்கிருமிகள் நாசமடையும். எனவே சூரிய உதயத்திற்கு முன் சாணம் தெளித்தல் வேண்டும்.

பின் புதுவருடபஞ்சாங்கத்தில் நாற்பத்தேழாம் பக்கத்தில் குறிப்பிட்ட படி புண்ணிய காலத்தில் மருத்து நீர் தேய்த்து குறிப்பிட்ட இலைகளை வைத்து ஸ்நானம் செய்து குறிப்பிட்ட கரை அமைந்த வஸ்திரம் தரித்து விநாயகர் முதலிய குல தெய்வங்களை வணங்கி பெரியோர்களின் ஆசீர்வாதம் பெற்று சூரியனுக்கு பொங்கல் செய்ய ஆரம்பித்தார்கள். சித்திரை புதுவருட தினத்தன்று சூரிய அஸ்தமனத்துக்கு முன் எந்த நேரத்தில் பிறந்தாலும் உதயத்தில் சூரியனுக்கு பொங்கல் செய்ய வேண்டும். சூரியனுக்கு சுடசுட சர்க்கரைப் பொங்கல் நிவேதித்து சூரியனுக்கு பூசை வழிபாடு செய்து அவரின் அருளைப் பெற்று அதன் பின் பூஜை அறையில் புதுவருடகருமங்களில் ஈடுபட்டார்க்ள். பூசை அறையில் கைலாசநாதரின் மனைவி கமலாம்பிகை தீபத்தை ஏற்றினார். கைலாசநாதர் மஞ்சள் பிள்ளையார் பிடித்து தலைவாழையிலை வடக்கு நோக்கிய வண்ணம் இருக்க அதில் நெல் பரப்பி நிறை குடம் வைத்தார். ஐங்கரன் பூசை அறையில் உள்ள படங்களுக்கும் நிறைகுடத்திற்கும் பஞ்சாங்கத்தில் குறிப்பிட்ட வர்ணப் பட்டுக்களை சாற்றினார். அஞ்சுகன் தாம்பாளத்தில் சகல நாணயத்தாள்களை வகைப்படுத்தி அடுக்கி அதன் மேல் நாணயக்குற்றிகளைப் பரப்பினார். அருள்பத்திரன் மற்றொரு தாம்பாளத்தில் வெற்றிலையை அலங்காரமாக அடுக்கி பாக்கு சீவல் பரப்பி நடுவில் காயப்படாத எலுமிச்சம் பழம் மஞ்சளையும் வைத்து அலங்காரம் செய்தார். அதற்கு அருகில் கனி வர்க்கம் அடங்கிய தாம்பாளமும் வைக்கப்பட்டிருந்தது. குகன் நிறை குடத்திற்கு அருகில் புதுவருட பஞ்சாங்கத்தை வைத்து அதன் மேல் பட்டு சாற்றி பின் தந்தையாரின் சமயசோதிட நூல்களும் மற்றும் தங்களது பாடநூல்களையும் பூஜைக்காக வைத்தார். கமலாம்பாள் தான் தயாரித்த இனிய சிற்றுண்டி வகைகளை பூஜைக்காக வைத்தாள். புதுவருடம் பிறக்கும் நேரம் நெருங்கி விட்டது. ஆலயங்களில் மணியோசையும் மங்கள வாத்தியங்களும் முழங்க வீட்டிலும் ஒலி நாடாமூலம் மங்கள

வாத்தியங்களும் முழங்க புதுவருடம் பிறந்தது. சிறப்பான பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. எல்லோரும் தெய்வங்களை வழிபட்டு அருளைப் பெற்று பிதாமாதாக்களை வழிபட்டு ஆசிகளைப் பெற்று வீபூதி சந்தன குங்குமம் தரித்து கைவிஷேசம் பரிமாறி இனிய உணவினை உண்டு மகிழ்ந்தனர். கைவிஷேம் புண்ணிய காலத்திலும் பரிமாறலாம். பஞ்சாங்கத்ததில் போடப்பட்டிருக்கும் கைவிஷேச முகூர்த்ததிலும் பரிமாறலாம். கைலாசநாதார் சமய நூல்களைப் படித்து பஞ்சாங்கப் பலன்களையும் படித்து விட்டு விருந்து கொண்டாட நல்லநாள் பார்த்துக் கொண்டிருந்தார் அட்டமராசி தினங்கள் ஞாயிறு, செவ்வாய், வியாழன், படுபட்சி தினம் தவிர்ந்த ஏனைய சுபதினத்தில் சுபதிதியும், சுபநட்சத்திரமும் சுபயோகமும் சேர்ந்த நாளாக தேடி விட்டு மனைவி பிள்ளைகளுடன் ஆலய தரிசனம் செய்ய புறப்பட்டு விட்டார்.

## சித்திரைப் பூரணை

இத் தினத்தில் பிதுர்லோகம் சென்ற தங்கள் தாய்மாரை நினைத்து அனுஷ்டிக்கும் விரதமாகும். இத் தினம் இந்திரன் பிரமகத்தி தோஷம் நீங்க வழிபட்ட தினமாகும்.

### சித்திர குப்த விரதம்

ஆன்மாக்களின் பாவ புண்ணியக் கணக்கு எழுதுபவர் சித்திரபுத்திர நாயனர் அவதாரம் செய்த தினமாகும். இவர் இந்திரனுக்கும் இந்திராணிக்கும் புத்திரராக தெய்வலோக பசுவின் வயிற்றில் சித்திரைக்குசித்திரை சீரான பூரணையில் ஞயிற்றுக் கிழமை அவதாரம் செய்தார். இவர் பூரணை திதியில் அவதாரம் செய்படியால் அன்றயதினமே சித்திரகுப்த விரதமாகும்.

அன்றய தினம் ஆலயங்களில் விஷேச அபிஷேகம் ஆராதனைகள் நடைபெறும். சித்திரபுத்திர நாயனாரை கும்பத்தில் ஆவாகனம் பண்ணி நாழியில் (கொத்து) நெல் நிரப்பி ஏடு எழுத்தாணி வைத்து சகலவிதமான கனிவர்க்கம், அவருக்கு பிரியமான பலகாரங்கள் நிவேதித்து சித்திரபுத்திர நாயனார் கதை படிப்பார்கள். சித்திரைக் கஞ்சி

வார்ப்பார்கள். சில ஆலயங்களில் சித்திரைக் கஞ்சியுடன் மாங்காய்ச் சம்பலும் வழங்குவார்கள்.

### அஷ்யதிருதியை

பூர்வ பட்ச திருதியை தினத்திலன்று முற்பகல் புதிய நகைகள் வாங்குவதற்கு சிறந்த நாளாகும். சிலர் அன்றய தினம் புதிய லோக பாத்திரங்களும் வாங்குவார்கள்.

### அக்கினி நாள்

அக்கினி நாள் சூரியன் பரணி 4ம் பாதத்தில் பிரவேசிக்கும் அக்கினி நாள் ஆரம்ப தினமாகும். இதன் முடிவு தினம் வைகாசி மாதம் ரோகிணி நட்சத்திரம் 2ம் பாதத்தில் பிரவேசிக்கும் நேரம் முடியும் நேரமாகும். இக்காலங்களில் மரம், செடி வெட்டப்படாது. ஓலை நார் உரித்தல் , வீடு கட்டுதல், குடி புகுதல், விதை விதைத்தல், வேலி அடைத்தல், வீடு வேய்தல், தீட்சை வைத்தல் ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும். உபநயனம் விவாகம் செய்யலாம்.

## வைகாசி மாதம்

### வைகாசி விசாகம்

வைகாசி விசாகம் அருள்வடிவான முருகனுக்கு சிறந்த தினமாகும். விசாக நட்சத்திரத்துக்கு அதிபதி முருகப் பெருமான். முருகன் ஆலயங்களில் சிறந்த பூஜை வழிபாடுகள் நடை பெறும். அம்பிகை ஆலயங்களில் பொங்கல் திருக்குளிர்ச்சிகள் நடை பெறும்.

## ஆனி மாதம்

ஆனி மாதம் பொங்கல் மாதம். அனேக ஆலயங்களில் பொங்கல் படையல்கள் நடை பெறும்.

### குமாரஷஷ்டி விரதம்

முருகனுக்குரிய விரதம். ஆனி மாதத்தில் வரும் பூர்வ பட்ச ஷஷ்டி தினம் குமார ஷஷ்டி விரதம் தினமாகும்.

## ஆடி மாதம்

ஆடி மாதம் தக்ஷிணாயன ஆரம்ப மாதம். அம்பிகை ஆலயங்களிலும், முருகன் ஆலயங்களிலும், விஷேச உற்சவங்கள்

நடைபெறும். பிதுருக்களுக்கும் சிறந்த மாதம் ஆடி மாதத்தில் பெண்கள் கருதரிப்பது சிறந்ததல்ல.

### ஆடிப்பிறப்பு

இத் தினத்தில் பனங்கட்டி கூழ் காய்ச்சுவார்கள். கொழுக்கட்டை பழவர்க்கங்கள் வெற்றிலை சீவல் முதலியன பிதுர் வர்க்கத்தினருக்கு படைப்பர்.

### ஆடி அமாவாசை விரதம்

அமாவாசை தினம் பிதுருக்களுக்கு சிறந்த தினமாகும். அதிலும் ஆடி அமாவாசை தினம் மிகவும் விஷேசமான தினமாகும். இத் தினத்தன்று அதிகாலை புனித கடலில் நீராடி சந்தியா வந்தனம் முடித்து ஓர் அந்தணர் முன்னிலையில் பிதுர் தர்ப்பணம் செய்தல் வேண்டும் அன்றைய தினம் ஆலய வழிபாடு செய்ய வேண்டும் . அன்றய விரத உணவில் காத்தோட்டி பொரியல் சேர்க்கப்படல் வேண்டும்.

### ஆடிச் செவ்வாய்

இவ் விரதம் வைரவர். வீரபத்திர், காளி, துர்க்கை, பழனி ஆகிய தெய்வங்களை நினைத்து அனுஷ்டிக்கும் விரதமாகும். இது சாதாரண விரதமாகும்.

### ஆடிப் பூரம்

இவ் உற்சவம் அம்பிகைக்கு சிறந்த உற்சவதினமாகும். அனேக அம்பிகை ஆலயங்களில் விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அம்பிகை ஆலயங்களில் பிரம்மோற்சவம் நடைபெற்று தீர்த்தோற்சவம் இத்தினத்தில் நடைபெறும்.

## ஆவணி மாதம்

### ஆவணி மூலம்

ஆவணி மூலம் இத் தினத்தில் பாண்டிய மன்னனாகிய அரிமத்தனபாண்டியனுக்கு குதிரை வந்த தினம். மணிவாசகரின் பக்தியை வெளிப்படுத்துவதற்காக சிவபெருமான் குதிரை சேவகனாக வந்து பாண்டிய மன்னனிடம் குதிரைகளை ஒப்படைத்தார். இதன் விபரங்களை திருவாதவூரடிகள் புராணத்திலும், திருவிளையாடற்புராணத்திலும் காணலாம். அன்றய தினம் சிவாலயங்களில் விஷேச அபிஷேக ஆராதனைகள் உற்சவங்கள் நடைபெறும்.

**ஆவணி ஞாயிறு**

இது சூரியனுக்குரிய விரதமாகும் இத் தினத்தில் உதயத்தில் சூரியனுக்கு பொங்கல் செய்து செந்தாமரைப் பூ அல்லது செவ்வரத்தம் பூவினால் சூரியனை அர்ச்சித்து வழிபட வேண்டும்.

## புரட்டாதி மாதம்

**புரட்டாதிச் சனி**

இத் தினத்தில் சனீஸ்வரனுக்கு எள் தீபம் ஏற்றி வழிபாடு செய்தல் வேண்டும். சனீஸ்வரனை நினைத்து விரதம் நோற்று காகத்திற்கு எள் கலந்த அன்னம் அல்லது நல்லெண்ணெய் கலந்த அன்னம் நிவேதித்து விட்டு உணவு அருந்த வேண்டும்.

**புரட்டாதி மஹாளயம்**

பிதுர் லோகத்தில் நடைபெறும் பிரம்மோற்சவமே மஹாளய பட்சமாகும். பிதுருக்களின் நாயகர் ஸ்ரீ நாராயணர் ஆவார். இம் மஹாளய பட்சம் பாத்திர பாத மாத பூரணைக்கு மறு தினமாகிய பிரதமை திதியில் (சில சமயம் ஆவணி மாதத்தில்) ஆரம்பமாகி கன்னி ராசியில் சூரியனும், சந்திரனும் ஒன்றிணையும் தினமாகிய அமாவாசை தினத்தில் முடிவடையும். புரட்டாதி மாத அமாவாசை தினத்துக்கு முன் பதின்நான்கு தினங்களிலும் நமது மூதாதையரான சகல பிதுர் தேவதைகளும் பூலோகத்தில் தங்குவார்கள்.அவர்கள் சூட்சும உடலுடன் எமது தர்ப்பணத்தை ஏற்று ஆசி வழங்குவார்கள்.

நாம் நமது மூதாதையருக்கு சிரார்த்த திதி , அமாவாசை கிரகண காலங்கள் மாதப்பிறப்பு ஆகிய தினங்களில் முறையாக தர்ப்பணம் செய்யாதபடியால் நமது குடும்பத்திலும் வெளி உலகிலும் பல் வேறு துன்பங்கள் நிகழ்கின்றன. இவற்றைத் தவறவிட்டவர்கள் மஹாளய பட்ச காலத்திலாவது பிதுர் தர்ப்பணம் செய்ய வேண்டும். பிதுருக்களின் ஆசி பெற்று குடும்பம் வளம் பெற ஒவ்வொரு இல்லறப் பெண்களும் தர்ப்பணம் செய்வதற்கு கணவருக்கு உதவி புரிதல் வேண்டும். பிதுர்களுக்கு பசுந்தயிரினால் தர்ப்பணம் செய்வது மிகவும் விஷேசமானது.

இக் காலங்களில் நாம் வழங்கும் நீரையும் எள்ளையும் அக்கினி பகவானின் மனைவி ஸ்வகாதேவி என்று பிதிர் தேவர்களிடம் ஒப்படைக்கின்றாள். பிதாமாதக்களின் திதியை தவறவிட்டவர்கள் இத்

தினத்தில் சிரார்த்தத்தை செய்யலாம். சிரார்த்தத்திற்கு தேவையான பொருட்கள் பிள்ளையார் பிடிக்க மஞ்சள் மா, அல்லது பசுவின் சாணம், அறுகம் புல், துளசி, வில்வம், நந்தியாவர்த்தம் மற்றும் பத்திர புஷ்ப்பங்கள் என்பனவாம். புண்ணியாவாசனத்திற்கு தேங்காய், மாவிலை, பச்சை அரிசி, கோசலம், கோமயம், பால், தயிர், நெய் , பழம்,பாக்கு , வெற்றிலை, கற்கண்டு, சர்க்கரை என்பனவாம். பிதுர்ஸ்நானத்திற்கு நல்லெண்ணை, எலுமிச்சம் பழம், சீயாக்காய், இறந்தவர் ஆணாயின் வேட்டி , பெண்ணாயின் சேலை கொடுக்க வேண்டும். உணவுப்பொருட்கள் அரிசி, இஞ்சிக்கிழங்கு, கீரை, முல்லை, முசுட்டை,காரை, பிரண்டை, கருவேப்பிலை, பயறு, வாழைக்காய், மாங்காய், பலாக்காய், அவரைக்காய், பாகற்காய், புடோலங்காய், தேங்காய், தாம்பூலம், சுக்கு, சாதிக்காய், என்பனவாம். இவற்றில் புடோலங்காய் முக்கிய இடம்பெறவேண்டும். பிண்டத்திற்கு தேவையான பொருட்கள் அரிசிமா, உழுத்தம்மா, நெய், தேன், சர்க்கரை, எள்ளு என்பனவாம். நைவேத்தியமாக அரிசியாலும், மரக்கறிக் கறிகளினாலும் சமைக்கப்பட்ட உணவை நிவேதிக்க வேண்டும். அத்துடன் முக்கனிகள் ,தாம்பூலம், தீட்டல் பச்சையரிசியினால் தயாரிக்கப்பட்ட பாயசமும் நிவேதிக்க வேண்டும். சவ்வரிசி பாயசம் தவிர்க்கப்படல் வேண்டும். நாம் பதுளையில் இருக்கும் நமது உறவினருக்கோ அல்லது நண்பனுக்கோ பணம் அனுப்ப வேண்டுமானால் யாழ்ப்பாண தபாற்கந்தோரில் எமது பணத்தை தபால்கந்தோர் உத்தியோகத்தரிடம் கொடுத்தால் தந்தி காசுக் கட்டளை மூலம் பதுளைக்கு அனுப்பினால் எமக்குரியவர் பதுளை தபாற் கந்தோரில் நான் கொடுத்த பணத்தை பெறுகின்றார். அது போல் சிரார்த்தத்தில் நாம் கொடுக்கும் தானங்கள் அந்தணர் மூலம் பிதுர்லோகத்தில் இருக்கும் மூதாதையரை சென்றடைகின்றுது.

## ஐப்பசி மாதம்

### தீபாவளி

மகாவிஷ்ணுவின் வராக அவதாரம் எடுத்த போது அவருக்கும் பூமாதேவிக்கும் பிறந்தவன் நரகாசுரன். இவன் பிறந்த போது மகாவிஷ்ணுவிடம் பூமாதேவி தன் பிள்ளைக்கு மரணம் நேரிடப்படாது என்று வேண்டினாள். மகாவிஷ்ணு உடனே இப்படியான வரம் கொடுக்க முடியாது உன் மகன் இறப்பதானால் நீ என் அருகில் இருக்கும் போது என்னால் மடிவான் என்றார். பூமாதேவியின் அம்சம் சத்தியபாமா நரகாசுரன் பிரம்மதேவரை நோக்கி கடுந் தவம் செய்தான். பிரம்மதேவர் தரிசனம் கொடுத்த போது அவன் இறவாவரம் கேட்டான். பிரம்ம தேவர் அவ் வரம்

கொடுக்க முடியாது வேறு வரம் கேள் என்றார். அவன் தன் தாய் தன்னை கொல்லமாட்டார் என்று சிந்தித்து தன் தாயின் கையால் மரணம் அடைய வேண்டும் என்று கேட்டான். பிரமதேவரும் அவ் வரத்தை கொடுத்ததார். நராகாசுரன் பிரமதேவரின் அருளினால் வானவர் அனைவரையும் அடக்கி ஆண்டான். இவனது அக்கிரமம் தாங்கமுடியாமல் மகாவிஷ்ணுவிடம் முறையிட்டனர். உடனே மகாவிஷ்ணு சத்தியபாமாவை தேர் செலுத்தும்படி கூறி நரகாசுரனை சங்காரம் செய்யப் புறப்பட்டார். இருவருக்கும் உக்கிர மோதல் நடை பெற்று ஈற்றில் மகாவிஷ்ணு தனது சக்கரத்தை ஏவினார். உடனே அவன் கீழே விழுந்தான். சத்தியபாமா மகன் மேல் இரங்கி இவனுக்கு ஞானஉபதேசம் செய்ய வேண்டும் என மகாவிஷ்ணுவிடம் வேண்டினார். அவன் மகாவிஷ்ணுவின் ஞானஉபதேசம் பெற்று தான்இறக்கும் இத் தினத்தை நல்ல தினமாக கொண்டாட வேண்டும் என்று வேண்டினான். இத் தினமே தீபாவளி தினமாகும். தீபாவளி முகூர்த்தம் உதயம் . சந்திரோதயம் தொடங்கி சூரியோதயம் வரையுள்ள காலமாகும். அவன் மேலும் வேண்டியது இந்த நேரத்தில் நீரில் கங்காதேவியும், நல்லெண்ணையில் லட்சுமியும் பிரசன்னமாக வேண்டும். எல்லோரும் இந் நேரத்தில் முழுகி சுவாமி தரிசனம் பெற்று தீபங்கள் ஏற்றி மகிழ்ச்சியுடன் இத் தினத்தை கொண்டாட வேண்டும் என்று வேண்டினான். தீபாவளி ஆஸ்வீஜமாத அபர பட்ச சதுர்த்தசி தினத்தில் வரும். சௌர மாதம் ஐப்பசி மாதத்தில் வரும். அபூர்வமாக புரட்டாதி மாதத்திலும் வருவதுமுண்டு.

### ஐப்பசி கடைசி வெள்ளி

இத்தினத்தில் சிவாலயங்களில் யமசங்காரம் நடைபெறும். குறிப்பாக **யாழ்ப்பாணத்தில் நல்லூர் சிவன் கோயிலிலும், சுன்னாகம்-மயிலணி சிவன் கோயிலிலும்** நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## கார்த்திகை மாதம்

### சர்வாலய தீபம் (விளக்கீடு)

சர்வாலய தீபம் என்னும் உற்சவம் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதை விளக்குவதாகும். சிவபெருமான் தனது ஞான ஒளியை பிரம விஷ்ணுக்களுக்கு காட்டிய தினமாகும். இத் தினத்தில் ஆலயங்களிலும். வீடுகளிலும் தீபங்கள் ஏற்றப்படும். கார்த்திகை மாத பூரணை தினத்தில் சொக்கப்பனை எரிப்பார்கள்.(சுஷ்கப்பனை) (சுஷ்க - உலர்ந்த) ஆலய வாசலின் முன் தென்னை. பனை. மூங்கில் , சண்பகம், வில்வம் ஆகிய மரங்களில் ஒன்றை நாட்டி பனை ஓலை , தென்னோலை ,

கமுகஓலை. வாழைச்சருகு முதலியவற்றை சுத்திக் கட்டி மாலையில் சுவாமி எழுந்தருளி வாசலில் வரும் பொழுது ஒன்பது தகழியில் பூசிக்கப்பட்ட அக்கினியால் இவற்றை எரியூட்ட வேண்டும். எரியும் சுவாலையை சிவபெருமானின் ஞானசோதி என வழிபட வேண்டும். முழுவதும் எரிந்த பின் அச் சாம்பலை இறைவனுக்கு சாத்தி அடியார்களுக்கும் கொடுக்க வேண்டும். அக்கினி தோன்றிய தினம் மாசி மாத சிவராத்திரி தினம். சிவபெருமான் ஞான சோதி வடிவமாக பிரமவிஷ்ணுக்களுக்கு காட்சி கொடுத்த தினம் கார்த்திகை மாத பௌர்ணமி தினமாகிய சர்வாலய தீப தினமாகும். இத்தினம் சில சமயங்களில் ஐப்பசி மாதத்திலும் வருவதுண்டு. இத் தீபத்தின் மகிமையை அருணாசல புராணத்தில் நூறு பாடல்களால் போற்றப் பட்டுள்ளது. இத் தினத்தில் வீட்டிலும் கோலமிட்டு இரவு தீபங்களினால் அலங்கரிப்பர். கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் வருவது குமாராலய தீபம் ஆகும். இது முருகன் ஆலயங்களில் நிகழும். ரோகிணி நட்சத்திரத்தில் வருவது விஷ்ணு ஆலய தீபம் ஆகும். இத் தினத்தில் வீட்டில் துளசிமாடத்தை தீபங்களினால் அலங்கரிக்க வேண்டும்.

## மார்கழி மாதம்

மாதங்களில் நான் மார்கழி என்று அருச்சுனனுக்கு ஸ்ரீமத் பகவத்கீதையில் விபூதியோகத்தில் உரைக்கிறார். மார்கழி மாதம் தட்சணாயனமும் உத்தராணயனமும் சந்திக்கும் மாதம் ஆகும். இந்த மாதத்தில் திருவாதிரை தினத்தில் சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானுக்கு சிறந்த அபிஷேகமும், ஆருத்திரா தரிசனமும் நடைபெறும்.இத் தினத்தை இறுதியாகக் கொண்டு முன் ஒன்பது நாளும் கூடிய பத்து தினங்கள் திருவெம்பாவை தினங்களாகும் . திருவெம்பாவை ஆரம்ப தினம் சில சமயங்களில் கார்த்திகை ஆரம்பமாவதுண்டு. இம் மாதம் தேவர்களுக்கு விடியக்காலமாகையால் சூரிய உதயத்தின் முன் சகல பூசைகளும் முடித்திடல் வேண்டும். இம் மாதத்தில் உதயத்தில் நடைபெறும் பூஜையை தனுர் மாத பூஜை என்று சிறப்பித்து சைவத்திருக்கோவிற் கிரியை என்னும் நூலில் கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களால் கூறப்பட்டுள்ளது. இப் பூசைக்கு நீலோற்பலம் . தாமரை, துளசி, வில்வம் அகியவற்றால் அர்ச்சிக்கப்படல் வேண்டும்.விஷேச நைவேத்தியங்களாக பயற்றம் சாதம், நெய் சாதம், தயிர்சாதம் ஆகிய நிவேதிக்கப்படல் வேண்டும். மார்கழி மாதம் திருவாசக

மாதமாகும். திருவாசகத்தின் பெருமையுணர்ந்த நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் மற்றைய திருமுறைகளுக்கு காப்புக் கட்டி மார்கழி மாதத்தில் திருவாசகம் மட்டும் ஓதும் நியதியை உருவாக்கினார். திருவாசகம் பாடிய மாணிக்கவாசகருக்கு திருவெம்பாவை தினங்களில் பூஜை வழிபாடுகள் நடைபெறும். திருவாதவூரடிகள் புராணம் படித்து பொருளுரைக்கப்படும்.

மார்கழி மாதத்தில் விஷ்ணு ஆலயங்களில் மாதம் முழுவதும் உதயத்தில் ஆண்டாள் அருளிய திருப்பாவை பாடப்படும். விசேஷபூசைகள் நடைபெறும். மகாவிஷ்ணுவுக்குரிய சிறந்த விரதமான சுவர்க்க வாயில் ஏகாதசி விரதமும் இம் மாதத்தில் நடைபெறும். இவ் விரதம் திருவெம்பாவை தினங்களுக்குள் வருவதினால் சைவ, வைணவ சமயங்களில் சமரசத்தை எடுத்துக் காட்டுவதாகும். ஆஞ்சனேய சுவாமி மார்கழி மாத மூல நட்சத்திரத்தில் அவதாரம் செய்தார். மார்கழி மாதம் பீடுடைய மாதமாகும். (பீடு - பெருமை) பீடை பிடித்த மாதமல்ல.

மார்கழி மாதம் சிறந்த மாதமென உறுதிப்படுத்த மற்றய மாதங்களை விட மார்கழி மாதத்தில் மட்டும் வீட்டு முற்றத்தில் மாக்கோலமிடுவார்கள். வீட்டு முற்றத்தில் கோலமிடும் இடத்தை பசுவின் சாணத்தினால் மெழுகி அரிசி மாவினால் அலங்காரகோலமிட வேண்டும். கோலத்தின் மத்தியில் பசுவின் சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைக்க வேண்டும். அதில் அறுகம் புல் குற்றி பத்திர புஷ்பம் சாற்ற வேண்டும். பசுவின் சாணம் நாட்கள் கடக்க பழுதடையும். ஆனால் அறுகம் புல் குற்றினால் பழுதடைய மாட்டாது பசுவின் சாணம் கிடையாத இடங்களில் மஞ்சள் மாவினால் பிள்ளையார் பிடிக்கலாம். மார்கழி மாத்தில் அடுத்த வருட மழையின் அளவை நிதானிக்க கெர்ப்போட்டம் என்னும் நிகழ்வு நடைபெறுவதுண்டு. இது சூரியன் பூராடநட்சத்திரத்தல் சஞ்சரிக்கும் பொழுது இந் நிகழ்வு நடைபெறும். கெர்போட்ட பலனை பஞ்சாங்கத்தில் முப்பத்திரண்டாம் (32) பக்கத்தில் பார்க்கலாம்.

## தை மாதம்

தை மாத உத்தராயண ஆரம்ப மாதமாகும். சூரிய பகவான் இந்த அயனத்தில் தனது பூரண ஒளியைக் கொடுக்கிறார். உத்தராயணத்தில் சுப கருமங்கள் செய்வது மிகவும் சிறப்புடையதாகும்.

## தைப் பொங்கல்

சூரிய பகவான் மகரராசியில் உத்தராடம் இரண்டாம் பாதத்தில் பிரவேசிக்கும் காலமே தை மாதப்பிறப்பாகும். இத் தினத்தில் சூரிய அஸ்தமனத்திற்கு முன் எந் நேரத்திலும் சங்கிராந்தி நிகழ்ந்தாலும் சூரிய உதயத்தில் தான் பொங்கல் செய்ய வேண்டும். இத் தினத்தில் சூரிய உதயத்திறகு முன் நான்கு மணிக்கு முன்னராக எழுந்து வீடு, வாசல் முற்றம் முதலியவற்றை பெருக்கி மஞ்சள் நீரினலும் , பசுவின் சாணத்தினாலும் தூய்மைப் படுத்த வேண்டும்.

பொங்கல் செய்யுமிடத்தை நன்றாக மெழுகி அவ்விடத்தை கோலத்தால் அலங்கரிக்க வேண்டும். பின் வாழையிலையில் நெல் பரப்பி தீபமேற்றி பசுவின் சாணத்தால் விக்கினேஸ்வரப் பெருமானை ஆவாகானம் செய்தல் வேண்டும். சாயா தேவி, பிரதியுட்சாதேவி சமேத சூரிய பகவானை ஆவாகிப்பதற்கு நிறை குடம் வைக்க வேண்டும். மண்ணினால் செய்த அடுப்பை வைத்து உமி பரப்பி இஞ்சி இலை, மஞ்சள் இலை, மாவிலையினால் அலங்கரிக்கப்பட்ட பானைனயை நீர் நிரப்பி பசும் பால் கலந்து விக்கினேஸ்வர பூஜையின் பின் அடுப்பேற்ற வேண்டும். அடுப்பை நன்றாக எரிக்க வேண்டும். எந்தப் பொங்கலும் சரி வீட்டில் பால் காய்ச்சும் பொழுதாயினும் விறகாக பனங்கருக்குமட்டை பாவிக்கப்படாது. பானை பொங்கியவுடன் பயறு கலந்த அரிசியை பொங்கல்ப் பானையை மூன்று தரம் சுற்றிவிட்டு பானையில் இட வேண்டும். அரிசி நன்றாக வெந்தவுடன் தேங்காய் துருவல் , சர்க்கரை, பிளம்ஸ், கஸ்கொட்டை ,ஏலம், சுக்கு, சாதிக்காய், குங்குமப்பூ, ஆகியவற்றை அரைத்த தூள் கடலையளவு பச்சைக் கற்பூரம் ஆகியவற்றை போட்டு கிளறி இறக்கவும். பழம், பாக்கு , வெற்றிலை ஆகியவற்றுடன் வாழையிலை பொங்கல் சாதத்தைப் படைத்து விக்கினேஸ்வரப் பெருமானுக்கு சாயாதேவி, பிரத்தியுட்சாதேவி சமேத சூரியனுக்கும் பூஜைகள் செய்து தோத்திரங்கள் படித்து அத்துடன் சூரியகவஷ்ம் அல்லது கோளறு பதிகம் படித்து பூஜையை நிறைவேற்றலாம்.

## பட்டிப் பொங்கல்

பட்டிப்பொங்கல் பசுக்களை துதி செய்யும் பொங்கலாகும்.பசு மாட்டிலிருந்து பெறப்படும் பால், தயிர், நெய், கோசலம் ,கோமயம், ஆகிய ஐந்துமின்றி ஆலயங்களில் எந்த ஒரு கிரியையும் நடைபெறமாட்டாது.

**தை அமாவாசை**

இந்த அமாவாசை உத்தராயணத்தில் வரும் அமாவாசை தினமாகும். ஆடி அமாவாசை தினத்தைப் போன்று இத்தினத்திற்கும் சமுத்திர தீர்த்தமாடி பிதுர்வாக்கத்தினலுக்கு தில தர்ப்பணம் செய்வது விஷேசமாகும். தை அமாவாசை தினத்தில் அபிராமிபட்டரின் பக்தியை திருக்கடவூரில் உள்ள சிவாலயத்தில் எழுந்தருளி இருக்கும் அபிராமியம்மை தனது திருத்தோட்டினால் உலகுக்கு காட்டினார். அத்திருத்தோட்டின் ஒளி அமாவாசை இருளை அகற்றியது.

**தைப் பூசம்**

முருகப்பொருமானுக்கு விஷேச தினமாகும்.

## மாசி மாதம்

**மாசி மகம்**

இத் தினம் அம்பிகைக்கு விஷேச தினமாகும்.இத் தினத்தில் புண்ணிய நதி, சமுத்திரங்களில் தீர்த்தமாடுவர்கள். வியாழ பகவானும் சந்திரனும் சிங்க இராசியில் இணையும் தினம் மகாமகமாகும். இது பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை இந்த விஷேச தினம் வரும். அனேக ஆலயங்களில் தீர்த்தோற்சவம் நிகழும்.

## பங்குனி மாதம்

இந்த மாதம் வருடாந்த மாதமாகும். இம் மாதத்தில் வரும் திங்கட்கிழமைகளில் அம்பிகை ஆலயங்களில் விஷேச பொங்கல் திருக்குளிர்ச்சி வைபவங்கள் நடைபெறும் பங்குனி மாதத்தில் மட்டுவில் பன்றித்தலைச்சியம்மன் ஆலயம் பூரணப் பொலிவுடன் திகழும். பங்குனி மாத அமாவாசைக்கு மறுதினம் சாந்திர வருடப்பிறப்ப தினமாகும். பங்குனி மாத அந்தத்தில் சுபகருமங்கள் விலக்கப்படும்.

**பங்குனி உத்தரம்**

இத் தினத்தில் பர்வதராஜன் புத்திரியான பார்வதி தேவிக்கும் சிவபெருமானுக்கும் திருமணம் நடைபெற்றது. அனேக ஆலயங்களில் தீர்த்தோற்சவம் நிகழும்.

வீட்டில் நடைபெறும் பூர்வக் கிரியைகள் ஆனாலும் சரி அபரக்கிரிகைகள் ஆனாலும் சரி பஞ்சகவ்வியப் பொருட்களின்றி நடைபெறமாட்டாது. பசுவின் பெருமையை தேவாரத்திருமுறைகளிலும்,பெரியபுராணத்திலும் காணலாம். பெரியபுராணத்தில் சண்டேஸ்வரநாயனார் ஒரு அந்தணச் சிறுவனாக இருந்தும் பசுவில் சகல தெய்வங்களும் ,தேவர்களும் , முனிவர்களும், புனித நதிகளும் இருப்பதை அறிந்து தானும் மாடு மேய்க்கும் பணியில் ஈடுபட்டார். மூலன் என்னும் இடையன் இறந்ததைக்கண்டு சித்தர் ஒருவர் அவனது பசுக்களுக்கு இரங்கிதனது உடலை விட்டு மூலனின் உடலில் பிரவேசித்து திருமூலநாயனார் ஆனார். ஆனாயநாயனார் புல்லாங்குழல் வாசித்து பசுக்களை மகிழ்வித்தார். மனுநீதிகண்ட சோழனின் மகன் தேரைச் செலுத்தம் போது ஓர் பசுக்கன்று தேர்ச்சில்லில் அகப்பட்டு இறந்துவிட்டது. இதனை அறிந்த தாய்ப் பசு மன்னின் அரண்மனையில் கட்டப்பட்டிருக்கும் ஆராய்ச்சி மணியை அடித்தது. இதனை முற்றும் விசாரித்த மன்னன் தாய்ப் பசு படும் கஷ்டத்தை தானும் அனுபவிக்க வேண்டும் என்று சொல்லி மகனை கொல்லும் படி கட்டளையிட்டான்.இக் கூற்றை மறுத்து அமைச்சர் மன்னருக்கு கூறுவதாவது "மன்னரே தாங்கள் கூறுவது நியாயமாகாது பசு வதை புரிந்தோருக்கு அறநூல்களில் பிராயச்சித்தம் கூறப்பட்டுள்ளது. இறந்த பசுவின் தோலைப் போர்த்து பசுமந்தையில் வசிக்க வேண்டும். கோசலத்தால் நீராடவேண்டும். பசுக்களை காக்க வேண்டும் பசுக்கள் வெயிலில் ஆனாலும் மழையில் ஆனாலும் கஷ்டப்படும் பொழுது தானும் கஷ்டப்பட வேண்டும். என்றும் பட்டினி கிடந்து காய்கனிகளை உட்கொண்டு பன்னிரண்டு ஆண்டு இருக்க வேண்டும்" என்று மன்னனுக்கு கூறி முடித்தான் என்று விஜஶ்ரீ கார்த்திகை மாதம் (1946)வெளிவந்த திருமுருக கிருபானந்தவாரியாரின் திருப்புகழமிர்தம் என்னும் மாத வெளியீட்டில் மனுநீதிகண்டபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இப்படிப் பெருமை வாய்ந்த பசுவுக்கு தைப்பொங்கல் தினத்தக்கு மறுதினம் மாலையில் தைப்பொங்கலுக்கு செய்தது போல ஆயுத்தம் செய்து பொங்கவேண்டும்.இப் பொங்கலில் விநாயகப் பெருமானுக்கும், பசுவுக்கும் விஷேச பூஜை செய்து பொங்கலை நிறைவு செய்யலாம். இத்தினத்தில் விநாயகப் பெருமானுக்கு பொங்கல் வழிபாடு செய்து மார்கழி மாதப்பிள்ளையாரை நீர் நிலைகளில் சேர்ப்பார்கள்.

**காரடையா நோன்பு**

இவ் விரதம் பெண்ணின் மாங்கலியத்தை காக்கும் விரதமாகும். சத்தியவானின் ஆயுள் முடியும் நேரத்தை நாரதர் மூலம் அறிந்து அவரின் அறிவுரையின்படி அம்பிகைக்கு மூன்று நாள் பூஜை செய்ததின் பலனாகவும் பதி பக்தியின் பலனாகவும் சாவித்திரியின் மாங்கல்யம் பாதுகாக்கப் பட்டது. சத்தியவானின் உயிரைப் பறித்த யமதருமராசன் சாவித்திரியின் கற்பின் பெருமை யை உணர்ந்து அரிய பெரிய வரங்களைக் கொடுத்து ஆசீர்வதித்தான்

இவ் விரத தினம் மாசி மாதமும் பங்குனி மாதமும் சேரும் தினத்தில் வரும் இத்தினத்திற்கு முன்தினத்திற்கு முன்தினம் வீட்டைத் தூய்மைப்படுத்தி வரலட்சுமி விரத தினத்திற்கு செய்தது போல தீபமேற்றி மஞ்சள் பிள்ளையார் பிடித்தது கும்பம் வைத்து கும்பத்துக்கு பட்டு சாத்த வேண்டும். வெற்றிலை, பாக்கு, பழம் இனிய பலகாரம் வைத்து தாலிச்சரட்டையும் சாற்றி அம்பிகைக்கு பூஜை செய்ய வேுண்டும். மூன்றாம் நாள் கார் அரிசியை மாவாக்கி துவரை,தேங்காய், சர்க்கரை, உப்பு ஆகியவற்றைக் கலந்து அடையாக தட்டி அவிக்க வேுண்டும். இதனை நைவேத்தியமாக நிவேதிக்க வேண்டும்.சிறப்பு பூசை செய்து திருமுறைகள், சக்திகவஷம், அபிராமிஅந்தாதி படித்து வழிபாட்டை நிவர்த்தி செய்யலாம். விபூதி, சந்தனம், குங்குமதிலகமிட்டு தாலியை பக்தியுடன் அணிய வேண்டும். இவ் விரதம் மூன்று நாளும் ஒரு நேர உணவை மட்டும் அருந்தலாம்.

– சுபம்–

# நன்றி நவிலல்



" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய் நன்றி கொன்ற மகற்கு"

- கடந்த 05.08.2020 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் நோயுற்றிருந்த வேளை அவரைக் கண்ணும் கருத்துமாக கவனித்துதவிய யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர், தாதியர், பரிசாரகர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

- மேலும் அவருக்கு இயன்மருத்துவ சிகிற்சை அளித்து பராமரித்த மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையினருக்கும் எமது நன்றியை தெரிவிக்கின்றோம்.

- அன்னார் வீட்டில் நோயுற்றிருந்த வேளை பராமரிக்க உதவியோருக்கும் பல்வேறு உதவிகளை புரிந்த உறவினர் நண்பர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

- அன்னார் இறந்த செய்தி கேட்டு வந்துதவிய நல்லுள்ளங்களுக்கும் இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல உதவிகளை புரிந்தவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.


- இந்நூலில் சைவ விரதங்கள் மற்றும் கௌரிகாப்பு ஆகிய விடயங்களை தந்துதவிய சோதிட பரிபாலன சபையினருக்கு இத்தாழ் பணிவுடன் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

" காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"



இங்ஙனம்
அமரர் திரு. சிற்சபேசலிங்கம்
குடும்பத்தினர்

# வழித்தோன்றல்



தம்பிப்பிள்ளை
+
பரமேஸ்வரி
லோகேஸ்வரி
ஜெகதீஸ்வரி
ஜனகேஸ்வரி
கணநாதலிங்கம்
குகனேஸ்வரி
சிற்சபேசலிங்கம்
கௌரீஸ்வரி
ஈஸ்வரலிங்கம்
சங்கரப்பிள்ளை
+
இலக்குமிப்பிள்ளை
வள்ளிநாயகி
மரகதவல்லி
செல்வரத்தினம்
குமாரசுவாமி
சிவமணி
தவமணி
கனகமணி
மங்கையர்க்கரசி
காயத்ரி + தனஞ்செயன்
அபிஜித்
ஸ்ரீகிருஸ்ணிகா
சர்வாங்கன்



அருட்சோதித் தெய்வம்எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரும் மறைகளெலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளுந் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

Printed @ Jeyasri
34, Brown Road,
Jaffna,